194
2 ops
Accn. No: 110000
No of Pages: 84
DEC 1944

ஓம்

ஸ்ரீ அருணாசல புராணவசனமென்னும்

# திருவண்ணாமலை பராக்கிரமம்



கோரக்கோட்டை ப. வடிவேலு செட்டியார் இயற்றியதை,

சென்[illegible]டி, பூ. ரா. அப்பாதுரை முதலியாரவர்களால்,

பதிப்பிக்கப்பட்டது.

[illegible]] 1944 [விலை அணா 10.

ARCHIVES LIBRARY MADRAS

# முகவுரை

---

நிலவுல கதன்பா னிரம்பிடு நூல்கள்
பலவுள வெனினும் பயனில வென்றே
யறம்பொரு ளின்ப மழிவிலா வீட்டை
யுறமொடு தந்திடு முத்தம நன்னூ
லெதுவென் றெண்ணி லெல்லாம் வல்ல
பதியென் றேதும் பார்ப்பதி நாயகர்
சிவபெரு மானைச் சிந்திக் கும்நா
லென்னுமோ ரெண்ண மென்னிடை கெழுமி
யதுவோ வளப்பி லளவிலாப் பெரிது
மதியன் மதித்திட மாளா தென்றே
னென்மனத் தாசை யென்வழி கேளே
ளென்னவு மதன்வழி யிசைந்தென் னினைவிற்
கருதிய வெல்லாங் களிப்புடன் றருவார்
வருவா ரென்முனர் வழங்குவா ரென்றே
திருமால் பிரமன் றேடிக் காணாப்
பெருமான் றிருவண்ணாமலைப் பெரிய
நற்சரி தத்தை நானும் பெரியோர்
கற்பனை வழியே கனிவா யெழுதி
திருவண் ணாமலை பராக்கிரம மென்ற
வரும்பெயர் சூட்டின னறிவிற்பொதிந்தோர்
காணிற் குற்றங் கணக்கிலா திவரும்
கோணா மனதாய்க் குறைகளைப் போக்கி
யேற்றுக் கொள்வா ரென்றக் கருத்தாற்
போற்றின னருணைப் புண்ணிய முதலே.

---

3:38.2113.TV

ஓம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# ஸ்ரீ அருணாசல பராக்கிரமம் என்னும்,

# திருவண்ணாமலை பராக்கிரமம்.

11000

## விநாயகர் காப்பு

### கலி விருத்தம்

திருவினண்பன்றிசைமுகன்றேடமன்
மருவுஞானமகிழ்ச்சிதன்னையகன்
பருவதத்துயர்பண்பதைச்சொற்றிட
வருவர்மாமுகவள்ளலெம்முள்ளமே.

## கடவுள் வணக்கம்

### அண்ணாமலை அருணாசலேஸ்வரர் துதி

அறுசீரடியாசிரிய விருத்தங்கள்

மண்ணீசர் விண்ணீசர் மதியீசர் நீரீசர்
மறையி லாடுந்
தண்ணீசர் தகையீசர் புள்ளீசர் மலரீசர்
தங்கட் கெட்டாப்
பெண்ணீசர் பரமசிவப் பேரீசர் மாதவத்தோர்
பேசு மூன்று
கண்ணீச ரருணைகிரி வாழீசர் மலரடியைக்
கருத்துள் வைப்பாம்.

---

### உண்ணாமுலையம்மை துதி

திருமணியைச் செம்மணியைத் திகழ்மணியைத் தேவர் குழாஅஞ்
சிந்தனைச் செய்
யிருமணியைக் குணமணியை யெழின்மணியை யிணையணியை
யிம்மை மற்றுந்
தருமணியைத் தகைமணியைத் தயைமணியைத் தனிமணியின்
ரூர மாஞ்சி
ரருமணியைப் பெண்மணியை யருணையுண்ணா முலைமணியை
யகத்துள் வைப்பாம்.

## யானைத்திறைகொண்ட விநாயகர் துதி

மானையொரு புடையமர்த்தி யெண்ணிறந்த சராசரங்கண்
மகிழ்வா யீன்ற
கோனைதிரு வலமாய்வந் தடிபணிந்து மாங்கனிக்கைக்
கொண்ட ஞானத்
தேனையருள் நற்பதவி தருவானை யருணைதனிற்
சிலக்கு மாதி
யானைதிறை கொண்டமத வானைமுகத் தண்ணலடி
யகத்துள் வைப்பாம்.

---

## சுப்பிரமணியர் துதி

தவஞானஞ் சித்திபுத்தி முத்தமிழும் பலவாமுந்
தன்னைக் காணல்
நவஞானங் கிளையுடனே தாணிதனில் வாழநனி
நாளுந் தந்து
பவஞானந் தனையொழித்து மனதினிலெண்ணிய வெண்ணம்
பாலிக் கின்ற
சிவஞானச் சுப்பிரமண் ணியக்கடவு ளடிதினமுஞ்
சிந்தை சேர்ப்பாம்.

---

## சரஸ்வதி துதி

வான்மதிக்குந் தேவர்களிற் சிறந்தொழுகு பரமசிவ
வள்ள றன்னைத்
தேன்மனதா யனுதினமுஞ் செந்தமிழாற் பன்னிமுந்தை
தேவர் கோனு
மான்முதலோர் களிக்கவென்ற னெண்ணமெலாம் பெருகதமிழ்
மகிழ்வா யீயும்
நான்முகவ னுவிலமர் மலர்மகடா ளெஞ்ஞான்றும்
நவின்று வாழ்வாம்.

---

ஓம்

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## திருக்கைலாசப் புகழ்ச்சி

சீருலாவிய நான்மறைச்சூட்டில் நடனமிடும் எல்லாம்வல்ல பரமசிவன் வீற்றிருப்பது திருக்கைலாயம். அது திருநீறுபோன்ற வெள்ளிய நிறமாக இமயகிரியின் பக்கத்திலிருக்கின்றது. இந்திரலோகம், பிரமலோகம், விஷ்ணுலோக மெல்லாம் அழியுங்காலத்திலும் அழியாமல் நிலை பெற்றிருக்கப்பட்டது. படிக நிறம்போலும், புண்ணியமே ஒரு சிலம்பாக திரண்டதுபோலும், சிவபெருமான் அளிக்கும் நாற் பதவியில் ஓர்ப்பதவியாகிய சாரூபம்போலும் இருக்கிறது. அங்கு இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்கள் துதிக்கின்ற ஓசையும், அரம்பை மாதர்கள் பரதநாட்டிய வோசையும், அவர்கள் பாடும் பாடலினோசையும், பிளிறிடும் யானைகளி னோசையும், நீங்காது ஓடும் அருவியினோசையும், வேததுந்துபியின் முழக்க வோசையும், அமரர், சித்தர், அசுரர், தைத்திரியர், கருடர், காந்தருவர், கின்னரர், நிருதர், கிம்புருடர், இயக்கர், விஞ்சையர், பூதர், பைசாசர், அந்தரர், முனிவர், உரகர், ஆகாயவாசிகள், போகபூமியர் என்னும் பதினெண் கணங்களுந் துதிக்கின்ற ஓசை முதலியவைகள் இடைவிடா தொலிக்கும். அம்மலையின் உச்சியில் வைரத் தூண்கள் நிறுத்தியதாயும், நவமணிகளால் இழைக்கப்பட்டதும், கோடானுகோடி சூரியப்பிரகாசத்தையும் மங்கச்செய்து நிகரற்ற சிவப்பிரகாசமாக விளங்குகின்ற ஒரு திருக்கோயிலிருக்கும்.

## பரமசிவன் திருக்கோலம்

இத்தகைய அளவிறந்த சிறப்புடைய கைலாசகிரி சிகரக் கோயிலில், இந்திரன், பிரமன், விஷ்ணு முதலிய முப்பத்து முக்கோடி தேவர்கள் நாற்பத்தெண்ணாயிர மகரிஷிகள் அஞ்சலியஸ்தராக "ஹர ஹர சிவசிவ மஹாதேவா!" என்று துதிக்கவும், பூமாலை, பாமாலை, அன்புமாலை சாற்றவும், ஆதியாயும், அந்தமாயும், ஆதியந்தமில்லாத சுயம்புவாயும், அருவமாயும், உருவமாயும், அருவுருவாயும், ஞானமாயும், வேதமாயும், சிருஷ்டி-திதி-சங்காரம்-திரோபவம்-அனுக்கிரகம் என்னும் ஐந்தொழிற் பஞ்ச மூர்த்தியாயும், ஐஸ்வரியம்-வீரியம்-பலம்-ஞானம்-வைராக்கியம்-சக்தி என்னும் அறுகுணப் பகவானை

யும், அகண்ட பரிபூரண சச்சிதானந்தஸ்வரூபியாயுமுள்ள பரமசிவன் ஆன்மாக்களுக்கு அருட்செய்யும் பொருட்டு, சத்திய காரியமாயுள்ள சரீரத்தை யெடுத்து, தமது அருட்சத்தியாகிய பார்வதியோடு கங்கைதங்கு சடையில் சந்திரன்-திரிநேத்திரம்-காளகண்டம்-சதுர்ப்புஜம், மான்மழு, இடையில் புலித்தோல்-கரியுரிபோர்வை-எனும்பு-அரவ ஆபரணம்-தேக முழுவதும் வெள்ளிய திருநீறு முதலியவைகள் பொலிய ரிஷப வாகனத்தின்மீது வீற்றிருப்பார்.

## திருநந்திதேவர் கொலுவு

இந்தச் சர்வசக்தியுக்தரான பரமசிவனது கட்டளையைச் செலுத்திக்கொண்டு கைலாயகிரியைக் காக்கின்றவர் திருநந்திதேவர். அவருடைய திரேகத்தில் சிவச்சின்னங்களும், சிவத்தியானமுமே அணிகலமாகத் துலங்கும். அவர் கையில் ஒரு பிறம்பைத் தாங்கிக் கொண்டு, அம்மலையில் பரமசிவனைத் தொழவரும் இந்திரன் முதலாகிய தேவர்கள் ஒருவர் மீது ஒருவர் நெருங்கி சந்நிதி மறைத்ததால் அவர்களை சந்நிதிவிட்டு விலகி நில்லுங்கள்! சந்நிதிவிட்டு விலகி நில்லுங்கள்!! என்று தனது கைப்பிறம்பால் அவர்களுடைய ரத்தின கிரீடத்தின்மீதடித்து, இருபுறமாக ஒதுக்கி, இடுக்கணின்றி வணங்கச்செய்து, அவ்வடியால் தெறித்து சிந்தின நவமணிகள் கனகமலையாய்க் குவியும்படி திருவாணைபுரிந்து வருவார்.

இந்த நந்திதேவர் ஒருக்கால், ஒப்பற்ற கைலாசகிரியின் ஒரு புறத்தில், சந்திரகாந்தத்தகடுபரப்பிய மண்டபத்துள், முத்துகளாலிழைத்த சிங்காதனத்தின்மீதிருந்து இரத்தினங்கள் பதித்த பாதக்குறட்டின்மீது தமது தாமரை மலர் போன்ற பாதங்களை வைத்துக் கொண்டு, குற்சர்-ரோமசர்-குமுதர்-குமுதாட்சர்-சகடாயர்-அகத்தியர்-வற்சர்-வைசம்பாயன்-கஞ்சி-வியாக்கிரபாதர்-வாமதேவர்-சனகர்-சனற்குமாரர்-வியாசர்-மதங்கர்-பதஞ்சலி-மார்க்கண்டர் முதலாகிய முனிவர்களுக்கு வழக்கம்போல வேதசாஸ்திர பிரசங்கங்களையருளிச்செய்துக் கொண்டிருந்தார்.

அப்போது மார்க்கண்டேயமுனிவர் எழுந்து நந்தியெம்பெருமானுக்குச் சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ் செய்து, சுவாமி! முடிவில்லாத முதற்கடவுளாகிய பரமசிவன் கைலையில் முயலகன் முதுகில் வலத்தாளை யூன்றிக்கொண்டு, ஆணவம்-மாயை-காமியம் ஆகிய மும்மலங்களை யொழித்தமுனிவர்களுக்கு நான்குவேத ரகசியங்களை அருளிச்செய்தது போன்று, உயிர்களானவை உலகின்கண் பிறப்பதுவும், இறப்பதுவும், இதற்குரிய காரணமாகிய நல்வினை தீவினைகளையும், எங்களுக்கு நன்கு விளங்கும்படி மனமுவந்துவெளியிட்ட ஒரு தனிமுதலே! இனி யாங்கள் அழிவில்லாத ஐஸ்வரிய

மாகிய மோக்ஷவீட்டைப் பெறுவதற்கு தகுதியாகிய வழியைக் கிருபைசெய்தருளவேண்டுமென்று விண்ணப்பிக்க, அம்மொழியைக் கேட்ட நந்தியெம்பெருமான் மிக்க கிருபா நோக்கமுடையவராகி தம் மெதிரில் அஞ்சலியஸ்தராக நிற்கும் மார்க்கண்டேயரைக் கடாக்ஷித்தருளி, ஓ மார்க்கண்டேயரே! உமது எண்ணத்தின் படியே சொல்லுகின்றேன் கேளும் என்று சொல்லத்தொடங்கினர்.

## நதிகள் விசேடம்.

அழகுபொருந்திய பூவுலகின்கண் கம்பநதி-கும்பநதி-காவேரி-கோதாவரி-கிருஷ்ணவேணி-பம்பைநதி-வேதவதி-சரயுநதி-கங்கா நதி-தாமிரபரணி-பொன்முகி-யமுனாநதி-நர்மதாநதி-சோணநதி யென்று சொல்லப்பட்ட அனேகநதிகளுண்டு. அந்நதிகள் தம்பால் ஸ்நானஞ் செய்தவர்களுடைய பாபங்களைப் போக்கும்.

## சிவஸ்தலங்களின் விசேடம்.

இன்னும் காசியென்கிற ஒரு சிறந்த ஸ்தலமிருக்கின்றது; அது இந்த கைலையைப் பார்க்கிலும் மிக்க விசேடப் பட்டது. அந்த காசியின்கண் வருங் கங்காப்பிரவாகமானது தன்னிடத்தில் ஸ்நானஞ் செய்தவர்களுக்கு நிலைபெற்ற மோக்ஷவீட்டைப் பெறுவதற்கு வழிகாட்டும். தவிர அவ்வூரில் மரம், மிருகம், மனிதர் முதலிய எந்த வுயிர்களும் தேகத்தைவிட்டு உயிர் நீங்கினால் அவைகட்கு பரமசிவனது தாரகப்பிரமோபதேசம் செவியிற் சேர்தலாலே சிவ சாரூப்பிய பதவியைச் சேர்ந்து இன்புற்றிருக்கலாம்.

இதுவுமன்றி, விஷ்ணுவுக்கு உயிர்ப்பிச்சை வேண்டு இலக்ஷ்மீ யானவள் தவஞ்செய்தது திருவாரூர். விராட்புருஷனுடைய இருதயஸ்தலமும், அதிலுள்ள கனகசபையில் நடனமிடும் ஆனந்தத் தாண்டவ பரமசிவன் மூர்த்திகரத்தில் ஆயிரத்திலொன்றுதான் இந்தக் கைலையில் இருக்கப்பெற்றதும், அவ்வரிய தாண்டவ மூர்த்தியை தரிசனஞ்செய்தவர்கள் பிரம்மாவும் விஷ்ணுவும் அடைவதற்கரியமுத்தியை யடைவார்களென் றேற்பட்டதும், அத்தலத்தின் சிறப்பை நாம் கூறுவதற்கு சக்தியற்றவர்களென்று நினைக்கக்கூடியதும் சிதம்பரம். எருமைமுகம்படைத்த மகிடாசூரனை வென்ற பார்வதியை பரமசிவன் தனது இடபாகத்திலமரச்செய்துக் கொண்டதை பூவுலக சேதனர்களுக்குத் தெரிவிப்பது போன்று எருமையின் முகம்போல் விளங்கப்பட்டதும், மூவுலகத்தினருக்கும் இம்மையிடர்-மறுமையிடர்-ஞானமில்லாததினால் நேரிடுமிடர் முதலியவைகளைத் தீர்க்கும் முத்தி ஸ்தானமுமாகியது திருக்கேதாரம். மலையின் மீது பிரமராம் பிகையுடனே பரமசிவன் வீற்றிருப்பதும், பிரம

தேவன் இரண்டுவேளைகளிலும் பணிந்து பெற்றவரத்தினால் தேவருலகமுதல் எல்லாவுலகையும் படைத்தானென் றுரைப்பதும், திருப்பதி வெங்கடாஜலபதியும் மற்ற தேவர்களும் அந்த ஸ்தலத்தில் சுரமாகவும் அசரமாகவும் பிறந்திருப்பதற்கு தவஞ்செய்ய விரும்புவதும், எத்தலமும் அத்தலத்திற்கு நிக்ருரைக்கக் கூடாதனமையானதும் மல்லிகார்ச்சுனம். கண்ணைப் பிடுங்கிவைத்த கண்ணப்ப சுவாமிகளது கால்செருப்பை யானந்த பரவசமாகத்தாங்கி அவருக்கு ஆறுநாளில் முத்தியைக்கொடுத்தருளிய லிங்கசொரூபமாயும், மஹாவிஷ்ணு திருவேங்கிடமலையில் நின்றுக்கொண்டு சதாதரிசனஞ் செய்வதற்கு எதிரில் மலையுருவாகவும் விளங்கப்பட்டது திருக்காளத்தி. உலகத்திலுள்ளவர்கள் பிழைக்கும்பொருட்டு முப்பத்திரண்டு அறங்களைப் புரிந்த காமாக்ஷியம்மையோடு ஏகாம்பரேசர் எழுந்தருளியிருப்பது காஞ்சிபுரம். ஒரு ஆதிசைவப் பிராமணப்பிள்ளைசெய்யும் அபிஷேகத்திற்கு சிரசை வளைத்துத் தந்தவரும், பார்வதியும், பிரம்மாவும், விஷ்ணுவும், கரனும் பூசிக்கப்பெற்றவருமாகிய மார்க்கலிங்கேசுரர் பிரகாசிக்கப்பட்டது விரிஞ்சிபுரம். எக்காலும் பெருகிக்கொண்டேயிருக்கின்ற காவிரி நதிக்கரையின் கண் உள்ளதுகள் சீர்காழி; திருவையாறு; திருவிடைமருதூர்; கும்பகோணம்; திருவானைக்காவல்; திரிசிரபுரம்; இரத்தினகிரி முதலிய ஸ்தலங்கள். வைகையாற்றுக் கரையின்கண் சோமசுந்தரக் கடவுள் அறுபத்துநான்கு திருவிளையாடல் புரிந்தது மதுரை. இராவணனைக்கொன்றபாபம் ஒழிவதற்கு ராமர் லிங்கபூசை செய்து அப்பாவந் தீர்த்துக்கொண்டது. இராமேச்சுரம். அத்தகைய சிறப்பினையுடைய ஸ்தலங்களில் யாவரேனும் பிறக்கினும், இறக்கினும், போய்தரிசிக்கினும், சிவபெருமானுக்கு அபிஷேகஞ் செய்யினும் திரவியங்களைச் செலவிட்டு சிவாலயங்களைக் கட்டுவிக்கினும், பூஞ்சோலைகளை வைக்கினும் அவர்களுக்கு இம்மையில் சகல ஐஸ்வரியங்களைத் தருவதுடன் மறுமையில் தடையின்றி உத்தமமாகிய மோக்ஷம் எளிதில் சித்திக்கும்,

என்றிவ்வாறு நந்தியெம்பெருமான் அருளிச்செய்ய, அதைக் கேட்ட மார்க்கண்டேயர், சுவாமி! தேவரீர் கூறிய வண்ணம் நதிகள்தோறுந் தீர்த்தமாடவும், ஆலயங்கள் தோறும் வந்தனை வழிபாடு முதலியவைகள் செய்யவும் தேவர்-சித்தர்-முனிவர்களுக்கும் முடிவது கஷ்டம். ஆனபடியால், சிறிதுநாளை வாழ்நாளாகவுடைய மனிதர்களாற் செய்ய இயலுமோ? அப்படி ஒருக்கால் இயன்றூலும் மிருகம்-பக்ஷி-மரம் முதலியவைகட்கு முடியாதே. ஆனதுபற்றி தாங்கள் மொழிந்த நதிகள்தோறும், சிவாலயங்கள்தோறும் அனேககாலமாக மூழ்கி வந்தனைவழிபாடுகளைச் செய்து பெறும் சிவஞானத்தை கஷ்டமின்றி சிறிது நேரத்திலேயே பெற்றுக்கொள்ளக் கூடியதாயும், கை கால் முதலிய வுறுப்பில்லாதார்வர்கள், அறி

வில்லாதவர்கள், நரகத்தில் விழத்தக்க மகாபாபிகள், மிருகம், பக்ஷி முதலிய எல்லா ஜீவராசிகட்கும் எளிதில் ஞானத்தை யளிக்கக் கூடியதுமான ஒரு ஸ்தலத்தை யருளிச்செய்ய வேண்டுமென்று வேண்டினர். அருகிற் சூழ்ந்திருந்த மற்றமுனிவர்களும் எழுந்து நந்தியெம்பெருமானை ஸ்தோத்தரித்து அவரது திவ்ய பாதங்களை ஸ்பரிசித்து மார்க்கண்டர் வேண்டியது போலவே வேண்டினர்கள்.

## திருவண்ணுமலை ஸ்தலச்சிறப்பு

உடனே நந்திகேசுரர் அம்முனிவர்களுடைய வேண்டுகோளுக் கிரங்கிய கருணை மூர்த்தியாகி "ஐயா முனிவர்களே! உங்களுடைய கோரிக்கைக்கு இணங்கிய ஸ்தலமொன்றிருக்கிறது. அதனைப் புகலுகின்றேன் இருங்கள்" என்று அவர்களைக் கையமர்த்தி, சாட்சாத் பரமசிவமே மலைரூபமாகிய அருணகிரியை மனதினிடமாக நினைத்து ஆனந்தபரவசமானர். அப்போது அவர் திரேகமெல்லாம் மயிர்க்குச்செரிய நடுநடுங்கியது; இரண்டு விழிகளிலும் அருவியாற் றைப்போல் ஆனந்த பாஷ்பம் பெருகி வழிந்துக் கொண்டிருந்தது; அழகிய கரங்களிரண்டுங் குவிந்திருந்தது; மொழிகள் தடுமாறினது; நெடுநேரம் ஞாபகமில்லாமல் தன்னை மறந்து அருணையிலெழுந்தரு ளிய ஆதியே! எம்மை யாட்கொண்டருளிய ஜோதியே!! எனப் பலவாறுய் ஸ்தோத்திரஞ் செய்துக் கொண்டிருந்தார்.

பிறகு சிறிது நேரஞ் சென்றபின் சிவானந்தலகரி தெளிந்து மார்க்கண்டேயரை நோக்கி, ஐயா தவசிரேஷ்டரே! நீங்கள் கருதிய வாறு உண்மையாக மோக்ஷத்தைத் தரத்தக்க ஸ்தலம் பூவுலகின் கண் ஒன்றுண்டு. அந்த ஸ்தலத்திற்கு அனேக திருநாமங்களுண்டு. அவை முழுதுங் கூறுவதற்கு யான் அவ்வளவு சக்தியில்லாதவனுகை யால், சிறிது தெரிந்தமாத்திர மியம்புகின்றேன். அதற்கு கௌரி நகரம், தேசு நகரம், அருணுசலம், சிவலோக நகரம், வாயு நகரம், முத்தி நகரம், ஞான நகரம், தலேச்சுரம், சுத்த நகரம், தட்சண கைலாசம், என்கிற அளவிலாத திருநாமம் புனையப் பெற்றுள்ளன. தவிர சத்தபுரிகளென்கிற அயோத்தி, மதுரை, கயா, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை என்கிற எல்லா ஸ்தலங்களையும் ஓர் தட்டிலும், அந்த அருணுசலத்தை யோர் தட்டிலும் வைத்து நிறுக்க, அவ்வருணு சலமே அந்த ஸ்தலங்களுக்கெல்லாம் அதிக கனத்தை யுடையதா யிருந்து பிரகாசிக்கும்.

அந்த ஸ்தலம் இன்றைக்கு புதிதாக வுண்டாயினதல்ல; பூவுலகம், மேலுலகம், ஆகாயம் எந்நாளி லுண்டாயினதோ அந்நாளி லேயே யுண்டாயினது. இன்னும் வேதத்தின் உச்சியில் நீங்காமற் படியுள்ளது. அந்த ஸ்தல தென்திக்கில் என்றும் கெடுதலின்றி

நிலைபெற்று, பிர்மாண்ட கோளகையை மூடுறுவும்படி ஒரு பெரிய மலையுண்டு; அந்த மலைதான் திருவண்ணாமலை. எல்லா ஸ்தலங்களி லும் பிரகாசிப்பது ஆரிஷலிங்கம், ராக்ஷசலிங்கம், ஆசுரலிங்கம், தைவதலிங்கம், மானிடலிங்கம் என்றால், இந்த ஸ்தலத்தில் மலையே லிங்கமாகவும், அது கிரேதாயுகத்தில் சிவந்த அக்கினி மலையாகவும், திரேதா யுகத்தில் மாணிக்க மலையாகவும், துவாபரயுகத்தில் பொன் மலையாகவும், கலியுகத்தில் கல்மலையாகவுந் திருவுருக்கொண்டு பிரகா சிக்கும்.

இன்னும் யுகாந்தகாலத்தில் பெய்யும் சப்த மேகங்கள் தமக் குரிய ஏழு என்கிற கணக்கின்றி ஒவ்வொன்றுங் கோடி கோடியாகி, ஒவ்வொரு துளியும் பனைமரம் போன்ற பருமனாக ஆயிரம் வருஷம் பெய்தாலும், அவையெல்லாம் அம்மலையில் ஒரு சிறிய அருவியைப் போன்று அடங்குமேயன்றி, புறத்தில் வரமாட்டாது.

அந்த மலையை, மஹாவிஷ்ணு பன்றி வடிவமாகி அடியையும், பிரமதேவன் அன்னவடிவமாகி முடியையுந் தேடிக் காணாதவர்களாய், தான் தான் பிரமமென்று இறுமாப்படைந்த கர்வமடங்கி வருந்தி னார்களென்றால், அதன் பெருமையை நம்மால் சொல்ல வியலுமோ? இன்னும் ஆகாய கங்கை நம்மிலும் விசேடப்பட்டதென்று துதி செய்கின்ற அம்மலையின் சுனை நீரை யுண்ணும்பொருட்டு அருணன் தேரிற் பூட்டிய புரவியானது ஏறி நடக்கும். வெள்ளிய மேகங்கள் அம்மலையின் அடிவாரத்தில் தங்கினால், யாவராலும் சிந்திக்கப்பட்ட கைலைமலைமேல் திருவண்ணாமலை யிருப்பதுபோலொக்கும். கார்த் திகை மாசத்தில் அம்மலைமேல் கிர்த்திகா தீபமேற்றினால் பூதேவியின் மகுடத்திற் பதித்த ரத்தினத்தை யொக்கும். பரமசிவனே அம்மலை யானதால் இமயபர்வத ராஜனுக்கு நமது மருமகன் நம்மினமன்றி வேறு இனமாக இருக்கின்றானென்ற மயக்கமொழிந்து, இன்றுதான் நம் மருமகனும் நம்மினமாகினா னென்று மனங்களிக்கும்படி யம்மலை விளங்கும். சந்திர சூரியர்கள் மேருவை வலம் வருவதைப் போன்று திருப் பிரதக்ஷணம் செய்வார்கள். இப்பொழுது உங்க ளுக்கு இதனைச் சொல்லுவது; அதனைச் சொல்லவேண்டுமென்ற நினைவு கொண்ட பக்தியென்பதே சொல்லத் துடங்கினதே யன்றி, எனது சிற்றறிவினாற் சொல்லக் கூடுமானதன்று.

அந்த மலைக்கு அடுத்த கீழ்பாரிசமான அற்கமலையில் தேவேந் திரனும், தென்பாரிசமான தெய்வமலையில் யமனும், மேல்பாரிச மான தண்டமலையில் வருணனும், வடபாரிசமான சூலமலையில் குபேரனும், மற்ற நான்கு திக்குகளில் வாயு, அக்கினி, ஈசானன், நிருதியும் அவைகளைச் சுற்றி யிருக்கிற மலைகளிலெல்லாம் தேவர்க

ளும், சித்தர்களும், அஷ்ட வசுக்களும் தங்கள் தங்களுடைய சிவந்த கரங்களைக் கூப்பி அந்த திருவண்ணாமலையை வணங்குவார்கள்.

தனக்கு மற்றொன்றை நிகர் சொல்லக்கூடாமல் தன்னையே தனக்கு ஒப்பு சொல்லப்பட்ட திருவண்ணாமலை ஸ்தலத்தில், பூவுலக மாதாவாகிய பார்வதிதேவி அரிய தவம்புரிந்து பரமசிவனது இட பாகத்தைப் பெற்றாள். பிரமன், விஷ்ணு இருவரும் தங்களுடைய கர்வம் நீங்கினார்களாகி வரங்களைப் பெற்றார்கள். சந்திரவம்சகுல திலகனாகிய வச்சிராங்கத பாண்டியன் அந்த மலையை பிரதக்ஷணம் வந்ததினாலே தன்னுடைய பாவத்தை நீக்கியவனானான். சேர குலாதிபனாகிய வல்லாள மகாராஜன் புத்திரகலி நீங்கி முத்தியை யடைந்தான். கலாதரன், காந்திசாலி யிருவரும் அந்த ஸ்தலத்தை வலம் வந்து மோக்ஷத்தை யடைந்தார்கள். இன்னும் அன்று தொட்டு இன்று வரையில் அனேகம்பேர் நினைத்தும், ஸ்தோத்திரம் செய்தும், கேள்விப்பட்டும், தரிசனஞ் செய்தும், கால்களாலே பிரதக்ஷணஞ் செய்தும், அதில் நீதி பொருந்திய வேதமார்க்கங்களை யனுசரித்தும், தீர்த்தங்களிலே முழுகியும், தருமங்களைச் செய்தும், சோதி சொரூபமாகிய சிவனைத் தொழுதும், திருப்பணி செய்தும் குற்றமற்ற மோக்ஷத்தை யடையப்பெற்றார்கள்.

அந்த திருவண்ணாமலை ஸ்தலமானது தமிழ் நாட்டின் கண்ணிருக்கிறது. அப்பதிக்கு வலப்பக்கத்தில் வருகிற பெண்ணையாறு இடைகலையும், இடப்பக்கத்தில் வருகிற செய்யாறு பிங்கலையும், கமலைநதி சுழிமுனையுமாம். அந்த நதிகளில் ஸ்நானஞ் செய்தால் ஒன்றுக்கு ஆயிரம் பங்கு பலன் வரும். அத்தலத்தில் முப்பத்து முக்கோடி தேவர்களும், முனிவர்களும் தவஞ்செய்வார்கள். சிதம்பரத்தை தரிசனஞ் செய்தாலும், காசியிலே தேகத்தை விட்டாலும், திருவாரூரில் பிறந்தாலும் முத்தியடையலாம். அருணாசலமென்னும் திருவண்ணாமலையை மாத்திரம் நினைத்தாலே முத்தியை யடையலாம். ஆனபடியால், அந்த திருவண்ணாமலை ஸ்தலத்தைப் போன்ற வேறு ஸ்தலம், மலை, மூன்று லோகத்திலுமில்லை.

இவ்வாறு நந்திகேசுரர் சொல்லக்கேட்ட மார்க்கண்டேயர் இருதய மகிழ்ந்தார். அதில் தனக்கு ஒருவாறு சந்தேகந் தோன்றியதால், நந்திகேசுரரை வணங்கி, எங்களது பிறவித் துன்பத்தை யொழிக்கவந்த பெருமானே! தேவரீர் திருவாய் மலர்ந்தருளியதில் எல்லா சிவஸ்தலங்களின் சிறப்பைச் சொல்லி அவைகளில் திருவண்ணாமலை மாத்திரம் அதிகமென்றும், இதுபோன்ற ஸ்தலம், மலை வேறெங்குங் கிடையாதென்று அனுக்கிரகஞ் செய்தது யாது காரணத்தைப்பற்றி? அதை யெங்களுக்கு தெளிவாக விளங்கும்படி திருவுள்ளமுவந்து வெளியிட வேண்டுமென்று விண்ணப்பஞ் சாற்ற,

முழுதுமுணர்ந்த நந்திகேசுரர் பேரரவுகந்து, ஐயா மார்க்கண்டேயரே! உமது ஐயந்திரிபற சொல்லுகின்றேன் கேளும் என்று சொல்ல வாரம்பித்தார்.

காசியில் இறப்பதற்கும், திருவாரூரில் பிறப்பதற்கும், ஒருவன் எண்ணியவாறு முடிவது கஷ்டமல்லவா? அது நிற்க, சிதம்பர சபாபதி நிருத்த சபையை தரிசனஞ் செய்வதற்கு பக்ஷி ஜாதிகளுக்கும், மிருகங்களுக்கும், விருக்ஷம் முதலிய ஓரறிவு உயிர்களுக்கும் இயலாது; மானிடரில் பூர்வபுவன புண்ணியத்தால் காணத்தகுந்த சிலருக்கு மாத்திரம் அச்சபையை தரிசிக்கக் கிடைக்கும். ஆனதால் ஸ்திரீயானவள் தன் புருஷனுக்கன்றி வேறொருவனுக்குப் பெறப்பட்ட குண்டர்களுக்கும், விதவை பெறப்பட்ட கோளகருக்கும், நீசருக்கும், கொலை செய்கிறவர்களுக்கும், அவையவங் குறைந்தவர்களுக்கும், தீமை செய்கின்றவர்களுக்கும், நெடுந்தூரத்திலிருப்போர்களுக்கும், மற்ற எவர்களுக்கும், அந்த அருணாசல ஸ்தலத்தையேனும் மலையையேனும் நினைத்தாலே முத்தியை யளிக்கும். இதன் மிருகங்கள், பக்ஷிகள் அங்கு பிறந்தாலும், வசித்தாலும், மரங்கள், தாமனர் முதலாகிய கொடி பூண்டுகள் முளைத்தாலும் முத்தியை யடையும்.

இதுகள் தவிர, அந்த திருவண்ணாமலை ஸ்தலத்திலிருக்கிற சிலைகளெல்லாம் இலிங்கமானபடியால் அது சிவலோகமாகும். அத்தலத்திலிருக்கிற விருக்ஷங்களெல்லாம் கற்பக விருக்ஷங்களாகும். அத்தலத்திலிருக்கிற அலைபொருந்திய ஜலங்களெல்லாம் சிவனது ஜடாபாரத்தில் வீற்றிருக்கப்பட்ட கங்கையாகும். அத்தலத்திலுள்ளோர் அருந்தும் அமுதெல்லாம் தேவர்களுண்ணும் அமிர்தமாகும். அத்தலத்தில் சஞ்சரித்தல் பூமியை பிரதக்ஷணஞ் செய்தலாகும். அவ்விடத்தில் சொல்லும் வார்த்தைகளெல்லாம் வேதமாகும். அவ்வூரில் நித்திரை செய்தல் நிஷ்டைகூடி சமாதியிருத்தலாகும். கார்க்கபத்தியம்-ஆகவனீயம்-தட்சணாக்கினியம் என்கிற மூன்றக்கினியை புரிந்தவர்களும், நான்கு வேதங்களை யுணர்ந்தவர்களும், பிரமயாகம்-தெய்வயாகம்-பூதயாகம்-பிதிர்யாகம்-மானுட்யாகம் என்கிற பஞ்ச வேள்விகளை முடித்தவர்களும், எத்தனைகய தபசு செய்தவர்களும், முப்பத்திரண்டு தருமங்களைச் செய்தவர்களும், இயமம்-நியமம்-ஆசனம்-பிராணாயாமம்-பிரத்தியாகாரம்-தாரணை-தியானம்-சமாதி என்கிற அஷ்ட யோகியானவர்களும், இன்னும் மற்றவர்களும் அந்த அருணாசலத்தை நினைக்கா விட்டால் அவர்களுக்கு முத்தி சித்திப்பதில்லை. ஆனதுபற்றியே, தேவர்களாய் சொர்க்கத்திலிருந்தவர்களும் பூவுலகில் சுத்த மானிடர்களாகவும், கிருமிகளாகவும் பிறக்க ஆசைப்பட்டும், பிறந்து அந்த அருணாசலத்தை தியானஞ் செய்தும், குற்றமிலாத முத்தியைப் பெற்றிருப்பார்கள் தெய்வத்

தன்மை பொருந்திய அந்தப் பதியில் பிறக்கிறது நூறு யாகஞ் செய்தவர்களுக்கு அல்லாமல் கிடையாது. அவர்களிலும் சுவாமியினுடைய கிருபையைப் பெற்றவர்க்கேயன்றி, மற்ற தேவர் முதலாகிய யாவர்க்கும் அரிது.

எல்லாஸ்தலங்களில் இரும்பிலும், செம்பிலும், வெண்கலத்திலும், வெள்ளியிலும், வெண்பொன்னிலும் பதிக்கப்பட்ட ரத்தினம்போல் விளங்கப்பட்ட பரமசிவன், அருணசலத்தில் மாத்திரம் பசும்பொன்னில் பதித்த ரத்தினம்போல் விளங்குவார் அந்த பரமசிவன் அருணசலத்தில் பிரகாசிப்பது எத்தன்மையாயிருக்கிறதென்றால், கண்களிருக்கிறதினால் முகம் பிரகாசிக்கிறது, முகத்தினால் கண்கள் பிரகாசிக்கிறது. இவ்விரண்டினால் திரேக முழுவதும் பிரகாசிக்கிறது. அவைபோல பரமசிவனாலே அருணசலம் சிறப்படைந்திருக்கும். அருணசலத்தால் சுவாமி அமிசையுடையவராய் விளங்குவார். அத்தலத்தினாலும், அத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் சுவாமியினாலும், எண்ணிக்கையில்லாத எல்லாக்ஷேத்திரங்களும் சிறப்பபடைந்து விளங்கும் ஆனதினாலே எல்லா ஸ்தலங்களும் உடலாகவும், அருணசலம் முகமாகவும், அதில் சுவாமிகண்ணாகவும் சொல்லப்படும்.

இத்தகைய ஸ்தலத்திலெழுந்தருளிய சிவபெருமானுக்கு சிறிதுங் குற்றமின்றி பூசை நடக்குமாகில், ஒரு கொடியினது வேறில் நீர் வார்த்தால் அக்கொடியும் அதன் இலைகளும், புஷ்பங்களும் குளிர்ச்சி பெற்றிருப்பதுபோன்று எல்லா ஸ்தலங்களிலும் பூசை நடந்ததாகும். அந்த திருவண்ணுமலையில் நடவாவிட்டால் மற்ற ஸ்தலங்களில் நடந்தாலென்ன? நடவாவிட்டாலென்ன? நடக்கினும் நடவாதுபோலாம்.

உலகோர் தொழுகின்ற திருவண்ணுமலையிலிருந்து, இதைவிட உயர்வாகிய ஸ்தலங்கள் இருக்குமென்று மனதில் சந்தேகமுற்று வேறு ஒரு ஸ்தலத்திற்கு நாடிச்சென்றவர்கட்கு, அதற்குமுன் அவர்கள் செய்திருந்த தபசுகளும் தருமங்களும் பிரயோஜனப்படாமல்போகும். அவர்கள் நற்குலத்தி லுதித்தோராயினும் நீசராவார்கள்; நற்குணமுடையோராயினும் தீக்குணமுடையோராவார்கள்; உயிரோடிருப்பினும் இறந்தவர்களுக்கும் ஒப்பாவார்கள் அந்த திருவண்ணுமலைக்குச் சமானமாக வேறொருஸ்தலத்தைக் கூறினவர்களும் இந்த தோஷங்களுக்கு உடன்பாடாவார்கள்.

என்றிந்தப் பிரகாரம் நந்திகேசுரர் திருவண்ணுமலை ஸ்தலத்தினது பெருமையை எதுவோடு அருளிச்செய்ய, கேட்ட மார்க்கண்டேயரும் மற்ற முனிவர்களும் அன்பு-பக்தி-ஆனந்தமாகிய கடலில் மூழ்கி தன்னை மறந்தவர்களாய் இருந்தார்கள். பிறகு ஞாபகம் வரவும்

மார்க்கண்டேயர் நந்திகேசுரரை பல தரம் வணங்கி அடியார்க்கெளிய எங்களாண்டவனே! தாங்களருளிச்செய்த திருவண்ணாமலை மகிமையைக்கேட்டயாங்கள் அளவு சொல்லக்கூடாத மனக்களிப்பை யடைந்தோம். இன்னும் அத்தகைய ஸ்தலத்தினிடத்திலே பரமசிவனானவர் அக்கினிசொரூபமாய்த் திருவுருக்கொண்டதும் அப்பால் மலையுருவானதும்; அம்மலையின் அடியையும் முடியையும், பிரமனும் விஷ்ணுவுக்தேடி அறியசக்தியற்றவர்களாய் வருத்தப்பட்டதும்; பின்பு சுவாமி அவர்களுக்கு அனுக்கிரஞ்செய்ததும் திருவுள்ளமுவந்து எங்களுக்கு அருளிச்செய்ய வேண்டுமென்றார்.

அதைக்கேட்டு தயாமூர்த்தியாகிய நந்திகேசுரர் மனமகிழ்ந்து, ஐயா மார்க்கண்டேயரே! அந்த திருவண்ணாமலை ஸ்தலத்திலே பஞ்சபாதகங்களை செய்ய நினைத்தாலும், அது புண்ணிய நினைவாகி முத்திக்குவழிகாட்டும் என்று வேதங்கள் முறையிடும். அப்படியிருக்க உள்ளன்போடு நல்லசொற்களால் துதிக்கின்றவர்களுக்கு அந்தாகிய பேறுகிடைக்க சந்தேகமிருக்குமா? இருக்காது. அத்தல மகிமையை கேட்ட நீங்கள் பெறும்பேறோடு, எனக்கும் நல்ல பலனைக்கொடுக்கும். ஆனபடியால், நீங்கள் கேட்டபடியே எனக்குத் தெரிந்த அளவில் சிறிது சொல்லுகிறேனென்று சொல்லத்தொடங்கினார்.

## உலகவுற்பத்தி.

சர்வசம்மார காலத்தில் சகலமும் தன்பாலொடுங்கச் செய்துக்கொண்டு, எல்லாங்கடந்த தத்துவமுடிவிலே தனிமையாய் நின்ற பரமசிவம், முன் ஒடுங்கியவாறே விரியச் செய்து உலகமுண்டாக்க வேணுமென்று திருவுள்ளங் கொண்டார். அவ்வளவில் தன்னிடத்திலிருந்து சத்திதோன்றியது; சத்தியினிடத்திலிருந்து நாதந்தோன்றியது; நாதத்தினிடத்திலிருந்து விந்து தோன்றியது; வித்துவினிடத்திலிருந்து சதாசிவன் தோன்றினார், சதாசிவனிடத்திலிருந்து மகேசுரன் தோன்றினார்; மகேசுரனிடத்திலிருந்து ருத்திரன் தோன்றினார்; ருத்திரனிடத்திலிருந்து; விஷ்ணுதோன்றினார்; விஷ்ணுவினிடத்திலிருந்து பிரமாதோன்றினார்.

உடனே பிரமாவானவர் உலகத்தை சிருஷ்டிக்கிறதற்கு மனதில் எண்ணினார். அவ்வாறெண்ணவே தன்னிடம் மரீசி-அங்கிரர்-புலஸ்தியர்-மலகர்-கிருதி-அத்திரி-சனபதி என்கிற ஏழுரிஷிகளும் பிறந்தார்கள்; தக்கன் வலதுகாற் பெருவிரலிற் பிறந்தான்; பிருகு மார்பினிடத்திற் பிறந்தான்; தர்மதேவதை முகத்திற் பிறந்தது. அந்த பிரமாவின் புத்திரராகிய எழுவரில் மரீசி ரிஷியினிடத்தில் காசிபரிஷி பிறந்தான். தக்கனென்பவன் ஐம்பது பெண்களைப்பெற்றான், அந்த ஐம்பது பெண்களில் பதின்மூன்று பெண்களைக் காசிபர்

விவாகஞ்செய்தார். அதில் மூத்தவளாகிய அதிதிவயற்றில் முப்பத்து முக்கோடி தேவர்கள் பிறந்தார்கள். பின்பு அதிதிக்கு இளையவளாகிய திதி என்பவள் இரணியன், இரணியாட்சனென்கிற இரண்டு பேரையும் பெற்றாள். அவ்விருவரில் இரணியன், பிரகலாதன் முதல் ஐந்து பிள்ளைகளைப் பெற்றான். அந்த பிரகலாதன் தவத்தினாலே மூன்று பிள்ளைகளைப் பெற்றான். அம்மூவரில் விரோசனனென்பவன் மாவலி யென்பவனைப் பெற்றான். மாவலி வாணாசுரனைப் பெற்றான். தநிசிரிஷியென்பவர் சம்பரன் முதலாகிய் பத்து அசுரர்களைப் பெற்றார். அந்த பத்துபேரில் சிங்கிகை என்பவள் இராகு முதல் நாலுபிள்ளைகளைப் பெற்றாள். அவளுக்கிளையவள் மூன்று அசுரரைப் பெற்றாள். காலை என்பவள் காலகேயர்கள் ஆறுபேரையும் பெற்றாள். வினதை என்பவள் கருடன், அருணனோடுகூட நாலுபிள்ளைகளைப் பெற்றாள். கத்துரு என்பவள் பாம்புகளெல்லாவற்றையும் பெற்றாள். அரிட்டை என்பவளிடத்தில் ரம்பாஸ்திரிகள் பிறந்தார்கள். இலங்கினை என்பவள் முனியினுடைய கிருபையினாலே பதினாறுவகைபாகிய கந்தர்வர்களைப் பெற்றாள். கபிலையினிடத்தில் பத்து பிள்ளைகள் பிறந்தார்கள். அங்கிரர்-சனபதி-என்கிற இருவரும் காந்தருவரைப் பெற்றார்கள். அத்திரியென்பவர் சூரியன்-சந்திரன்-இருவரையும் பெற்றார். இராக்ஷசர்-வானவர்-கின்னரர் இவர்களை புலஸ்தியர் பெற்றார். புலகரிஷியென்பவர் கிம்புருட்ரையும் மிருகங்களையும் பெற்றார். சனபதி என்பவர் அஷ்டவசுக்களைப் பெற்றார். பிருகு என்பவர் கவி என்பவனையும், சவுனகரையும் பெற்றார். பின்பு லக்ஷிமியையும் பெற்றார். கவியென்பவர் சுக்கிரனைப் பெற்றார். சூரியன் தன்மனைவியைச் சேருவதற்குபத்தனப்பட்டபோது, அவளதற்கு இசையாமல் பெண் குதிரையாக ஓட சூரியன் ஆண்குதிரையாக துரத்தி அதை அவளது இரண்டு நாசியிலுஞ் செலுத்தியதால் வரிசையாகிய அசுவினிதேவர்களிருவர் பிறந்தார்கள், அதன் பின்பு விரிந்த சரமும், அசரமும் அனேகவிதமா யுண்டாயின.

## பிரமதேவனிருமாப்பு

இவ்வாறு சகலமும் உண்டாகிய பிரமதேவனுக்கு ஒருவித நினைவு வந்து உலகமெல்லாம் நம்முடைய சிருஷ்டியினாலல்லவா உண்டாயின? நாம் சிருஷ்டிக்காவிடில் இவை எல்லாமிருப்பதற்கும், விஷ்ணு ரக்ஷிப்பதற்கு காரணமேது? நாமே நினைத்து இவைகளையழிக்கவேணு மென்றாலும் அழித்துவிடலா மல்லவா இப்படிப்பட்ட சக்தி நமக்கிருக்க, விஷ்ணுதான் நம்மை யீன்றானென்றும், எல்லாவற்றையுங் காக்கின்றானென்றும் இறுமாப்படைந் திருக்கின்றானே? அவன் அப்படிப்பட்ட நினைவை யடைந்திருக்கில், சம்

மூடைய சிருஷ்டித் தொழில் பெருமைக்கு தாழ்வாயிருக்குமல்லவா? அதைப்போல் விஷ்ணுவை அனேகம் படைக்க சாமர்த்தியமிருந்தும் இன்னுமவனைத் தகப்பனென்றும், திதிகர்த்தனென்றும் வைக்கலாமா? என்று அகங்காரத்தைக் கொண்டான். உடனே வைகுந்தத்திற்குச் சென்று விஷ்ணுவை வலியஎதிர்த்து அவமதிப்பான சில வார்த்தைகளைச் சொல்லத் தொடங்கினான் அதாவது,

## பிரமனுக்கும் விஷ்ணுவுக்கும் தர்க்கம்

பிரமன் :—ஐயா விஷ்ணுவே! நான் பதினாலுலகங்களையும் சத்த மேகங்களையும், சத்த சமுத்திரங்களையும், சத்தகுல பர்வதங்களையு முண்டாக்கி, இப்போ வாழ்கின்ற எல்லாவுயிர்களையு முண்டாக்க மரீசி முதல் சப்த ரிஷிகளையும் பெற்றேன். என் பிள்ளைகளால் உண்டாகியவர்கள் பிரகஸ்பதியுடனே எல்லா தேவர்களும், சந்திர சூரியர்களும், அசுரர்களும், கந்தருவர், கிம்புருடர், சித்தர், கணநாதர்களும், தேவேந்திரன் திக்குப்பாலகரு மல்லவா? இவர்களெல்லாம் என்னால்லவா உண்டானார்கள். ஆனபடியால் எல்லாவற்றிற்கும் நானே கர்த்தனாகவிருக்க, இனி நீ சகலத்திற்கும் நானே கர்த்த னென்பதையும், என் பிள்ளைதான் பிரமாவென்பதையும் மறந்துவிடு. நான் படைக்காவிட்டால் நீ யெப்படி காப்பாற்றுவாய்? சுவரில்லாமல் சித்திரமுண்டாகுமோ? அப்போது சுவர் ஆதியா? சித்திரமாதியா? நீரே கவனித்துப் பாரும் என்றார். அதற்கு,

விஷ்ணு—அடா பிரமனே! என்னடா பைத்தியக்காரனாயிருக்கிறாய்? நீ விளையாட்டாய் கேழ்கிறாயா? அல்லது உண்மையாகவே கேழ்கிறாயா? தகப்பனென்றும் பிள்ளையென்றும் கொஞ்சமேனும் மரியாதை யில்லாமல் பேசுகின்றாயே இது வார்த்தைக்கழகா? இந்த மரியாதையில்லாத வார்த்தைப் பற்றி எனக்குக் கோபம் வந்தும் நீ பிள்ளையாச்சுதே என்று மன்னித்தேன். இனியிப்படிப்பட்ட வார்த்தைகளைப் பேசாதே போடாபோ" என்றார். அதற்கு,

பிரமன் :—ஐயா விஷ்ணுவே! நீர் எனக்கு தகப்பனென்றெண்ணியிருப்பதை மறந்துவிடு என்று சொல்லியும், இன்னும் அதையே பேசுகின்றீரோ? நீர் முன்னாலே ஒரு தூணினிடத்திலே பிறந்தாயே அந்தத் தூணை உனக்குத் தந்தையென்று சொல்லட்டுமா? அல்லது தாயென்று சொல்லட்டுமா? அந்த தூண் உனக்கு தந்தையானால், நான் உன் உந்தியில்

வந்ததின் பொருட்டு நீர் எனக்குத் தந்தையாவீர். இப்படி யிருக்க தெரியாமல் பேசுகின்றீரே" என்றார். அதற்கு,

விஷ்ணு:—அடா பிரமனே! உன்மீது ரொம்பவும் கோபமாகிறது. நீ யெனக்குப் பிள்ளையென்றும், உன்னை யெப்படி கொல்லு கிறதென்றும் நினைக்கின்றேன். நீ வேருயிருந்தால் இவ்வளவு கோபம் வந்ததற்கு சும்மா விடமாட்டேன்; மதுவும், கைவடனும் எனக்குப் பிள்ளைகளல்லவா? எனக்குப் பிள்ளை களாக விருந்தும் என்னை யிகழ்ந்தும் எதிர்த்துப் பேசியதால் கொன்றுவிட்டேனே. அது உனக்குத் தெரியாதா? அது போல் நீயும் தேடிக்கொள்ளாதே பத்திரம் பத்திரம். தேரே கத்தில் ஒரு கட்டியுண்டானல் அது நம்முடைய தேகத்தி லுண்டாகிய நம்முடைய கட்டியென்று விட்டு விடுவார்களா? உடனே அதை அறுத்தெறிந்து விட்டு திரேகத்தை தானே சொஸ்தப்படுத்திக் கொள்ளுவார்கள். அதுபோல் தனக் குக் கெடுதியைத் தேடினல் மைந்தனென்றும் யார்ப்ப துண்டோ? பிறகு இதனல் கஷ்டம் நேரிட்டால் "மறந்தாப் போவிறந்தேன் உயிரே வா!" என்றால் வராது. இதை நன்ருக தெரிந்துக்கொண்டு உன் இருப்பிடத்தே போய்ச் சேர்" என்றார். அதற்கு,

பிரமன்:—ஐயா விஷ்ணுவே! நீயா யென்னைக் கொல்லப்பட்டவர்? நம்முடைய மைந்தன்தானே நம்மை யென்ன செய்வா னென்று நினையாதே. நெருப்பு மூங்கிலினிடத்தே பிறந்து மூங்கிலைத் தானே கொளுத்திப் போடுகிறதை அறியாயோ? அப்படி உன்னை அழித்துப் போடுவேன். உனக்கு பிருகு ரிஷி கொடுத்த சாபத்தால் பத்துதரம் பிறந்தாயே நீ அதை பகுத்தறிய வில்லையா? அப்படி நீ பிறக்கும் போதெல்லாம் உன்னுடலைப் படைத்துப் படைத்து என் கைகள் சாய்ப் பேறி கருத்துப்போனதையும் பார். இப்படி நான் படைத் திருக்க நீ என்னைப் படைத்தேனென்று மதத்தையடை யாதே, அடைந்தால் உன் உத்தியோகத்தை நீக்கி வேருெருத்தனை யுண்டாக்கி ரக்ஷிக்குந் தொழிலுக்கு நிய மித்துப் போடுவேன்" என்றார். அதற்கு,

விஷ்ணு:—அடா புத்தியில்லாதவனே! சிவன் உன்னுடைய தலைகளி லொன்றைப் பிடுங்கியெறிந்த காலத்தில் அந்தத்தலையை மறுபடியும் உண்டாக்கிக்கொள்ள உனக்கு வகையில்லையே இத்தலையைக்கொண்டுதானே உலகத்தைப் படைத்தாய். ஆனதால், உன்னை எதற்குத்தலைவனென்று சொல்லுகிறது. இவ்வாறிருக்க, நீதான சர்வசக்தியுடையவன்? உன்னை

எத்தனையோ தடவைகாப்பாற்றியதாலல்லவா இப்பொழுது என்னையே எதிர்த்துக்கொண்டாய்" என்றார். அதற்கு.

பிரமன்:—ஐயா விஷ்ணுவே! நீரே ஆண்மையுள்ளவரென்று பேசுகின்றீரே. உம்மால் என்னநடக்குமென் றெண்ணுகின்றீர்? என்னநடத்தினீர்?" என்றார், அதற்கு,

விஷ்ணு:—அடே! சோமுகாசூரன் உன்னிடத்தில் வேதங்களைப் பிடுங்கிக் கொண்டுபோனபோது நான் மச்சாவதாரங் கொண்டு அந்த அசுரனைக்கொன்று வேதங்களை வாங்கித் தரவில்லையா? அதுவுமல்லாமல் சாமர்த்தியமுள்ள அனேக அசுரர்களைக் கொன்று உன்னையுங் காப்பாற்றவில்லையா? இப்படியிருக்க எட்டிமரமேனும் பச்சென்றிருக்கட்டுமென்று நினைக்கின்றேன். இதுகளை புணராது கெட்டுப் போக நாள் தேடிக்கொள்ளுகிறாயே சரியா? பிள்ளையான வுன்னை இன்னுங் கொல்லப்படாதென அச்சப்படிகின்றேன் போ! போ!" என்றார். அதற்கு,

பிரமன்:—ஐயா விஷ்ணுவே! இதுவரையிலும் பெரியவரானதால் பொறுத்தேன் றெண்ணினேன்; நீரோ கொஞ்சமேனும் மரியாதை வைக்காது இறுமாப்பால் இகழ்ந்து அதிகமாய் பேசுகிறாய்; இனி யெதுவும் பார்க்கமாட்டேன். இன்னும் அதிகமாய் வார்த்தையாடினால், நமது புத்திர பௌத்திரர்களாகிய தேவகூட்டங்கள் உன்னை கொல்லுவதற்கு வளைத்துக்கொள்ளும்; அதற்குள்ளாக நீ திருப்பாற்கடலில் குதித்து ஒளித்துக்கொள்ளு போ" என்றார்.

இந்தப்பிரகாரம் பிரமதேவனும் மகா விஷ்ணுவும் எத்தனையோ வார்த்தைகளைச் சொல்லிக கொண்டார்கள். அப்போது இருவருடைய விழிகளும் கோவைப்பழம் போன்று சிவந்தது; புஜங்கள் துடித்தது; வாய்களும் வார்த்தையாடிக் கொண்டிருந்தது. உடனே கோபந் தாளாதவர்களாய் புஜங்களைத் தட்டி, மீசைகளை முறுக்கி, சண்டைசெய்ய ஆரம்பித்து, ஒருவரை யொருவர் மேலே யெடுத்தெறிவார்கள். கீழே விழுவார்கள்; மறுபடி யெழுந்து விரைவில் ஓடி வளைத்து எதிராக நின்று குத்து என்று சொல்லுவார்கள்; மடியைப் பிடித்துக்கொண்டு அந்நேரமும் இருளும் வலமிடமாக வருதலைப்போன்று சுழன்று திரிவார்கள். இவ்விதமாக சண்டை செய்கிறபோது மலைகளெல்லாம் பொடியாய்ப் போனதுகள்; அண்டகடாகம் படீரென்று வெடித்தது; சந்திர சூரியர்கள் ஒளித்தார்கள்; ஆதிசேஷன் தலைசுமை பொறுக்கமாட்டாமல் உடல் நெளிந்துக் கொண்டான்; கற்பகாலம் வந்து உலகம் அழியப் போகிறதென்று தேவர்கள் கண்களை மூடிக் கொண்டார்கள்;

நக்ஷத்திரக் கூட்டங்களும், மேகக் கூட்டங்களும் உதிர்ந்ததுகள் உலகமெல்லாம் அடுக்குக்குலைந்து விழுந்தன ; தூளெழும்பியதுகள் கங்கை முதலான நதிகளெல்லாம் தண்ணீரில்லாமல் வற்றிப் போனதுகள் ; அஷ்ட திக்குகளிலு மிருக்கின்ற யானைகள் திடுக்கிட்டுப் பயந்தன ; உலகின்கண் ஊர்ந்து போகின்ற ஜீவன்களும், தவழ்ந்து போகின்ற ஜீவன்களும், நடந்து போகின்ற ஜீவன்களும், பறக்குஞ் ஜீவராசிகள்போல ஆகாயத்திற் பறந்ததுகள், நிலையாக நின்ற விருக்ஷங்களும், மலைகளும் திரிந்ததுகள், திரளாக நிறைந்த ஐந்து வகையாகிய தேவதருக்கள் பொடி பொடியாய்ப் போன்துகள் ; எவ்விடமும் அந்தகாரம் நிறைந்தது ; மகா மேரு அசைந்தது ; சப்த சமுத்திரம் சேறுனதுகள்.

அப்போது சர்வ சங்காரகாலமே வந்துவிட்டதென்று தேவர்களெல்லோரும் பயப்பட்டு தேவேந்திரனிடஞ் சென்றூர்கள். தேவேந்திரன் தானடைந்த துன்பத்தை யெல்லாம் தம்மால் வந்த தேவர்கள்மாட்டு புகன்று, தாங்கள் என்ன காரியமாய் வந்தீர்களென்றுன். அதற்குத் தேவர்கள், ஐயா தேவேந்திரா ! பிரமனும் விஷ்ணுவும் பூமியில் மிகுந்த யுத்தஞ் செய்கிறூர்கள், நாங்கள் பிழைக்கும் மார்க்கம் வேறேயில்லை ; ஆனபடியால், இது விஷயத்தை சீக்கிரமாக கவனியாது தாமதிக்கும் பக்ஷத்தில் இப்பொழுதே சர்வ சங்காரகாலம் வந்துவிடும் போலிருக்கிறது. அதுபற்றி இப்போதே சீக்கிரமாக சென்று யாவருக்குங் காரணமாயிருக்கின்ற பரமசிவத்தைத் தொழுது இத்னை விண்ணப்பஞ்சாற்றி உய்வதே நல்லகாரியமென்றூர்.

இவ்வாறு தேவர்கள் சொல்லக்கேட்ட தேவேந்திரனுக்கு சம்மதமனதாகி தேவர் கூட்டங்களுடனே புறப்பட்டுப்போய் எல்லாம் வல்ல பரமசிவனுடைய செய்யபாதங்களைத் தொழுது, சுவாமி! சர்வசக்தியுக்தனே !! எங்களையீன்ற மங்கைபாகனே !!! பிரமனும், விஷ்ணுவும் சண்டை செய்வதனுல் வருந்துக்கத்தை தீர்க்கவேண்டும் ; எங்களுக்குத் தாயாகிய தங்களைவிட வேறு துணையேது ? உருண்டு கொண்டு போகாநின்ற வண்டியினுடைய சக்கரம்போல் அஞ்ஞானம் பொருந்திய பிறப்பையு மிறப்பையும் மாறி மாறி யடைந்து வருந்தத்தை யடையாமல் மோக்ஷத்தைப் பெற உனக்கடிமையாகப்புகுந்து உன்னுடைய அளவிலாத கிருபைக் கடலில் குளிக்க அடைக்கலமானேம் ; அனேகம் புழுக்கள் குடைந்துக் கொண்டிராநின்ற உடற் பாரத்தைப் பொறுக்க முடியாத இழுக்காகிய அஞ்ஞானங்கெட, பிரியத்தினலே கிருபைசெய்கின்ற தயாநிதியே! பெரியசமுத்திரத்தினிடத்தில் தினம் முழுகினும் போகாத மும்மலமாகிய அழுக்குப் போக அடைக்கலம் புகுந்தோம் ; இனி

வேறே ஆலோசனையின்றி எங்களுக்குக் கிருபை செய்ய வேண்டும் என்றார்கள்.

## அக்கினிமலை யுற்பத்தி.

இவ்வாறு தேவர்கள் முறையிட; எள்ளினிடத்து நெய்போன்று எல்லாவுயிர்களிடத்து நிற்கும் சுவாமி இந்த சண்டையை அறிய மாட்டாரா? அறிவார். அறிந்தும், பிரமனுக்கும் விஷ்ணுவுக்கும் வந்த சண்டையின் மூலத்தை தேவர்களாலுந் தெரிந்து, அவர்களின் முறைக்கிணங்கிய தயாமூர்த்தியாகிய, தேவர்கள் முனிவர்கள் முதலெல்லோருமடைந்த நடுக்கம் பயம் அகலவும், பிரமாவுக்கும் விஷ்ணுவுக்கும் நேர்ந்த பகையை நீக்கவும், அடுக்கடுக்காயிருக்கிற அண்டங்களெல்லாம் அடுக்குக்குலையாமலிருக்கவும், கிருபை செய்வதாய், சண்டைசெய்யும் பிரமாவுக்கும் விஷ்ணுவுக்கும் மத்தியில் தடுத்தற்கரிய அக்கினிசொரூபத்தோடு கூடிய ஒரு பெரிய திருமலையாகினார். அப்போது பாதாளலோகத்திலிருக்கிற பாம்புகளெல்லாம் அந்தமலைக்குச் சல்லிவேறென்ன அதன் கீழ்பருத்த வேரோடி, பூமியிற்பெரியதாய் கிளைத்துத் தெய்வலோகங்களை தாண்டிப், பிரமலோகத்து முகட்டையுடைத்து, அண்டகடாகவெளியைக் கடந்து, அதற்கப்பாலிருக்கிற பெரிய வெளிக்குமேலாயிருக்கிற இடத்துக்கு ஒரு அக்கினிசொரூப மகாமேரு அடுத்ததென்று சொல்லவளர்ந்தது. இன்னும், உதயமாகிய நெடுந்தூரம் கிரணங்களை வீசுகின்ற சூரியனுடைய தேரிற்கட்டிய குதிரைகள் சஞ்சாரஞ் செய்யக்கூடாத உலகமெல்லாம் ஒடிக்கிளைத்த நீலமணிபோலுங், கரிய இருளை யோட்டுகின்றதற்கு ஏற்றிவைத்த விளக்கைப்போலும் பிரகாசிப்பதனாலே சமுத்திரமெல்லாம் வடவாமுகாக்கினி பரந்ததுபோற் சிவப்புநிறம் பொருந்தியது. அந்தப்பிரகாசத்தால் சத்தகுல பர்வதங்களெல்லாம் அக்கினி மலைசொரிந்த அக்கினிப்பொரிகள்போலச் சிவந்ததுகள். இப்படி ஆகாயபரியந்தம் உயர்ந்துவளர்ந்த அக்கினி சொரூப மலையை ஞானக்கண்களையுடையவர்கள் காணுவதல்லாமல், குற்றம் பொருந்திய ஈனக்கண்ணுடையவர்கள் காணுகிறதற்கு எளிதாகுமோ? ஆகாது.

## பிரமனும் விஷ்ணுவும் கொண்ட சபதம்.

இத்தகைய அக்கினிமலையைக்கண்ட பிரமாவும் விஷ்ணுவும் பயப்பட்டு, ஒதுங்கிநின்று, துன்பத்தையுடையவராய், இந்த மலையினது அடியையாவது முடியையாவது அறிகிறவரே பெரியவரென்று ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டார்கள். உடனே இந்த மலையின் அடியை கானறிகிறேனென்று வராகரூபமானார். இந்த மலையின் சிகரத்தைக்காணுகிறேனென்று பிரமன் அன்னப்

பக்ஷியானார். இருவரும் சரியென்று ஒத்துக்கொண்டு பிரமன் அரைக்ஷணத்தில் ஆயிரங்காதவழி ஆகாயத்திற்பறந்தார். விஷ்ணு அரை கொடியில் ஆயிரங்காததூரம் பூமியைத்துளைத்துக் கொண்டு கீழாகப் போனார்.

## விஷ்ணு அடியைத்தேடல்.

அக்கினிமலையின் அடியைக்காணும் பொருட்டு வராக அவதாரமெடுத்து கீழேசென்ற விஷ்ணு பூலோகத்தைக் கடந்து, அதின் கீழிருக்கிற ஏழுலகத்தையுங் கடந்துபோய், மாவலிச் சக்கிரவர்த்திக் காவலிருக்கின்ற போகவதிபட்டணத்தைத் தாண்டி, அப்புறம் தேவர்கள் வணங்கும் பிர்மசொரூபம் விளங்காநின்ற ஆடகேசுரத்தைக்கண்டு கைகளினாலும் சிரசினாலும் வணங்கி, முன்னே மூன்றுலகத்தையுமளந்தவர் இப்போது ஏழுலகங்களையளந்தும் அந்த மலையினடியைக் காணவில்லை. அப்படிதேடுகிறபோது வளர்பிறைபோல் நாளுக்கு நாள் வளர்ச்சியுற்ற இரண்டு கொம்புகளும், குளம்புகளும், முகத்தினுனியும், தேடப்புகுந்த ஆசை பின்பு எப்படிக் குறைந்து போயிற்றோ அதுபோல் தேய்ந்து குறைய, துக்கசமுத்திரத்தில் விழுந்து, நூறுவருஷங் காலந்தேடியுங் காணாமல் பின்பு தெளிவுவந்து, இது சிவபெருமானுடைய செயலென்றறிந்து, அவரை ஸ்தோத்திரஞ்செய்து, இளைப்புஞ் சலிப்பும் நீங்கி, துக்கசமுத்திரத்தையும் ஏழுலகத்தையும் தாண்டி தனக்கும் பிரமனுக்கும் வந்த கலகத்தை போக்கும் படிக்கி அக்கினி சொரூபம் எழுந்த ஸ்தலத்தைச் சேர்ந்தார். சேர்ந்து பிரமன் இந்த மலையின் முடியை அறியமாட்டானென்று நிச்சயஞ்செய்துக் கொண்டு, நம்பாத மனுஷர்களுக்கு அரியவரும், எப்படிப்பட்டவர்களுக்கும், தூரமாக இருக்கின்றவரும், நமது கண்ணாகிய புஷ்பத்தோடு அழகிய புஷ்பங்களை தரிக்கின்றவருமாகிய ஒப்பற்ற பரமசிவனை வணங்குவோமென்று பலதரமும் பணிந்து உள்ளமுருகிப் பாடினார்.

## பிரமன் முடியைத்தேடல்

இவ்வாறு விஷ்ணுவிருக்க, விஷ்ணுவோடு அக்கினி மலையின் முடியைத்தேட அன்னப்பக்ஷியாகிப் பறந்த பிரமன் அரைக்ஷணத்திலே ஆயிரங்காதந்தாண்டி, அண்ட கோளங்கையுங் கிழிபடக் கிழித்துப் பறந்து நூறாயிரவருஷந் தேடினார். அப்படி அனேக நூறாயிரங் காதந்தாண்டிப் போய் பார்க்கினும் அக்கினிமலை முதல்பார்த்தது போலவே யிருந்தது. அப்படி தேடும்போது சிறகெல்லாம் உதிர்ந்து போயின; விசையும் அடங்கியது; துக்கமும் பெருமூச்சும் அதிகப்பட்டன; மனக்குறை வளர்ந்துக் கொண்டேயிருந்தது. ஒருவருமில்லாமல் தான் ஒருவனானபடியினாலே நெருப்பிலிட்ட

மெழுகுபோல் இளமனதாகி, விஷ்ணு இந்த அக்கினி மலையின் அடியைத் தேடித் திரும்புவரானோ? அல்லது கொஞ்சந்தேடி இனி மேல் தேடக்கூடாதென்று திரும்பிவருவானோ என்று துக்கமாகிய ஊஞ்சலிலாடி அந்தோ! இந்த மலையை சிவனென்று அறியாமல் போனேனே பகைத்துக் கொள்ளப்பட்ட விஷ்ணுவையாது உறவு கொள்ளாமற் போனேனே! அன்று முதல் இதுவரைக்கும் துக்க சமுத்திரத்தில் மூழ்கினேனே! இப்படிவந்த என்னுடைய சிறிய புத்தியினாலேயோ! இவ்வளவு தூரந் தேடிவந்தும் முடியை அறியாமற்போனேனே? இப்படியே திரும்பி விஷ்ணுவிடம்போய் நான் முடியைக்கண்டேனென்று பொய் சொன்னாலும், நமக்குத் தக்கவாறு சாக்ஷிசொல்லுவதற்குத் துணையில்லையே என்று விசனப் பட்டுக்கொண்டிருந்தார். அந்த சமயத்தில் ஒரு தாழம்பூ மடல் மேலேயிருந்திறங்கப் பார்த்தது. இது எங்கேயிருந்து வருகிற தென்று மனதிலெண்ணுவதற்கு முன்னே, அம்மடல் தனக்கு சமீபத்தில்வர அதைக்கையினாலேயே பிடித்தார். அது பரமசிவ னுடைய சிரசிலிருந்து தவறி விழுந்த தாழம்பூ வானபடியால் மெய்ம்மையான பெருமூச்சோடு என்னைச் சீக்கிரத்தில் விட்டு விடுவாயென்று சொல்லியது.

அதைக்கேட்ட பிரமன், அழகு பொருந்திய தாழம்பூவே! எங்கேயிருந்துஇங்குவந்தாய் என்றார். அதற்குஅந்ததாழம்பூ பிரமனை நோக்கி ஐயா! பிரமனாலும் விஷ்ணுவினாலும் அறியக்கூடாத பரம சிவனது சிரசிலேயிருந்து தவறிவிழுந்து நாற்பதினாயிர வருஷங்களாக வருகின்றேன்; இன்னும் நான் பூமியிற் போகவில்லை; நானேமிக்க வருத்தத்தோடு வருகிறேன் என்னைப் பிடிக்கவேண்டாம் விட்டு விடு என்றது.

இன்னும் பிரமன் ஓ தாழாம்பூவே! நீ என்னை அன்னிய னென்றும், அன்னப்பக்ஷியென்றும் நினைக்கவேண்டாம். நானே பிரமன் இந்த மலையின் முடியைக் கண்டுவருகிறேனென்று விஷ்ணு விடம் சபதங்கூறி, வெகுகாலமாகத்தேடியுங் காணாதவனாய்த் துன்புறு வதை, இன்னுந்தேடி துன்புறாமல் தடுத்ததற்கு, என்னைத் துணையாய் தோன்றி தடுத்தாய் இதற்குத்தக்க கைமாறு. என்னசெய்யப் போகிறேன்! இப்போது உன்னைவிட எனக்கு உயிர் போன்ற துணையும் உறவும் வேறேயில்லை. இந்த சகாயம் புரிந்ததோடு இன்னமொரு சகாயஞ்செய்ய வேண்டும், அதாவது நான் முடியைக் கண்டு வருகிறேனென்று சபதமிட்டு வரும்போது, விஷ்ணு அடியைக்கண்டு வருகின்றேனென்று பூமியின் கீழிடத்தைப் பிளந்து கொண்டு தேடப்போனான்: அவனுங்கண்டிருக்க மாட்டான்; இப்போது பூமியில் வந்திருப்பானென்று நினைக்கின்றேன்: ஆனபடி யால் நான் இந்த அக்கினி மலையின் முடியை அறிந்தேனென்று சாக்ஷி

சொல்ல வேண்டுமென்ருர். அதற்குத்தாழம்பூ ஐயா! நீர் காணுத காரியத்தை கண்டீரென்று பொய்சாக்ஷி சொல்லுவது வஞ்சனை தொழிலாச்சுதே நான் ஒருபோதுஞ் இப்படிப் பட்ட வார்த்தை சொல்லமாட்டேனென்றது.

## பொய் சாக்ஷி

பிரமன் தாழம்பூவை நோக்கி என்னுயிர் போன்ற துணையே! இப்படி சொல்லுவது வஞ்சனைத் தொழிலென்று தள்ள வேண்டாம். யாதோ ஒரு துன்பத்தை யடைந்தவருக்கு உயிர்சேதம் வருமாயின் அவர் பிழைக்கும் பொருட்டு சொல்லக்கூடாத பொய்யைக்கூடச் சொல்லலாம். இது பயந்து சொல்லத் தகாத வார்த்தையுமல்ல. சினேகித்தை விரும்பினவர்கள் சினேகித்ன் பொருட்டு விஷத்தை யும் அருந்துவாறெனில், இந்த வார்த்தையைச் சொல்லக் கூடாதா? ஆனதால் நீ வேறே ஒரு ஆலோசனையுங் கருதாமல் இதற்குடன்பட வேண்டுமென்று கூற, அதற்குத் தாழம்பூவு மிசைந்து, இருவரும் ஆகாயத்தினின்று சீக்கிரமாக பூமியில் வந்தார்கள்.

அப்போது பிரமன் விஷ்ணுவை நோக்கி ஐயா விஷ்ணுவே! என்னுடைய வரவைக் கேள்; ஒரு நொடியிலே நூருயிரங் காதமா கப் பறந்து, எல்லோருக்கும் ஆதியாகிய சிவனே திருவுருக் கொண்ட, அக்கினி மலையின் சிரசைக் கண்டேன் என்ருர். அவ் வார்த்தையைக் கேட்ட விஷ்ணு அடா பிரமனே! நான் முன்னே மூன்றுலகத்தையும் அளந்தவன் இப்போது ஏழுலகத்தைக் கடந்து தேடியுங் காணுதவனுய் வந்திருக்க; பூமியில் தேவரூடிய மலை மேலேயும் அப்படித்தானே இருக்கும் அப்படிப்பட்டதை நீ கண்டே னென்று புகலுகின்ருயே இவ்வார்த்தை நம்பத்தக்கதா? ஒரு சமயம் நீ பார்த்திருந்தால், நீ பார்த்தது உண்மையென்று நம்ப வேண்டுமே; நம்புவதற்கு யேதேனுஞ் சாக்ஷி யிருக்கிறதா? என்ருர். கேட்ட பிரமன் இதோ இருக்கும் தாழம்பூ சாக்ஷியாக வந்திருக்குதென்ன தாழம்பூவும் ஆம், இவர் பார்த்தது நிஜந்தானென்றது.

## அக்கினி மலையில் பிரகாசமான பரமசிவன்

இவ்வாறு பிரமன் சொன்ன தக்ஷணமே அக்கினிமலை படி ரென்று வெடித்தது; வெடித்த சத்தத்தில் இராக்ஷதர்கள் தேவர்கள் திடுக்கிட்டு உயிர் சோர்ந்தார்கள்; திக்கிலிருக்கிற யானைகள், சூரியர் களை உருக்கிச் சாய்த்தாலெப்படியோ அப்படி ரத்த ஜலத்தைக் கக்கினதுகள். செக்கர்வானத்துப் பிரகாசம் மழுங்கிப் போகும் படியாகவும் சிவந்த தமது திருவுருவின் ஒளிபொருந்திய நிறமானது விபூதியினுல் வெளுத்த வடிவாய்த் தோன்ற, அந்த வெடிப்பில்

நின்று பரமசிவன் எழுந்தருளினார். அப்போதவர் முகத்தில் முப்புரத்தை யெரித்த நகைப்பு வந்தது உடனே பிரமனை நோக்கி அடா பிரமனே உன்னுடைய அகங்காரத்தினால் சொன்ன சொல் நன்றாயிருந்ததென்று சொல்லி நகைத்தபோது, அண்டபகிரண்டங்களெல்லாம் கிடுகிடென்று நடுங்கி யொடுங்கிப் போயின; மேகங்கள் மறைந்தன; சிறந்து நிலைபெற்றதுகளெல்லாம் இறந்ததுகள்; நிறைந்தவைகளெல்லாங் குறைந்து போயின; குறைந்தவைகளெல்லாம் நிறைந்தன; எட்டுதிக்குகளுந் திரிந்ததுகள்; மலைகளெல்லாங் கரிந்தும் பொரிந்தும், எரிந்தும் போயினதுகள்; பிரமன் இன்றே அழிந்து போவானென்று தேவர்களெல்லோரும் பயப்பட்டார்கள்; அத்தேவர்கள், பூமி பள்ளமாகும்படி கொள்ளை கொள்ளையாகப் புஷ்பமாரி பொழிந்தார்கள். விஷ்ணுவுக்குச் சந்தோஷம் வந்தது; பிரமனுக்கு முன்னேயிருந்த அகங்காரமென்னும் இருள் நீங்கிப் போயிற்று.

அப்போது தெளிவையடைந்த விஷ்ணுவானவர் அக்கினிமலையினிடத்திலிருந்து எழுந்தருளிய பரமசிவனைப் பாடினார்; வந்தனஞ் செய்தார்; பரவசங்கொண்டானந்தக் கூத்தாடினார்; நான்கு திக்கிலும் ஓடினார்; யாவராலு மளவிடக்கூடாத இந்த சுவாமியைத் தரிசித்துக் கூடினேன், இனி நாமென்ன வரங் கேட்பேனென்றாலோசனை செய்தார்; இப்படியிருந்த பக்தியினாலே தேகம் உருகாநின்ற விஷ்ணுவினுடைய அடிமைத்திரத்தைப் பார்த்த பரமசிவன் அவர் கேட்ட வரங்களெல்லாம் அருளிச்செய்தார்.

உடனே பிரமனை நோக்கி அடா பிரமனே! என் முடியைக் காண சக்தியற்றவனாயிருந்து கண்டேனென்று பொய்வார்த்தை சொல்லியதால் உனக்குப் பூமியிலே கோயிலும், பூசையும் இல்லாமற் போகக் கடவது என்று சாபந்தந்து, தாழம்பூவை நோக்கி, ஓ தாழம்பூவே! நீ இந்த பொய்யனாகிய பிரமாவினோடு சேர்ந்து பொய்சாட்சி சொன்னபடியினாலே உன்னை இது முதற்கொண்டு தீண்டேனென்று தள்ளினார்.

இவ்வாறு பரமசிவன் திருவுள்ளம்பற்றவே, பிரமன் பயந்து கடுநடுங்கி அந்தோ! நாமொன்று நினைக்க தெய்வமொன்று நினைத்ததே யாது செய்வேன்! இன்னம் என்ன நேரிடுமோ யாரறிவார்? என்றும், இது வரையிலடைந்த துன்பத்தோடு இன்னும் துன்பத்தையடைய நேரிட்டதே நமது கர்வம் நம்மையே அழித்ததல்லவா? என்றும், துக்க சாகரத்தி லாழ்ந்தவனாகி, இறுமாப்பை யொழித்து பரமசிவனது திவ்ய பாதங்களுக்கு தன்னுடைய தேகம் பூமியிற் படியும்படி விழுந்து பொடி மூடிய நெருப்பையொத்த சுவாமியே! அருவமும், உருவமும், அருவுருவுமானவரே! அகண்ட வெளியான

வரே! நான்கு வேதமும், அவ்வேதத்தினுடைய அந்தரமு மாகிய வரே! மூன்றும் பிறையாகியும், பூர்ணச் சந்திரனாகியும், பெண்ணாகியும், ஆணாகியும், தேனாகியும், புஷ்பமாகியும், மேகமாகியும், சொல்லாகியும், நாதமாகியும், இன்னும் நானாவித ரூபமாகியுமிருக்கின்ற மூர்த்தியே! என்மீது இவ்வாறு முனிவதற்கு யான் ஐங்கணையுடைய மன்மதனல்லவே; தாருகா வனத்து ரிஷிகள் விட்ட யானையல்லவே; அந்த ரிஷிகள் பின்பு விட்ட அக்கினியல்லவே; கொலை செய்யுந் தொழிலையுடைய யமனல்லவே; திரிபுரமுமல்லவே; சுவாமி! நானோ ஆணவமலம் மூடிக்கொண்ட அவிவேகியானதால் யாதோ தெரியாமற் செய்த குற்றத்தை பாராட்டி என்னை யொரு பொருளாகக் கருதி கோபிக்கின்றீரே? எல்லா நதிகளினீரும் விழுந்து ஒன்றாகிய எழு சமுத்திரமுங் காய்ந்து வெந்நீராய்ச் சுட்டால், அதையாற்றுவதற்கு வேறே ஜலமுண்டோ? உமக்கே இப்படிப்பட்ட கோபம் வந்தால் உலகத்திலிருக்கின்ற ஜீவராசிகள் எப்படிப் பிழைக்கும். ஆனபடியால், அடியேன் செய்த குற்றத்தை மன்னித்து கிருபை செய்தருள வேண்டுமென்று விசனத்தோடு தோத்திரஞ் செய்தார்.

## பரமசிவன் திருவாக்கு

அப்போது உக்ரமூர்த்தியாகிய பரமசிவன், தன்கோபத்தை மாற்றி குளிர்ந்த தயாமூர்த்தியாகி, வாராய் பிரமனே நீ பயப்படாதே; பூமியில் பிராமணர்கள் செய்யும் பூசையை உன் பூசையாகக்கொண்டு எப்போதும்போல உலகத்தைப் படைக்கக் கடவாய் என்று திருவாய்மலர்ந்தருளினார்.

பிறகு பரமசிவன் பிரமன் விஷ்ணுவைநோக்கி, வாருங்கள் பிரம விஷ்ணுக்களே உங்களுக்கு இந்த ஸ்தலத்திலே அனுக்கிரகஞ் செய்து வரங்கொடுத்தபடியினாலே இத்தலத்தைச்சுற்றி மூன்று யோசனைதூரம் வரைக்கும் சுத்த பவித்திரமாக விருக்கவேண்டியது. இந்தச் செந்தீமலையானது சிறிய உருவத்தோடுங்கூடிய மலையாகக் கடவது. இது சிறந்த மோக்ஷத்தைத் தடையின்றி கொடுக்கும் இத்தலத்திற்கு அருணகிரியென்று பெயர். துன்பத்தையடைந்த தேவேந்திரனும், தேவர்களும், நம்மை நினைக்க அவர்களுடைய துன்பத்தை தீர்த்தோம்; ஆனபடியால் இத்தலத்தை நினைக்கிறவர்களுக்கு பிறவித்துக்கத்தை நீக்குவோம். இந்த மலையும், இந்த ஸ்தலமும், பிரளயகாலத்திலும் நாசமடையாத லக்ஷணத்தை யுடையதாகி, எட்டு திக்குகளிலுமிருக்கின்ற சராசரங்களெல்லாவற்றையும் முத்தியிலே சேர்க்கும். பூமியில் அரிதாகிய தவத்தைச் செய்தவர்களுக்கு, நிலைபெற்ற மோக்ஷத்தைக் கொடுக்கவிரும்பி, ஜோதிசொரூபமாகிய இந்த ஸ்தலத்தி லவதரிக்க வரத்தைக் கொடுப்போம். இதில் ஒரு தானம்

செய்தால் ஒன்று ஆயிரமாக விருத்தியாகும். இந்த ஸ்தலத்தில் பாவமே உண்டாகாது. இதைச் சந்தேகமாக நினைப்பவர்களுக்கு நம்முடைய ஆணைப்படிக்கு மோக்ஷங் கிடைக்கமாட்டாது என்றார்.

இந்தப்பிரகாரம் சுவாமி சொன்ன அளவில் அக்கினிமலையானது குறுகி, ஒரு சிறிய மலையாய் அனேகப்பிரகாசம் விரிந்து பிரகாசித் தலைப் பார்த்த பிரமனும், விஷ்ணுவும், சுவாமியை வணங்கி, சுவாமி, தேவர்களுக்கும், எங்களுக்கும், இந்தமலையின் சோதிக்கெதிராகப் போய் கண்விழிக்கக்கூடவில்லை. ஆனபடியினால், எண்ணுதற்கரிய கிரணங்களெல்லா மறைத்து மற்ற மலைகளைப்போல் ஒரு மலையா யிருந்து, இம்மலையின் உச்சியிலே ஒரு பிரகாசம் எந்நாளுந் தெரியும் படி கிருபை செய்யவேண்டு மென்றார்கள். அப்போது மலரசித ராகிய பரமசிவன் அவ்விருவரின் வேண்டுகோளுக் கிரங்கி ஒரு மலை யாகச்செய்து ஓ பிரம விஷ்ணுக்களே, கார்த்திகை மாசத்தில் கிருத் திகை நக்ஷத்திரத்தில் இம்மலையி னுச்சியிலே ஒரு பிரகாசங் காண் பிப்போம்; அந்த சுடரைக் கண்டவர்கள் தரித்திரமும், வியாதியு மில்லாமல் உலகத்தில் நிலைபெற்று வாழ்வார்கள். இந்த சோதியைக் கண்ட அரசர்களுக்கும், அரிய தவசிகளுக்கும் இடையூறுகள் நீங் கும். இதைப் பணிந்தவர்கள், தரிசித்தவர்களுடைய கோத்திரத்தில் இருபத்தொரு தலைமுறைக்கும் முத்தி வரங்கொடுப்போம். இந்த மலை இறப்பினையும், பிறப்பினையும், நீக்குதற்கு மருந்தானபடியினாலே இதற்கு மலை மருந்தென்றும், சிவப்பு நிறமானபடியால் அருணகிரி யென்றும் பெயர் பெறும். இதை யொருதரம் பூமியிற் சொன்னவர் களுக்கு பஞ்சாக்ஷரத்தை மூன்றுகோடிதரம் உச்சரித்த பலன் தரும் என்றருளிச்செய்தார்.

## இலிங்க மூர்த்தி

இவ்வண்ணம் சுவாமி இயம்பினதைக் கேட்ட பிரமனும், விஷ்ணுவும் அளவுகடந்த சந்தோஷத்தையடைந்து ஸ்ரீ அருண சலேசுரரே, மலையாகிய உமக்கு ஆகாயத்தில் பெய்யா நின்ற மழையேயல்லாமல், ஜலங்கொண்டு வந்து அபிஷேகஞ் செய்கிறவர் களார்? நக்ஷத்திர கூட்டங்களே முத்துமாலை யாவதல்லது வேறே முத்துமாலை சூட்டுகிறவர்களார்? சூரிய கிரகணமே தீபமாவதல்லா மல் வேறே தீபங்கொண்டு வந்து காட்டுகிறவர்களார்? ஆனபடியி னாலே நாங்கள் அபிஷேக முதலானதுகள் செய்து பூசை செய்வ தற்கு இச்சு மலையின்கீழ் ஒரு லிங்க ரூபமா யெழுந்தருள வேண்டு மென்று கேட்டுக் கொண்டார்கள். அதற்குச் சுவாமி அப்படியே லிங்கமாகினோம் பத்தியுடன் பூசியுங்களென்று அந்த மலையினுள்ளே மறைவு கோலங்கொண்டு, எத்தேசமும் புகழும்படி அவ்விடத்தில் ஒரு லிங்கமாய்த் தோன்றினர். அந்த லிங்கமூர்த்தியைக் கண்ட

இருவரும் தோத்திரஞ்செய்து, புஷ்பவருஷம் பொழிந்து, பரவசமாய்ச் சந்தோஷத்தை யடைந்து ஆனந்தக் கூத்தாடினார்கள்.

## திருவண்ணாமலை நகரம்

உடனே பிரமனும், விஷ்ணுவும் தேவதச்சனாகிய மயனை யழைத்து ஸ்ரீ அருணாசலேசுரருக்கு கோபுரங்களும், மண்டபங்களும், மதிலுஞ் செய்வித்து, மிக்க வளப்பம் பொருந்திய நகரமும், முந்நூற்றறுபது வகையாகிய தீர்த்தங்களும் உண்டாக்கினார்கள். அந்த ஸ்தலத்தில் வழியாக ஜலத்தையுடைய ஆகாய கங்கையும், கற்பக விருக்ஷமும், கிணறுகளும், மரமுமான துகள்; தேவர்களும் ரிஷிகளும், மனிதரூபங் கொண்டு வந்து பிறந்தார்கள்; அரம்பாஸ்திரிகள் தாசிகளாகப் பிறந்தார்கள்.

அப்பால் பிரமன், விஷ்ணு இருவரும் காலையில் முழுகி மரவுரி தரித்துக்கொண்டு சிவந்த சடைகட்டி, விபூதியை திரேகமெல்லாந் தரித்து, ருத்ராக்ஷமாலை பூண்டுக்கொண்டு அன்ன முதலாகி திருமஞ்சனத்தினாலும், சந்தனத்தினாலும், மாலையினாலும், பக்தியினாலும், சிவபூசை செய்து, திருவண்ணாமலையை பிரதக்ஷணஞ் செய்து, வணங்கி, பின்பு பதினாலாயிர வருஷம் ஆனபிறகு சுவாமியினிடத்தில் விடை பெற்றுக்கொண்டு, தங்கள் பதிக்குப்போய்த் தங்களதிகாரத்தைப் பெற்றுக் கொண்டார்கள்.

ஓ மார்க்கண்டேயரே சுவாமிக்கு ஆசைக்கொள்ளும்படி அருணாசலஸ்தலம் அமைந்த பிறகு கைலை மலையிலிருக்குமாசை வெறுத்தது. இந்த மலையே பொன்னுருவுங் கொள்ளுமாயின் வெள்ளிமலையின் பேரில் ஆசையுண்டாகுமா? இத்தலத்தால் காசி முதலாகச் சொல்லப்பட்ட ஏழுஸ்தலங்களும் தேவலோகமும், சூரியனுதயமானதும் பிரகாசமிழந்த நக்ஷத்திரம் போல ஒளிமழுங்கிப் போனதுகள். இத்தகைய திருவண்ணாமலையின் சிறப்பை என்னால் சொல்லுதற் கரியதன்றும். எனக்குத் தெரிந்த அளவில் சிறிது உமக்குத் தெரியும்படிச் சொன்னேனே, இனி சொல்ல வேண்டியதென்ன வென்ன, மார்க்கண்டேயரும் சந்தோஷித்து நந்திகேசுரரை வணங்கி, சுவாமி இதுவரையிற் சொல்லியதைக்கேட்டு அளவுகடந்த சந்தோஷக்கடலில் மூழ்கினேன், இனி பார்வதியானவள் இமயகிரியில் அவதாரஞ் செய்ததும் சுவாமியைநோக்கி தவஞ்செய்து அவரிடபாகம் பெற்றதும், திருவுள்ளமுவந்து அருளிச்செய்ய வேண்டு மென்றார். அதற்கு திரு நந்திதேவர் நல்லது அப்படியே இயம்புகிறேனென்று சொல்லத் தொடங்கினார்.

## தக்கன் யாகம்

முன்னுளிலே பிரமாவினிடத்திற் பிறந்த தக்கனென்பவன் அரிய தபசுசெய்து உயர்வாகிய வரங்களைப் பெற்றுக்கொண்டு மிக்க பிரசித்தனுய் வாழுகிற காலத்தில், பார்வதியானவள் தன் னிடத்திற் பிறக்க, அந்த அம்மனைச் சுவாமிக்குத் திருக்கல்யாணஞ் செய்துக்கொடுத்து மாமனுகும்படி வரம் பெற்று அந்தப்படியே செய்தபிறகு, ஒருநாள் சுவாமியினுடைய சபைக்குப் போனுன். அப்போது அவ்விடத்தில் சுவாமி தனக்கு எழுந்து மரியாதை செய்யவில்லை யென்று சுவாமியை பலவாறுய் தூஷணை செய்துக் கொண்டு வீட்டுக்கு வந்து, சுவாமியைப் பார்க்கிலும் உயர்வை யடைய வேண்டுமெனக் கருதி, பன்னிரண்டு சூரியர்கள்-பதினேரு ருத்திரர்கள்-சப்த ரிஷிகள்-அஷ்டதிக்குப் பாலகர்-நாகலோகத்தார்-கின்னரர்-கிம்புருடர்-சித்தர்-யட்சர்-தேவர்கள்-முனிவர்கள்-பிரமன் விஷ்ணு-சரஸ்வதி இலக்ஷ்மீ முதலிய இவர்கள் சந்தோஷத்தை யடைந்து சுற்றிக்கொள்ள, எல்லோருக்கும் முதல்வராகிய பரம சிவனை நிந்தித்து, முடியக்கூடாத பெரிய யாகஞ் செய்யத் தொடங் கினுன்.

அப்போது பார்வதி தேவியானவர் தன் தகப்பனுகிய தக்கன் யாகம் பண்ணுகிறதைக் கேட்டு, பரமசிவனை வணங்கி, சுவாமி என் தகப்பன் யாகஞ் செய்வதைப் பார்க்க வேண்டுமென்ற எண்ணங் கொண்டேன். ஆனதால், பார்த்து வருவதற்கு உத்திரவு கொடுக்க வேண்டுமென்று கேட்க அதற்கு சுவாமி அம்மனை நோக்கி, பெண்ணே உன்னுடைய தகப்பன் புத்தியில்லாமல் என்னை மிகவும் நிந்தித்திருக்கின்றுனே ; அப்படியிருக்க, நீ போகலமா ? என்றுர். அதற்கு அம்மன் சுவாமி என் தகப்பன் செய்த குற்றத்தை பொருட்டு பொறுத்துக்கொள்ள வேண்டுமென்று நமஸ்காரஞ் செய்ய, சுவாமியும் அம்மனைப்பார்த்து நகைத்து நல்லது நீ போய் சீக்கிரத்தில் வந்து சேரென்றுர்.

பரமசிவனிடம் விடைபெற்ற பார்வதியானவள் தகப்பன் யாகஞ் செய்கிற இடத்திற்குப்போய், தன் தாயை வணங்கினுள் ; அவள் இந்த அம்மனைத் தழுவி உபசாரஞ் சொல்லாமலிருந்தாள் ; அதன்பின்பு கொடியவனுகிய தன் தகப்பனை வந்தனஞ் செய்ய, அவ னும் உபசாரம் யாதஞ் சொல்லாமல் நிந்தித்தான். ஆதலால் அம்ம னுக்கு அடங்காத கோப முண்டாகி, அடா உன் யாகசாலை வாழ்வு பேயிருந்து விளையாடுஞ் சுடலையாகிப் போகக்கடவதென்று சாபத் தைக் கொடுத்து, இந்த பாவிவளர்த்த தேகம் இருக்கப்படாதென்று யோகத்தினுலே தன்னுடைய தேகத்தை விட்டாள்.

## வீரபத்திர சுவாமி உற்பத்தி

இவ்வாறு பார்வதி தேகத்தை விட்டதைத் தெரிந்த பரமசிவன், ஆ இந்தப் பாவி தக்கனாலல்லவோ நமது தேவி தேகத்தை விடவும், நாம் தனிமையாக இருக்கவும் இந்த வருத்த மடையவுமானது என்று கோபித்துக்கொள்ளும்போது, அவருடைய நெற்றிக்கண்ணி லிருந்து ஆகாயமெல்லா மறைந்த தேகத்துடனே மேகத்தைப்பார்க் கினுங் கறுத்த நிறமும், மயிலினது நிறம்போன்ற மரகத ரத்தின மிழைத்த கிரீடமும் மேருவுக்குச் சமானமாகிய இடிபோல் முழங்கு கின்ற அக்கினிசுவாலையாகிய சொல்லின் வாயும், இரணியனைக் கொன்ற நரசிங்கத்தினுடைய தோல் உத்தரீயமாகவும், தாருகாவ னத்து ரிஷிகளால் விடப்பட்டு பரமசிவனால் மரணத்தையடைந்த யானையினது சர்மம் இடுப்புக் கச்சையாகவும்; நஞ்சு கொப்பளிக்க நெற்றிக்கண் கொதிக்கச் சிரசின்மேல் வைத்து கூப்பிய கைகளோ டும், ஆகாயமும், பூமியும் நடுங்கும்படி வீரபத்திரரானவர் தோன்றி, சுவாமி என்னை யழைத்தது யாது காரணம்? என்றார்.

அப்போது பரமசிவன் வீரனைநோக்கி, ஓ வீரபத்திரா நீ சலத்தை பொழியாமல் நெருப்புகளை கக்கும் மேகம்போல் போய்த் தன்னு டைய யாகத்தை யழித்து வாவென் றருளிச்செய்தார். அதைக் கேட்ட வீரன் அதிக சந்தோஷத்தை யடைந்து சுவாமியினது திரு வடிகளைத் தொழுது, அந்த க்ஷணமே பக்கத்தினின்ற பூத கூட்டங் களும், பேய்களும் சூழ்ந்து, விஷத்தைக் கக்கும் நாகங்களை மாலை யாகத் தரித்த பத்து பூதங்கள் நீலவர்ணமான ஆலவட்டம் வீசவும், திக்கிலிருக்கிற யானைகளெட்டையும் காதில் குண்டலமாகத் தரித்து வெள்ளைச் சட்டை யணிந்த நான்கு பூதங்கள் சாமரம் வீசவும் வட வாமுகாக்கினியை வயிற்றில் குடிகொண்டு பசிக்கு மேகங்களைப் பிழிந்து புசிக்கும் இரண்டாயிரம்பேர்கள் எக்காளம் பிடிக்கவும், ஆயிரம் பூதகணங்கள் முத்துக்குடைகள் பிடிக்கவும். இறந்திறந்து பிறக்கின்ற அனேககோடி விஷ்ணுவினுடைய கையிலிருந்த சங்குகளை அனேகம் பூதகணங்கள் வாயில் வைத்து ஊதவும்; அனேகம் பூதங் கள் ஆட்டுக்கடாவின் கொம்புகளையும், கலைமானின் கொம்புகளையும், எருமைக்கடாவின் கொம்புகளையும் வாயில் வைத்துக்கொண்டு சிங்க நாத மூதவும், ஆயிரம் ஆனைகளைக் கட்டியிருக்கின்ற தேரிலேறிக் கொண்டு புறப்பட்டார். அவ்வாறேகுங்கால் சில பூதங்கள் யானை ரூபங் கொண்டும்; சில பூதங்கள் தேரினுருவங் கொண்டும், சில பூதங்கள் குதிரையினுருவங் கொண்டும், சில பூதங்கள் மனிதருரு வத்தையும்; தேவருருவத்தையுங் கொண்டும், அனேக பேய்கள் அனேக வுருவங்களைக் கொண்டும் புறப்பட்டதுகள்.

இந்தப் பிரகாரம் வீரபத்திரர் புறப்பட்டவுடனே யுத்தஞ் செய்ய விரும்பி அவருக்கு முன்னே நடந்த பூதங்கள் ஏழு சமுத்திரத்து நீரடங்கலும் குடித்தாலும் விடாய் தீராமல் திரும்பும்; பாரமாகிய ஏழு லோகத்தையும், சாப்பிட்டு பசிபோகாமல் அலைந்து கொண்டிருக்கும்; கூர்மை பொருந்திய வேலாயுதத்தை எரிந்து யமனுடைய நாட்டை கொள்ளைகொள்ளும்; இப்படிப்பட்ட வலிமையுடையதுகள். அதிற் சில பூதங்கள் ஏழு மேகங்களையும் பிடித்துச் சிவந்ததலை மயிரிலே சுற்றிக் கட்டிக்கொள்ளும். அனேக பிரமாண்டங்களையும், புகையுண்டாக நெருப்பினாலே கொளுத்தும், எட்டுதிக்குந் தேடி யாகசாலை யெங்கேயென்று தேடும்; பிரசண்ட வாயுபோலக் கைகளைக் கொட்டிக்கொண்டு வீரபத்திரர் பின்னேயோடும். சில பூதங்கள் வெள்ளமாகிய சமுத்திரம்போன்ற மிகுந்த மதுவைப் பானஞ்செய்து அதனால் வீராப்புகொண்டு சண்டைக்கு எழுந்ததுகள். சில பூதங்கள் துள்ளிக்கொண்டு லோகமெல்லாஞ் சுற்றிவரும். சில பூதங்கள் நம்முடைய சுவாமியைத் தள்ளுகிறவர்கள் யாரென்று கேட்டு அவர்களைக் கொல்லுகிறதற்காக நின்று வீரநகை கொள்ளும். சில பூதங்கள் நித்திரை செய்யும். சில பூதங்கள் உடனே யெழுந்து அன்புகொண்டு சிவனைக் குறித்துப் பாடும். சில பூதங்கள் புள்ளாங் குழல், சிலம்பு, முரசு, சங்கங்கள், விருதாகிய உடுக்கை முதலான வாத்திய முழங்கவும், பெரியமணி, தவண்டை, மிர்தங்கம் சப்திக்கவும், வழிமுழுதும் போய்த் தக்கனுடைய யாகசாலையைக்கண்டு எல்லா பூதகூட்டங்களுடனே அதிதியினுடைய பிள்ளைகளாகிய சகலதேவர்களையும் தூக்கி வாரி வீசினதுகள்.

அப்போது மேகவாகனனாகிய தேவேந்திரனும்; ஆட்டுக்கடாவிலேறுகின்ற அக்கினியும், எருமைக்கடா வாகனனாகியயமனும் பேய்வாகனனாகிய நிருதியும், மகரவாகனனாகிய வருணனும், மான்வாகனனாகிய வாயுபகவானும், அளகாபுரியை யாண்டு விமானத்திலேறுகின்ற குபேரனும் எருது வாகனனாகிய ஈசானியனுமாகிய எட்டுப்பேர்களுந் தேரிலேறி எதிர்த்துக் கொண்டுவந்த வீரபத்திரருடைய பூதகணங்களை யெதிர்த்து, பாணம், சூலாயுதம், வேல், உலக்கை, வச்சிராயுதம், மழு, சத்தி இதுகளை பிரயோகஞ்செய்தார்கள். அப்போது எட்டு பூதங்கள் புறப்பட்டுத் திக்குப்பாலகர் எட்டுபேரையும், அவர்களேறிய வாகனங்களெட்டையும் அம்மானைக்குச் சமானமாக எடுத்தெரிந்ததுகள், அப்படி எறிபட்டு விழுந்த எட்டுபேரும், அந்த எட்டு பூதங்களும் கீழேவிழவும், மற்ற பூதங்களெல்லாம் ஓடிப்போகவும் யுத்தஞ் செய்து வெற்றி மாலை சூட்டிக்கொண்டார்கள். அதுகண்ட வீரபத்திரசுவாமி யானவர் எட்டு பாணத்தை பிரயோகஞ் செய்ய, அதுகள் போய் எட்டு பேர்களுடலைத் துளைத்து, அவ்வுடல்களுள் இருக்கிற அமுர்தத்தைப்

புசித்து சஞ்சரித்தது கள். அப்போது தேவேந்திரன் குயில் ரூபங் கொண்டு ஓடினன். ஈசானன், குபேரன் நிருதி, வாயு, வருணன், இவர்கள் தோற்று வெட்கத்தை யடைந்தார்கள்; யமனவன் இறந் தான்; அக்கினி பகவானுடைய ஏழு கைளும் அறுபட்டது.

இன்னும் வீரபத்திரர், யாககர்த்தாவாகிய கலைக்கோட்டு மகா ரிஷி பிராணனுந் தேகமும் வேருகக் கொன்று உடலை யுரித்து எறிந் தார். உடனே பார்வதியின் தாயாகிய தக்கனுடைய பெண்சாதி யின் இரண்டு காதையும் அறுத்துத் தள்ளிவிட்டு, மாமனகிய தக்க னிடம் போய், தேவர்கள் கூடிச் சோபமானஞ் செய்கிறதை நீக்கித் தனக்கு வீரமே பாணமாகும்படியாக சாலையிற் புகுந்து யாகஸ்தம் பத்தைப் பிடிங்கிக்கொண்டு, எதிர்த்த தக்கனுடைய தலையை மலை போல அறுத்துத் தள்ளினர். அப்போது அந்த பூதங்களிலொன்று அரைநொடியிலே தானே அந்தத் தலையைத் தின்றுவிட்டது. அத் துடன், மாடுகளிலேறுகின்ற பசுப் போன்ற உருத்திரக் கூட்டங்கள் பிராணனையும், அஷ்டவசுக்களுயிரையும், மற்ற தேவர்களுயிரையும், குரங்குகள் போல் ஒளித்துப் பதுங்கியிருந்த முனியீசுரர்களுடைய பிராணனையும், வீரபத்திரர் விட்ட சூலாயுதம் எடுத்து எடுத்துத் தின்றுவிட்டது. அப்பால் வீரபத்திரர், சூரியனுடைய பல்லும், கண்ணும தெறித்து கீழே விழும்படி யடித்தார்; சரஸ்வதியைப் பிடித்து இரண்டாக காக்கை யறுத்தார்; இலட்சுமியை மூக்கறுத் தார். தன்னுடைய வீரகண்டாமணி தரித்த காலினலே சந்திரனை மிதிக்க, அவன் நசுங்கித் தக்கனுடைய யாகசாலை நெருப்பை மிதித்த படியினலே அந்த வெப்பந்தீர அப்பிய வெண்ணெய் போலானன்.

இவ்வாறு வீரபத்திரராலும்; பூதகணங்களாலும் இறந்துபோன தேவர்கள் கரிய வுடம்பினையுடைய பிசாசாகி மறுபடியும் யாகத்திலே மாயமாய்த் தோன்றி எழுந்து சண்டை செய்ய, அவர்களை வீரபத்தி ரர் சேனைகள் அடித்துக் கொன்றார்கள். ஆனபடியினலே, பேயா கிப் போகியுந் துன்பம் நீங்கவில்லை. பிரமனலே விதிக்கப்பட்ட தக்கனுடைய யாகசாலை நாசத்தை யடைந்தாலும், அதற்கு உபயோக மாகும்படி வைத்திருந்த சோறு, எள்ளு, பொரி, கடலை, ஒரு பூதம் வாயிற் கொட்டிக்கொண்டு நெய்க்குடங்களை யெடுத்து மடமட வென்று விட்டுக் கொள்ளும்போது, அதனுடைய வயிறே ஓம குண்டமாகவுங், உதராக்கினியே நெருப்பாகவுமிருந்து. அஷ்டதிக் குப் பாலகரும், அஷ்ட வசுக்களும், தலைவராக வந்த குருக்களும், முட்டுப்பட்டவராகிய முப்பத்து முக்கோடி தேவர்களும் இறந்த போது அவர்களுடைய தேகம் வீணுகப் போகாமல் வீரபத்திரருக்கு முன்னே அவருடைய சேனைகள் சாப்பிட்டபடியினலே அந்த பூத கணங்களுடைய வயிறு யாகசாலையை யொத்திருந்தது. கற்ப காலத் திலும் அழிவில்லாத பூதகணங்களின் மிதியுண்டு அப்பமாகிய தேவர்

கள் உடம்பில் நின்று பீரிட்ட ரத்தமானது யாகத்திற்கு நெய் யெடுத்து சொரிதல் போலிருந்தது. பல பலயட்சர் சித்தர்களுடைய வயிறு பிதுங்கி வெளிப்பட்ட குடல் சிந்தியிருப்பது சர்ப்ப யாகஞ் செய்தலைப் போலிருந்தது.

இப்படி திக்குப்பாலகர் முதலாய தேவர்களிறக்க, பிரமனானவர் நொடிப் பொழுதிலே அவர்களைப் படைத்துக்கொண்டே இருந்தார். தேவர்களும் மறுபடியும் வீரபத்திரரோடு எதிர்த்து யுத்தஞ்செய்துக் கொண்டே யிருந்தார்கள். இதை யறிந்த வீரபத்திரர் இனி இவர்களைப் படைக்காமலிருக்கும்படி, பிரமனுடைய கைகளை அறுத்துத் தள்ளி, அவர் மனதில் உண்டாகிய பத்து பிரமாக்களுடைய தலையையும் தன்னுடைய முத்தலை ஆயுதத்தால் அறுத்துத் தள்ளினார்.

உடனே விஷ்ணுவானவர் ஆ! இப்படியாச்சுதா வென்று, தன்னுடைய கருட வாகனத்தின்மே லேறிக்கொண்டு வந்து, வீரபத்திரர் மார்பிலுந் தோளிலுந் தாக்கும்படிக் கருதி அனேக பாணங்களை வருஷித்தார். அப்படி விட்ட பாணங்களை யெல்லாம் வீரபத்திரர் தன்கை பாணத்தினாலே கண்ட துண்டமாக அறுத்துத் தள்ளினார். அப்போது விஷ்ணு இவருடன் வில்யுத்தம் செய்ய சக்தியில்லாமல் மிக்க கோபத்தோடு ஒரு கத்தியை எடுத்து சுழற்றி வீச, வீரபத்திரர் அந்த கத்தியை தான் ஒரு பாணத்தால் கண்டித்ததுடன், ஒரு பாணத்தை விட்டு அவர் ஏறிவந்த வாகனமாகிய கருடனையுங் கொன்று விட்டார். அதற்கு விஷ்ணு அதிக துக்கத்தையடைந்து தன் கையிலிருந்த சக்ராயுதத்தைப் பிரயோகஞ் செய்தார். அந்தச் சக்ராயுதம் முன்காலத்திலே விஷ்ணு ஆயிரந் தாமரை மலரைக்கொண்டு பரமசிவனைப் பூசித்து வருகிறபோது, இவர் பக்தியை பரிசோதிக்க வேண்டி அதில் ஒரு பூவை சுவாமி மறைத்து வைத்தார். அதுகால் விஷ்ணுவுக்கு ஒரு புஷ்பங் குறைவுபட அதற்குப் பதிலாக தன்னுடைய தாமரைப் பூவையொத்த ஒரு கண்ணைப் பிடுங்கி சுவாமிக்கு அர்ச்சித்தார். அதன்பொருட்டு சுவாமிக்கு மிகுந்த சந்தோஷமுண்டாகி அவருக்குத் தன்னுடைய சக்கரத்தை கொடுத்தார். ஆனபடியால் அந்த சக்கரம் பயந்து, நடு நடுங்கி வணக்கத்தோடு வீரபத்திரர் காலில் விழுந்து நமஸ்காரஞ் செய்தது. இதைக்கண்ட விஷ்ணு முன்னிலுந் துக்க சித்தைக் கொண்டு, இனிமேல் இந்த ரூபத்தோடே யிருக்கில் பிழைப்பது அரிதென்றெண்ணி, தன்னுடைய சுய உருவை மாற்றி பன்றியாகவும், சிங்கமாகவும் ரூபமெடுத்து யுத்தஞ் செய்ய, அவ்வுருவங்களை வீரபத்திரர் வாளாயுதத்தால் வீச அதன் பின்பு மீனுருவ மெடுத்துக்கொண்டு சமுத்திரத்திலே விழுந்து ஒளித்துக்கொண்டார். முன்கைகளறுப்புண்ட பிரமனுடைய நான்கு தலைகளை யறுத்து இறக்கச்செய்து தேவர்களையும், முனிவர்களையுந்

தண்டத்தால் அடித்துக் கொன்றார். அந்தசமயம் பூதகணங்கள் இறச்சி யருந்துவதற்கு ஓமகுண்டம் பாத்திரமாகியது.

இவ்விடத்தில் வீரபத்திரர், இவ்வண்ணமாக யாகசாலையோடு சர்வத்திரபேரையும் நாசப்படுத்தி, பிற்பாடு கைலாயத்துக்குப் போய்ச் சுவாமியினுடைய பாதங்களிலே வணங்கி அங்கே நடந்த சமாச்சாரமெல்லாம் ஆதியோடந்தமாகச் சொன்னார். அதுகேட்ட பரமசிவன் கோபமாறி கிருபைகூர்ந்து, யாகத்தி லிறந்தவர்களனை வரையும் பிழைக்கச்செய்து, அவரவர் இடங்களை அவரவர்களுக்கு பழயபடியே அருளிச்செய்ய, அவர்களும் சுவாமி! நாங்கள் விவேக மில்லாமல் செய்த குற்றத்தைப்பற்றி பொறுத்துக்கொள்ளவேண்டிய தென்று நமஸ்கரித்து விடைபெற்றுக்கொண்டு போனார்கள். குற்றம் பொருந்திய தக்கனுக்கு மாத்திரம் நிந்தை செய்ததற்கு அப ராத அடையாளமாக ஆட்டுத் தலையை அவனுடைய உடலில் பொருந்தவைத்து எழுப்பினர்.

## பார்வதியார் திருவவதாரம்.

முன்னேயோகத்தினாலே திரேகத்தைவிட்ட பார்வதியானவள் எப்பொழுதும்போல் பரமசிவனிடத்தில் வீற்றிருக்கவேண்டி, இமய பர்வதராஜன் தபோமகிமைக்கும்; மைநாக னென்கிற பிள்ளையைப் பெற்ற மேனாதேவியினது தவமுயற்சிக்கும் பரமசிவன் கிருபை கூர்ந்ததற்கு இணங்க, அவ்விருவருக்கும் பார்வதியானவள் குமா ரத்தியாக திருவவதாரஞ் செய்தாள். அதுகால் தேவர்களெல்லாம் கற்பக புஷ்பங்களை வருஷித்தார்கள், சித்தாந்தமாகச் சொல்லப்பட்ட சிவனிடத்திலே ஒன்றுபட்ட அபின்ன சத்தியாய்ப், பின்பு அச்சிவத் தில் நின்று அபின்னசத்தியென்று வேறுபட்டு பிறகு; ஞானசத்தி, இச்சாசத்தி, கிரியாசத்தியென்று மூன்று வகையாகிக் குடிலையினா லுண்டாகிய நாதவிந்துகளுக்கு கொழுகொம்பாகியும், சுவாமிக்கு முத்தாகியும், பரமசிவனிடத்தில் உருத்திரன்-விஷ்ணு-பிரமன் முத லானவர்கள் உண்டாகிறதற்கு மூலமாகிய வித்தாகியும், எங்கும் நிறைந்த பார்வதியைப் பெற்றவர்களுடைய தவப்பெருமை இவ்வள வென்று அளவிடக்கூடுமோ? அப்பெற்றோர்கள் பார்வதியை நாளொருமேனி பொழுதொருவண்ணமாக வளர்த்துவர, பார்வதியும் நாளுக்குநாள் வளர்பிறைபோல் வளர்ந்து, பலபல சாஸ்திராப்பியா சங்களிற் தேர்ச்சியடைந்து பந்து-கழங்கு-ஊசல் விளையாட்டு முத லானதுகளைச் செய்துக்கொண்டிருந்தாள்.

## நாரதர் ஜோதிடம்

இவ்வாறிருக்கிற காலத்தில் ஒருநாள் நாரதர் மலையரசனிடம் வந்து, உலகங்களை யெல்லாம் வயற்றிலே வைத்திருக்கும் பார்வதி

யம்மனுடைய இலக்ஷணங்களைப்பார்த்து, ஓ பர்வதராசனே! உம்முடைய குமாரத்திக்கு சில பொழுதிலே நெற்றியில் ஒரு பக்கத்திலே அரைக்கண் தோறும்; ஒரு கையிலே சூலமுண்டாகும்; ஒரு பக்கத்து மார்பு மறைந்துபோகும் பாதி சரீரம் பச்சைநிறம் போய்ப் பவளநிறமுண்டாகும்; கூந்தலிற் பாதிச்சடைகளாகும்; ஒரு கையிலே வளையல்கள் இல்லாமற் போகும் என்றார். இதுகளைக் கேட்ட பர்வதராஜன் உள்ளமுருகிச் சந்தோஷத்தை யடைந்து, பார்வதியே நமக்குப் பெண்ணாக வந்தபடியினாலே பரமசிவன் மருமகனாகி வரவேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டிருந்தான்.

## பரமசிவன் யோகம்

அக்கால், எல்லாத் தேவரிலுமுயர்ந்த விஷ்ணு பிரமன் முதலியவர்கள் ஒழிவில்லாத் தவசுசெய்தால் அவர்களுக்கு வேண்டிய வரத்தைக் கொடுத்தருளும் பரமசிவன், சனகர்-சனந்தரர்-சனற்குமாரராகிய நால்வர்களுக்கும் மற்றவர்கட்கும் யோகம் இப்படியென்று காட்டும் பொருட்டு யோகத்திலிருந்தார். இது தெரிந்த பர்வதராசன் தனது குமாரத்தியாகிய பார்வதியையும், சில தோழிப் பெண்களையும், அழைத்துக்கொண்டுபோய், சுவாமிக்கு நமஸ்காரஞ் செய்து, சுவாமி! என்னுடைய குமாரத்தியை தங்களுடைய தவசின் பொருட்டு ஏவல்செய்ய ஒப்புக்கொள்ளுமென்று ஒப்பித்துவிட்டு போக அம்மனும் பழம்-புஷ்பம்-தருப்பை-திருமஞ்சன முதலானதுகளைக்கொண்டு தன்னுடைய பாங்கிமார்களுடனே புலமணி விடையுஞ் செய்துக் கொடுத்தாள்.

## மன்மத விஜயம்

இவ்விடத்தில் இந்தப் பிரகாரமாக யிருக்க, எல்லாத் தேவர்களும் தேவேந்திரனுங் கூடி பிரமனிடஞ் சேர்ந்து தொழுதார்கள். பிரமன் அவர்களுக்கு இருக்க ஆசனங்கொடுத்துப் பிற்பாடு அவர்களுடைய முகஞ்சோர்ந்திருப்பதையும் குங்குமம் பூசியிருக்கிற தோள்கள் இளைத்திருப்பதையும், வச்சிராயுதம் ஒடிந்துப்போயிருப்பதையும், ஈசானனுடைய மழுவாயிதத்தின்வாய் மழுங்கிப்போயிருப்பதையும், யமனுடைய சூலாயுதம் வளைந்துப்போயிருப்பதையும், மற்றவர்கள் ஆயுதம் முறிந்துப் போயிருப்பதையும், தேவர்கள் சிரசிலே யிருக்கிற மகுடம் பிடுங்கப்பட்டிருப்பதையும் பார்த்து நீங்கள் யாது காரணத்தால் இப்படிப்பட்ட வருத்த மடைந்தீர்களென்ன, அவர்கள் கொடியவனாகிய தாருகாசூரன் இவ்வாறு செய்தானென்றார்கள் அதற்கு பிரமன் ஓ தேவேந்திரன் முதலியவர்களே! யமன்-அக்கினி-வாயு-விஷ்ணு இவர்களாலும் என்னாலும், உங்களாலும் அந்தத் தாருகாசூரனைக் கொல்லக்கூடுமோ? கூடாது.

அச்சூரனைக் கொல்லுவதற்கு சிவனுடைய பிள்ளையாய் இமாசல புத்திரியான பார்வதியினிடமாக சிவசுப்பிரமணியர் பிறப்பார்; அவர் தான் தாருகாசூரனைக் கொன்று உங்களுடைய சிறையை மீட்பார்; அதன்பொருட்டு யோகத்திலிருக்குஞ் சிவனானவர் பார்வதிக்கு மங்கிலியதாரணஞ் செய்யும்படிச் சீக்கிரத்தில் முயற்சி செய்யுங்களென்று சொன்னார்.

உடனே தேவர்களெல்லாம் அமராபதிக்குவந்து மன்மதனை நினைக்க, அவன் தென்றலாகிய தேறிலேவந்து சேர்ந்து, தேவர்களே! என்னுடைய தவத்தை யழிக்கட்டும்; எந்த பெண்களை மயக்கட்டும் என்னையாது நிமித்தமாக அழைத்தீர்கள் என்றான். அப்போது தேவேந்திரன் மன்மதனைத் தழுவி உபசாரத்துடனே நோக்கி ஓ மன்மதா? சிவபெருமானுடைய தவத்தை யழிக்கும்படி உன்னை யழைத்ததென்று சொன்னான். இந்தச் சங்கதியைக்கேட்ட மன்மதன் மிகுந்த கோபத்தோடும், பரமசிவனுக்கு பயப்பட்டும், ஓ தேவேந்திரனே! சிவன், ஆண்-பெண்-அலி-என்கிற மூன்றுமற்றவர் பிறப்பு இறப்பு இல்லாதவர்; சாக்ஷிப்பிரமாணத்தினாலும், ஆகம பிரமாணத்தினாலும், கருத்தினாலும், இப்படிப் பட்டவரென்று நிதானிக்கக் கூடாதவர் அப்படிப்பட்டவருடைய தவத்தை யழிப்பதற்கு யார் வல்லவர்கள்? அம்மனோகன்னிகை; சிவனோ குற்றமில்லாத பிரமசாரி; இவர்களிரண்டு பேர்களுடைய சந்நிதி மகிமையினாலே சகலவுயிர்களு முண்டாகி விருத்தியாகும், முன் எப்படி சுவாமியினிடத்திலிருந்து சீவன்கள் உண்டாச்சுதுகளோ, அப்படியே அவரிடத்திலே ஒடுங்கும். அதை யறியாமல், சங்காரத் தொழில் செய்வதனாலே சிவன் தமோ குணத்தை யடைவரென்று சொல்வார்கள்; அப்படியன்று, அதி உயிர்களுடைய இளப்பை யொழிப்பதாகும்; மற்ற தேவர்களுக் குண்டாயிருக்கிற மும்மச் சம்பந்தமில்லை: இவருடைய சொரூபம் மிகவும் நெருப்பாம். அவர் மேல்நான் புஷ்ப பாணத்தை விட்டால் அதுகள் புகையாகக்கரிந்து போய்விடும் என்று கூறிவிட்டு, பயங்கொண்டவனாகி தன்னுடைய ஸ்தானத்திற்குப் போகப் புறப்பட்டான்.

அக்கால் தேவேந்திரன் மன்மதனை நோக்கி ஏ மன்மதா! விஷ்ணு தன்னுடைய மார்பிலே இலட்சுமியை வைத்திருப்பதும், பிரமன் தன்னுடைய நாவில் சரஸ்வதியை வைத்திருப்பதும், மகா தேவர் தன்னுடைய தலையிலே கங்கை என்கிற பெண்ணை வைத்திருப்பதும், சூரியனைச் சாரணையில் கடையச் செய்ததும், எனக்கு ஆயிரங் கண்கள் வரச் செய்ததும் உன்னுடைய சாமர்த்தியமல்லாது வேறுண்டோ? ஆனதால் எனக்காக அங்கே சென்று, சிவனை ஜெயித்து, அவருக்கு காம லாகிரி யுண்டாகும்படி செய்தால்

அத்தால் அவருக்குப் புத்திரனுண்டாகும்; அந்தபுத்திரன் அசுரர்களைக் கொன்று தேவர்களைப் பிழைக்கும்படி செய்வார். அதற்கு நீயே காரணமாயிருக்கிறாய். நான் சொன்ன வார்த்தையை மறுக்க வேண்டாமென்று கையைப் பிடித்துக்கொண்டு எனக்கு இந்த நல்லு வரத்தை மாத்திரம் கொடுக்க வேண்டுமென்று கேட்டார். அதற்கு மன்மதன் சந்தோஷித்து ஓ தேவேந்திரா! சிவனுக்கு வில்லானது மலையாயிருந்தாலும், விஷ்ணுவே பாணமாயிருந்தாலும், வாசுகியே நாணியாயிருந்தாலும், என்னுடைய கரும்பாகிய வில்லினாலும், ஐந்து புஷ்பங்களாகிய பாணங்களினாலும், நீலநிறம் பொருந்திய வண்டென்கிற நாணியினாலும், அந்தச் சிவனை வென்றுப்போடுகிறேன் என்று சொல்லிவிட்டு வந்தனஞ் சாற்றி சுவாமி யிடத்திற்குப் போகப் புறப்பட்டான்.

அப்படி மன்மதன் புறப்படும்போது ரபாதிய மலையிலிருந்து அவ்விடத்திற்றங்கிய சந்தண வாசனையுந் திவ்விய தமிழ் வாசனையுங் கொண்டு தென்றற்காற்று வந்தது; வசந்தமாகிய மந்திரியும் வந்து சேர்ந்தான்; சந்திரனும் கிரணமாகிய வெள்ளை வலையின் நான்கு பக்கமும் வீசினான்; புஷ்பக் கொத்துகளை யுடைய மாமரங்களிளெல்லாங் குயில்கள் முழங்கியது; மல்லிகை யரும்பே சங்கமாகவும், அவ்வரும்பில் சப்திகின்ற வண்டுகள் அச்சங்கத்தை வாயில் வைத்து ஊதுகிற வீரனாகவும் விளங்க, முல்லை-சண்பகம்-அசோகு-தாமரை-மா முதலிய புஷ்பங்களையும், தேனையும், நான்கு பக்கமு மிறைத்துக்கொண்டு, கடினமாகிய இரும்பு-கல்லு-செம்பு இதுகள் கூட உருகும்படி சொல்லுகிற வார்த்தையை யுடைய பெண்கள் குறிஞ்சியாழ் என்னும் வாத்தியத்தைக் கையிலே கொண்டார்கள்; மிகுந்த நக்ஷத்திரக் கூட்டங்கள் முகத்திலிருக்கிற புள்ளிகளாகவும், செவ்வானம் ஒரு திலகப் பொட்டாகவும், இருட்டாகிய யானையும், கிளியாகிய குதிரையும் நடக்க, பவளம் போன்ற வாயையுடைய ஸ்திரிகளான சுத்தவீரர்கள் தங்கள் தங்கள் கண்களாகிய கத்திகளை அசைத்துக் கொண்டு புறப்பட்டார்கள். வளைவாகிய கரும்பு வில்லையும், புஷ்பங்களாகிய ஐந்து பாணங்களையும், எடுத்துக் கொண்டு மனைவியாகிய இரதிதேவி கூடவர, இத்தகைய ஆடம்பரமாய் மீன்கொடியோடு புறப்பட்ட மன்மதன் பரமசிவன் யோகத்திலிருக்கிற வனத்தைச் சேர்ந்து, அவ்விடத்தில் யோகஞ் செய்கிற பரமசிவனைப் பார்த்து, இவரை எவ்வாறு செயிப்போமென்று பயந்து வெட்கத்தை யடைந்து நடுங்கினான்.

## காம தகனம்

பிறகு மன்மதன் நேரேவந்து, எதிரில் நின்று யுத்தஞ் செய்தால் என்னகேடு நமக்குண்டாகுமோ வென்று நினைத்து, சுவாமி

பின் பின்னே தெரியாமல் ஒளித்திருந்து எப்போது சமயம் வருமென்று எதிர்பார்த்திருந்தான். அது சமயம் பார்வதி சுவாமி யின் முன்னே பணிவிடைசெய்ய வருதலைக்கண்டு பெண்துணை நமக்கிருக்கிறபடியினாலே வெல்லக் கூடுமென்று சந்தோஷித்து மோகத்தையுண்டாக்கும் பஷ்பபாணத்தை விறைத்துவில்லைவளைத்து நாணேற்றிப் பாணங்களைத் தொடுத்தான். இன்னும் நாம் அதிகச் சண்டைசெய்தால் ஒரு கரும்பு உருவாகிய வில்லானது ஒடிந்தாலும் உலகத்தைப்பெற்ற பார்வதியின் இரண்டு கரும்புருவ மாகிய உண்டாகியிருக்கின்றதால், நமக்கு யாதொரு குறைவுமில்லை என்கிற செருக்கினாலே அனேக பாணங்களை விட்டான். அப்போது மூன்று புரத்தையுமெரித்த நகையாகிய அன்பையுடைய பரமசிவன் நெற்றிக் கண்ணாகிய ஒரு கணையைப் பிரயோகஞ் செய்தார். அக்கணை வக்குவமுனிவருடைய சாபத்திற்கிணங்க மன்மதனுடைய உடம்பை யெல்லாங் கொளுத்திவிட்டது. இவ்வாறு மன்மதனெறியக்கண்ட தேவர்களும், அஷ்டதிக்குப்பாலகரும் பயப்பட்டு ஒளித்துக்கொண் டார்கள். அதன்பின்பு பரமசிவன் பூதகணங்களுடன் அந்தவிடம் விட்டு கைலாயத்துக்கு எழுந்தருளினர்.

## பார்வதியார் திருக்கல்யாணம்

அப்பால் பரமசிவன், பார்வதியம்மை தன்னை விவாகம் செய்துக் கொள்ள தவஞ்செய்வதால், அவள் வந்தசோரச் சப்தரிஷிகளை யழைத்து, நீங்கள் பர்வதராசனிடம்போய்ச் சுவாமிக்கு உன் பெண்ணை விவாகஞ் செய்துக் கொடுங்களென்று கேளும் என்றனுப் பினர். அந்த ஏழு பேரும் பர்வதராஜனிடத்திற்குப் போய் இந்த சோபன சங்கதியைச் சொன்னார்கள்; சொன்னவுடன் பர்வதராஜன் சந்தோஷித்தான். அவன் பிள்ளையாகிய மைநாகன் ரிஷிகளைப் பார்த்து சிவன் என்ன ஜாதி? அவருக்குத் தாய் தகப்பன் யார்? அவர்களுடைய பெயரென்ன? அவருடைய குடிப் பெயரென்ன? அவரிருக்கும் ஊரெது? சொல்லுங்களென்று கேட்டான். அச் சொல்லை முனிவர்கள் கேட்டு நகைத்துச், சிவனே அளவிடக்கூடாத வர். அவரை இன்ன ஜாதி-குலம்-குடி-என்று யாரால் சொல்லக் கூடும். அவரோ யாவரையும் படைத்த பிதாவாகியதால் எல்லோ ருக்கும் உயர்ந்த ஜாதி யென்று சொன்னார்கள். அப்படி சப்த ரிஷி கள் சொன்னபிறகு பர்வதராஜன் முதலானவர்களெல்லாம் மகா சந்தோஷத்தை யடைந்து சிவனுக்கும் அம்மனுக்கும் விவாக பொருத்தம் முதலியவைகளைப் பார்த்து விவாககாலத்தை நிச்சயஞ் செய்துக்கொண்டு, முகூர்த்த வோலையும் எழுதிக் கொடுத்தனுப்பி னர்கள். அந்த ஏழு ரிஷிகளும் சுவாமியிடம் வந்து நடந்த சங்கதி யெல்லாம் சொன்னர்கள்.

உடனே பர்வதராஜன் பார்வதியம்மன் முகூர்த்த ஓலையை அனேக தூதர்கள் கையிற் கொடுத்தனுப்பிக்க, அவர்கள் அவ்வோலையைக்கொண்டு சப்தகுலபர்வதங்களுக்கும், கோடி முடி பொருந்திய மேருவுக்கும், சக்கிரவாளகிரிக்கும், சப்த சமுத்திரத்திற்கும், சித்தர்-சாரணர்-முனிவர்-தேவர் முதலானவர்களுக்கும், இன்னும் மற்றவர்களுக்கும் தெரிவித்தார்கள். ஓலையைக் கண்டவுடனே தேவர் முதல் யாவரும் கூட்டங் கூட்டமாக வந்து சேர்ந்தார்கள். அப்பால் எட்டு திக்கையுந் தேரினாலும், கொடிகளாலும், இடமில்லாமல் நிறைத்து விட்டார்கள்; ஆகாயத்தை விடமில்லாமல் விமானத்தினாலும், மாலைகளினாலும் மறைத்து விட்டார்கள். வீதிகளில் நீண்ட இலைகளையுடைய வாழைகளாலும், கமுகுகளாலும், நிறை நிறையாக நட்டு அலங்காரஞ் செய்தார்; மலையிலிருக்கிற புழுக்கைக் கறைத்துத் தரைகளெல்லாம் மெழுகினார்கள்; தோரணங்கள் கட்டினார்கள்; அதில் முத்து மாலைகளைத் தொங்க விட்டார்கள். ஆகாய கங்கையை கொண்டுவந்து பூரண கும்பம் வைத்தார்கள். நூதனமாகிய இரத்தின விளக்குகள் எற்றினார்கள். பிரம்லோகமும், அளகாபுரியும், தேவலோகமும், வைகுந்தமும் இதைக்கண்டு நாணும்படி சிங்காரித்தார்கள்.

இரத்தின தீபம்போன்ற பார்வதியம்மனை மலையிலிருக்கிற பெண்கள் கூடிக் கற்பகமலர் வாசனைச் சேர்ந்த கங்காசலத்தினாலே ஸ்நானஞ் செய்வித்து, இடுப்புத் துவளும்படி சேலை கட்டி, பிரகாசமாகிய ஆபரணங்களைப் பூட்டி, முத்து மாலையையும்; பரிமள மிகுந்த நறுமலர் மாலைகளையுஞ் சூட்டி அழகிய நெற்றியிலே திலகமிட்டு, வேத விதிப்படிச் சடங்குகளைச் செய்தார்கள்.

இப்படியிருக்க, வாசனை பொருந்திய புஷ்ப பாணங்களை யெய்த மாரனை நெற்றிக்கண்ணா லெரித்து அந்த பஸ்பத்தைப் பூசிய சுத்தராகிய பரமசிவனை மணக்கோலஞ் செய்யவேண்டி, பிரமன், விஷ்ணு முதலானவர்கள், சுவாமியின் இடைக்கு அயத்தின மயமாகிய வஸ்திரமும், கழுத்திற்கு கற்பகப் பூமாலையும், முன்னேயிருந்த சர்ப்ப ஆபரணத்தை நீக்கி மாணிக்க ரத்தினங்களாகிய ஆபரணத்தையும், சிரசிற்கு முத்துகளாலிழைத்த கிரீடத்தையும், காதிற்கு சூரியனைப்போன்ற இரண்டு குண்டலங்களையும், காலிற்கு நீலமணிகளைப் பதித்த சிலம்பையுந் தரித்து, சர்வத்திராலும் விரும்பத் தகுந்த அலங்காரஞ் செய்தார்கள்.

இவ்வாறு மணக்கோலங் கொண்ட பரமசிவன் விஷ்ணு உருவமாகிய ரிஷபத்திலேறினார். அப்பொழுது, அரம்பாஸ்திரிகள் மஞ்சளாரத்தி யெடுத்தார்கள். விஷ்ணுவானவர் சுவாமியின் முன்னே வந்து வணங்க, சுவாமி வாருமென்று திருவாய் மலர்ந்தருளினார்.

பிரமன் வந்து நமஸ்கரிக்க இரத்தினமு முத்துக்களுமிழைத்த கிரீடத்தை சற்றே யசைத்தார். தேவேந்திரன் வந்தனஞ் செய்ய புன்சிரிப்பு கொண்டார். மற்ற தேவர்களெல்லாம் வந்து வணங்கக் கிருபைக் கண்ணினலே பார்த்தருளினர். அப்பால் சுவாமிக்கு வெள்ளே வட்டக்குடை பிடிக்கவும், இரண்டு பக்கமும் சாமரம் வீசவும், விஷ்ணு பாக்கு வெற்றிலே முதலானவை வைத்திருக்கிற அடப்பை யெடுத்துக்கொண்டு ஒரு பக்கம் வரவும், தேவேந்திரன் படிக்கம் எடுத்துக்கொண்டு வரவும், பிரமன் ஆலவட்டம் வீசவும், தும்புரு நாரதரிரண்டு பேரும் இருபுறத்திலும் நின்று சங்கீதம் பாடவும், யமராஜன் பாதக்குரட்டைக் கையாலெடுத்துக் கொண்டு வரவும், வாயுபகவான் திக்குகளெட்டிலும் அகிற் புகை-சாம்பிராணி புகை காண்பிக்கவும், ஈசானன் உடைவாளெடுத்துக்கொண்டு வரவும், சூரிய சந்திரர் விளக்கெடுத்துக்கொண்டு வரவும், தேவகன்னியர் அனேகவஸ்திரம் வைத்திருக்கிற பெட்டிகளைத் தூக்கிக்கொண்டு வரவும், நாகலோகப் பெண்கள் நவமணிகளிழைத்திருக்கிற ஆபரணங்களைச் சுமந்துக் கொண்டு வரவும், கின்னரர்-கிம்புருடர்-வீணைவாத்தியஞ் செய்யவும், நான்கு வேதங்களும் சுவாமியெல்லோருக்கும் பெரியவரென்று முறையிடவும், சந்திரர் சூரியர் தவிரமற்ற ஏழுகிரகங்களும், அஷ்டவசுக்களும், முனியீசுரர்களும், களிகூர்ந்து வரவும் நாகலோகத்தார் - வித்தியாதரர்கள் - தேவர்கள்-பார்த்துச் சந்தோஷத்தை யடையவும், ஏகாதசருத்திரர்கள்- இரண்டுகரங்களாலும் புஷ்பவருஷம் பொழியவும், இலட்சுமி-சரஸ்வதி-இருவரும் பனிநீர் தெளிக்கவும், திக்குப் பாலகருடைய தேவிகள் அவரவர்கள் திசைகளிநின்று சேவிக்கவும், சத்தமாதர்கள் சோபனம் பாடவும் கிராமகளிர் வாழ்த்துச்சொல்லவும், வித்தியாதரமாதர்கள் பல்லாண்டு கூறவும். சுவாமி ரிஷபவாகனராய்ப் புறப்பட்டு யாவராலும் தோத்திரஞ் செய்யப்பட்ட கைலாயகிரியைவிட்டு இமையபர்வதத்தை யடைந்து, ஆகாயமும் பூமியும் எள்ளிருக்கவிட மில்லாமல் சேனைகளுடனே இமையபர்வதராஜன் பட்டணத்தில் வந்து சேர்ந்தார்.

இவர் வந்தபோது அந்த மலையிலிருக்கிற பெண்கள் சுவாமியின் அழகைப் பார்த்து, பார்வதிசெய்த தவசுக்கு ஒரு குறைவுமில்லாமல் பலன் சித்தியாச்சு தென்றார்கள். அவர்களிற் சிலர் யுத்தத்திற்கு வந்த மன்மதனை யெரித்த கண்ணெதுவோ அந்தக் கண்ணைப் பார்ப்போமென்றார்கள் சிலஸ்திரி ஜனங்கள் மன்மத தேகத்தை யுடையவனு யிருந்தபோது இவர் யோகத்திலே யிருந்ததினலே உலகத்திலுள்ள ஜனங்களெல்லாம் விகாரமின்றி அசந்துகிடந்தார்கள் மன்மதன் தேகம் போயும் இவர் போகத்திலே விருப்பங் கொண்டபடியினலே சகலருக்கும் போகத்திலே விருப்பமுண்டாச்சுது. ஆனபடியினலே, மோகத்தை யுண்டாக்குகிறவர் இந்தச் சிவனேயன்றி

வேறொருவருமில்லை யென்றார்கள். சிலமாதர்கள் மாயஞ்செய்கின்ற கரும்புவில்லை கையிற்பிடித்திருக்கின்ற மன்மதன் அழகு, இச் சுவாமியினுடைய வடிவமாகிய அழகில். ஆயிரத்திலொருபங்கு காணாது: அதனாலே அவனை யிகழ்ந்து தன்னைம்நித்துத் தீயினாலே அவனைக் கொளுத்திப் போட்டது. தபோமகிமையினாலே ஆராய்ந் தெடுக்கத்தகுந்த உத்தமர்களானால் அப்படிச் செய்வார்களோ? என்றார்கள்.

இவர்களிப்படியிருக்க, பர்வதராஜன் சுற்றத்தார் முதலிய, சேனைகளும் பரமசிவனுடைய சேனைகளும் மிகுந்த ஆசையோடு கூடினவர்களாய் எதிரேவந்து, ஒருவருக்கொருவராகத் தழுவிக் கொண்டார்கள். முதலுமீறுமில்லாத பரமனானவர் பிரமனிட கையைப் பிடித்துக்கொண்டு ரிஷபவாகனத்தினின்று இறங்கினார். இவர் இறங்கினவுடனே அழகு பொருந்திய அனேக பெண்கள் ஆலாத்தியெடுக்கவும் அஷ்டதிக்குப் பாலகரெட்டுபேரும் சுவாமியி னிருபுறத்திலும் நடந்தொதுங்கி வரவும், எல்லோருக்குந் திலக மாகிய விஷ்ணுவினுடைய இரண்டு கைமேல் தம்முடைய ஒரு கையைச்சேர்த்து இரத்தினங்களாலிழைத்த மண்டபத்தில் வந்து, அருமையாகிய அந்த மண்டபத்திலிட்டிருக்கிற ஆசனத்தி லெழுந் தருளினார். அப்போது மணக்கோலத்துடனிருக்கும் லோகமாதா வாகிய பார்வதியைச் சிவனுடைய வலப்புரத்திலே உட்காரவைத் தார்கள்.

இந்தப் பிரகாசம் சுவாமியும் அம்மனும் விவாகமண்டபத்தில் எழுந்தருளியிருக்க, அந்த வேளையில் பிரமனானவர் திருக்கல்யாண சடங்கை விதிப்படி முடிக்க, பரமசிவனானவர் அக்கினியிற் பொறி யிறைத்து நெய்யாகுதிபண்ணி, அம்மன் கையைப் பிடித்து அக்கினி யை மூன்றுதரம் வலமாகச் சுற்றிவந்து ஆசனத்தி லெழுந்தருளி, ஒப்பற்ற சங்கம் முழங்கவும், நான்கு வேதங்களுஞ் சப்திக்கவும், தேவர்களும், ரிஷிகளும் நான்கு புறமுஞ் சுற்றிக்கொண்டு புஷ்பமாரி யைப் பொழிந்து மங்களங்கூற திருக்கல்யாணத்தை முடித்தார். உடனே சர்வத்திரபேரும் சுவாகுதை வணங்கினார்கள். பார்வதி யானவள் தாயையும் தகப்பனையும் வணங்கினாள்.

அப்போது பிரமனும், விஷ்ணுவும், மற்ற சர்வத்திரபேரும், சுவாமி எல்லாரிடத்தும் வைத்த பிரியத்தைப் பார்த்துச் சுவாமி! நீர் முன்னே யெரித்த மன்மதனை யெழுப்பித்தரல் வேண்டுமென்று வேண்டினார்கள். அதற்குச் சுவாமி அப்படியே இறந்துபோன மன் மதனை யெழுப்பிக்கொடுத்துக் கிருபை செய்தருளினார் அப்பால் எல் லோரும் பரமசிவனிடம் விடைபெற்றுக்கொண்டு தங்கள் தங்க ளிருப்பிடம் போய்ச் சேர்ந்தார்கள்.

பிறகு சுவாமியும் அம்மனும் அன்புகொண்டிருந்து யானை முகத்தையுடைய விக்னேஸ்வரரையும், சிவசுப்பிரமணியரையும் பெற்றுள். அதன் பின்பு சுவாமியானவர் சிவசுப்பிர மணியருக்கு ஒரு வேலாயுதத்தை யருளிச்செய்தனுப்பிவிக்க அவர் போய், அந்த தாருகாசூரனை சம்மாரஞ்செய்து விட்டுவர சுவாமியும், அம்மனும், விநாயகரும், சிவசுப்பிரமணியரும், இமயகிரியை விட்டு நீங்கி, தேவர் முனிவர்களுடைய கண்கள் கூறக் கைலாயத்தில் எழுந்தருளி யிருந்தார்கள்.

## பரமசிவன் பார்வதி சரசம்

திருநாமங்கொண்டு கைலாயகிரியில் வீற்றிருக்கும் பார்வதியும், பரமசிவனும் ஒரு சமயம் ஒருவருக்கொருவர் அழகிய ஆபரணங்களை தரித்து சரசவார்த்தைகளைப் பேசிக்கொண்டும், ஒரு சமயம் பிணங்கிக்கொண்டும், அதைமறுபடியுந் தீர்த்துக்கொண்டும், மாலை களைச் சூட்டிக்கொண்டும், வேதசாஸ்திரங்களைத் தேவர்கள் முனிவர் களால் சொல்லக் கேட்டுக்கொண்டும், அவ்வேதத்தின் பொருளைச் சிலருக்குச் சொல்லிக்கொண்டும், வீணை முதலியவைகள் வாசித்துக் கொண்டும், சொக்கட்டானடிக் கொண்டும், மற்றும் பலபல விளை யாட்டுகளைச் செய்துகொண்டு மிருந்தார்கள்.

## திருக்கண் புதைத்தல்

அந்தச் சமயத்தில் பார்வதியம்மன் சுவாமியை வணங்கி ஐயா சுவாமி! சந்திர சூரியர்கள் யார்? என்று கேட்க அதற்குச் சுவாமி யும் பெண்ணே! இவர்கள் நம்முடையகண்களென்று சொன்னர். அதைப் பார்வதிகேட்டு வேடிக்கையாகச் சுவாமியினுடைய இரண்டு கண்களையும், தன்னுடைய இரண்டுகைகளாலே மூடினள். அப்போது; இருள் கூட்டத்தை யுருகச் செய்து பூசினதுபோல திக்குகளும், பூமியும் இருண்டதுகள்; மலைகளெல்லாம் நீலமலையைப்போல் கருத் ததுகள்; மணிகள் பொருந்திய நதிகளெல்லாம் யமுனு நதியைப் போல் கருத்ததுகள்; பிரமனும், விஷ்ணுவும், முனிவர்களும் அஷ்டவசுக்களும், நான்கு வேதங்களும், தேவர்களும், இந்திரனும் கண்ணினது பிரகாசமற்றுப் பிறவிக்குருடர்கள் போலிருந்தார்கள்; பசு, காளை முதலிய மிருகங்களும் பக்ஷிகளும் கண்ணொளியற்றது கள்; அறவறமில்லற மிரண்டும் ஒழிந்ததுகள் மற்ற எல்லாத்தொழில் களும் கெட்டதுகள். தேவர்களும், மனிதர்களும், இராக்ஷதர் நிறம் போலக் கறுத்தார்கள்: ஆகாயத்தில் இந்திரன் வாகனமாகிய வெள்ளை யானை கருப்பு நிறமாகியது; பிரமதேவன் கொடியாகிய அன்னம் காகம் போலக் கறுத்தது.

## முக்கண் பிரகாரம்

அப்படியெல்லாப் பொருளுங் கறுத்து மயங்குகிறகாலத்தில், மும்மூர்த்திகளுக்கு முதலாகிய பரமசிவனிடத்தில் எல்லோரும் போய் முறையிட்டுத் தங்கள் குறையைச் சொல்ல, சுவாமியும் பயப்படவேண்டாமென்று கையமர்த்தி பன்னிரண்டுகோடி சூரியருதயம் போல் தம்முடைய நெற்றிக் கண்ணைத் திறந்தார். அக்கண்ணின் பிரகாசம் ஏழுலோகத்தின் அந்த காரத்தையும் நீங்கியது. பார்வதியும்தான் பொத்திய கையானாள். அப்போது சுவாமியினுடைய மூன்று கண்களும் பிராமணர்கள் வளர்க்கும் யாகாக்கினிபோல் பிரகாசத்தை விளக்கிக்கொண்டிருந்தது.

உடனே பார்வதியம்மன் சுவாமியைப் பணிந்து, என்னை யேற்றுக்கொண்ட சுவாமியே! நெடிய சூலத்தை யுடையவரே! இயமனை மார்பிலேயுதைத்த மலர்போன்ற பாதத்தை யுடையவரே! ஆத்திமலையை.யணிந்த சடைக்காட்டினையுடையவரே! ஏழுலகமும் மேகநிறத்திலும் அதிக நிறமாய் இருட்டுண்டாக உமது கண்களை மூடிய கொடிய பாபமதைப் போக்கும் படியாகச் சமுத்திரஞ் சூழ்ந்த பூமியினிடத்தில் தவஞ்செய்வதற்கு ஒரு நல்ல இடம் அருள் செய்யவேண்டுமென்று கேட்டாள். அதற்குச் சுவாமி பெண்ணே! உன்னைப்பாவம் வந்து சேராதாயினும், மற்றவர்களுக்குப் பாவம் நீங்கும் பொருட்டுத் தவஞ்செய்ப இச்சித்தாயாகில், மதுராபுரி-காசி அவந்தி- துவாரகாபுரி- அயோத்தி- அவைகளிற்சிறந்தகாஞ்சிபுரத்திற் போய்ப் பூசையுடன் அரிய தவசுசெய்யென்று அருளிச் செய்தார்.

## கம்பாநதி லிங்கப் பூசை

அதைக்கேட்ட பார்வதியம்மன், சுவாமியை வணங்கி விடை பெற்றுக் கொண்டு, வீரலட்சுமி குடைபிடிக்கவும், ஜெயலட்சுமி பொன்னடப் பந்தாக்கி வரவும், அருந்ததியும் இலட்சுமியும் இரண்டு பக்கங்களில் சாமரம் வீசிக்கொண்டு வரவும், எட்டுதிக்குஞ் சந்திரனைப்போல பிரகாசத்தை வீசும் முத்துப்பல்லக்கின்மேலேறி யாவரும் விரும்புகின்ற காசிப்பதியைச் சேர்ந்து சுவாமியை வணங்கி, அத்தலத்தில் மழையில்லாமல் வருந்தாநின்ற சிவராசிகள் பிழைக்கும் பொருட்டு பல தருமங்களைச் செய்துக்கொண்டிருந்தாள்.

அப்பால் தொண்டை மண்டலத்தைச் சேர்ந்து மயில்கள் நடனஞ் செய்கின்ற சோலைகளையுடைய காஞ்சீபுரத்தை யடைந்தாள். அப்பட்டணத்திற் கட்டியிருக்கிற உப்பரிகைகள் அரம்பை முதலாகிய பெண்கள் விளையாடுவதற்கு ஒரு மலைபோல விருக்கும். அங்கு சிவாலயத்தின் கோபுரத்தில் கட்டியிருக்கிற கொடிகள் கற்பக விருக்ஷத்திற் படர்ந்த காமவல்லி யென்னும் கொடிக்குப் படருகிற

தற்குக் கொழு கொம்பாயிருக்கும். இன்னும் அங்கு பரதகாட்டிய மாடுகின்ற மயிலுக்குச் சமானமாகவும், கயிற்றுவழியாடுகின்ற சிங்காரப் பிரதமைபோலவும், இன்ப விளையாட்டைச் செய்கின்ற உடுக்கை போன்ற இடையினையுடைய பெண்கள் தங்களுடைய பதிகளோடு படுத்துப் புரளும்படி தாங்களணிந்திருக்கும் மரகத முதலிய இரத்தினாபரணங்களுறுத்த, அதன்மீது கோபித்து அவ்வுப்பரிகையில் நின்றும் வீசியெறிவார்கள். அவ்வாபரணங்கள் சமுத்திரத்திலே விழுந்ததினாலேதான் அது இரத்தினாகரமென்று பெயர் பெற்றது.

அம்மன் அத்தன்மையுடைய வீதியைக்கடந்து ஒப்பற்ற மா விருக்ஷத்தின்கண் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதரை வணங்கி, நெருப்பை யொத்த பாவங்கள் நடுங்கி ஓடிப்போ கவருகின்ற கம்பநதி யருகேபோய் அலங்காரமாய் மணலைக் குவித்து இலிங்கசொரூபமாக்கிப் பூசை செய்தாள், அப்போது பரமசிவன் அவள் தவத்தின் உறுதியையறிய அரிதாகிய கங்கையைப் பிரவாகமாக வரச்சொன்னார். அந்தக் கங்கை பூமியில் அகத்தியமுனிவர் கமண்டலங் கவிழ்ந்ததினால் வருகிற காவேரியோ? அந்த முனியானவர் ஆதிநாளையில் ஆசமனஞ்செய்து உமிழ்ந்த சமுத்திரத்தின் பெருக்கோ? குற்றமற்ற தவஞ்செய்யும் பகீரதனுக்காக சன்னுமுனிவர் இரக்கத்தினால் காதின்வழியாகவிடப் பெருக்கெடுத்துவந்த கங்காநதியோ? வென்று சந்தேகப்பட பெருக்கெடுத்து வந்தது. உடனே பார்வதி மணலால் செய்த இலிங்கத்திற்கு அபாயமுண்டாகுமென்று பயந்து வாசனை பொருந்திய சந்தனத்தை யணிந்த திருமார்பு உருகிக்குழையவும், தன்னுடைய தவத்திற்கு பின்னம்வராமல் நினைத்திருந்த துன்பமும், சுவாமி கூடாமற்பிரிந்த துன்பமும் தீரும்படி ஆசையோடு அணைபவள்போல வளையலை யணிந்த தன்னுடைய இரண்டு கைகளாலும் இலிங்கத்தைத் தழுவிக்கொண்டாள். அப்போது கம்பைநதியானது அருணாசலத்தை ஒருவேளை நினைத்தவர்களது நல்வினை தீவினைபோல் இரண்டாகப் பிரிந்து இலிங்கத்தைச் சுற்றிப்போனது. பார்வதியும் தழுவிய கைகளை எடுத்துவிட்டு, அருகில் சூழ்ந்த பாங்கிகளோடு புஷ்பமாலை சந்தனமுந் தரித்து வந்தனஞ் செய்தாள். அந்த அம்மை தன்னுடைய தடுக்கவைத்த குறிகள்போல் சுவாமிக்குத் தழும்புகள் விளங்கியது.

அச்சமயம் பரமசிவன், அரிமர்த்தன பாண்டியராசன் அடித்த தழும்பிருந்த தோள்களும், மூன்று காலத்திலும் வணங்குகின்ற தேவர்களுடைய கிரீடங்களின் தழும்பிருந்த திருவடிகளும், பார்வதி தழுவிய மார்புத் தழும்பும், வளைத்தழும்பு மிருக்கிற மார்பும், தேக முழுதும் திருநீறும்பொலிய ரிஷபவாகனத்தின்மேல் எழுந்தருளினார். ஆகாயத்தில் தேவர்கள் யாவரும் புஷ்பவருஷம் பொழியத் தேவ

துந்துபி முழக்கத்தோடு வேதங்கள் முழங்காநின்ற தேவேந்திரனும், விஷ்ணுவும், தேவர்களும் பார்வதியைத் தொழ, பார்வதி ரிஷபவாகனத்தின் முன்பாகப் போய் முதிர்ந்த பக்தியோடு மனமுருக பரமசிவனைத் தொழுதாள். பரமசிவன் அம்மனை நோக்கி பெண்ணே! உனக்கு வேண்டிய வரம் யாது? சொல்லென்றார். அதற்குப் பார்வதி, உமது இடபாகத்தை அருள்வேண்டும்; மற்ற யாதும் வேண்டிலேன் என்ன, சுவாமியும், பெண்ணே! என் கண்களை மூடியதினாலே அடைந்த பாவம் இந்தத்தலத்தில் இனிமையான பூசை செய்ததினால் நீங்கியது; இந்த மெய்ம்மையான ஸ்தலத்திற்குத் தென்பாரிசத்தில் இதற்கு மேலாகிய ஒரு திருநகரம் பிரகாசிக்கும்; அங்கே பிரமனும் விஷ்ணுவுந் தேட, பாதமும் சிரசும் அவர்களுக்குத் தெரியாமற்படி பூரணமாகிய ஞானவெளியாய் மேலுலகங் கீழுலகங்களெல்லாம் நிறைந்து ஒன்றாகி நிற்போம்; பூமியிலுள்ளவர்களும் மற்றவர்களுந் துதித்துய்ய மலையுருவா யிருப்போம்; நீ அவ்விடத்தில் வந்தால் நமது இடபாகத்தைத் தருவோம் வா! என்றார். பரமசிவன் இவ்வாறு திருவுள்ளம்பற்றிய அளவில் பார்வதியானவள் சுவாமி! கைலாசம், காசி இரண்டு ஸ்தலங்களிலும், இக்காஞ்சீபுரம் அதிகமென்று முன்னே அருளிச் செய்தீர், இப்போது இதைப்பார்க்கிலும் அருணசலஸ்தலம் அதிகமென் றருளினீர்; அத்தலத்துக்குச் சமானமும், அதிகமுமான வேறு ஸ்தலமுண்டோ? என்றாள். அப்படி பார்வதி சொன்ன வார்த்தையைச் சுவாமி மறுத்து நமக்குச் சமானமாகிய தெய்வமும், பஞ்சாக்ஷரத்திற்கு ஒப்பாகிய மந்திரமும், பொல்லாத பாவங்களைத் தீர்க்கும் அருணசலத்திற்குச் சரியான ஸ்தலமும் உலகத்தி லில்லையென்று திருவாய் மலர்ந்து, கைலாயத்திற்கு எழுந்தருளினர்.

உடனே பார்வதியானவள், சுவாமி! நான் தெரியாமற் சொன்னவார்த்தையைப் பொறுத்துக்கொள்ளுமென்று வணங்கி கம்பை யாற்றைவிட்டுக் காஞ்சீபுரத்தைக்கடந்து சுப்பிரமணியர், கணபதி, சப்தகன்னிகள், வயிரவர், சிவகணங்கள் சூழ்வும், இலட்சுமி கவரிவீசவும் பல்லக்கில் எழுந்தருளி, பூமிதேவிக்குச் சந்தோஷமுண்டாகவும், சரஸ்வதி தோத்திரஞ்செய்யவும், இரண்டுகாததூரம்போய் ஒருவெளியிடத்தில் இறங்கினாள், சூரியன் தன்னையாரென்று கேட்டதினால் நீலம்போன்ற கையும், மரகதம்போன்ற வடிவமும், தாமரைப்பூப்போன்ற உள்ளங்கையும், உள்ளங்காலும், பொருந்திய அம்மை சாபத்தினால் வருந்தினளென்றறிந்து, மேர்க்குச் சமுத்திரத்தில் விழுந்து அஸ்தமித்தான். சுப்பிரமணியர் அம்மையிருக்கிறதற்காக ஒருபந்தல் போட்டுவைத்தார்.

அதன்பின்பு, பார்வதி சுப்பிரமணியரைப்பார்த்து, வாழைமரத்தினால் பந்தல்போட்டு பன்னிரண்டுகைகளுஞ் சிவக்க வருத்

தத்தையடைந்தாயென்று பிரியவசனஞ்சொல்லி, இன்னும் ஒரு வேலையிருக்கிறது அது என்னவென்றால் 'சந்தியாவந்தனஞ் செய்கிறதற்கு நல்ல பரிசுத்தமாகிய சலம்வேண்டும்'; உன்கையிற் பிடித்திருக்கிற வேலாயுதத்தையேவி அழைத்திடென்றாள். அப்படிச் சொன்ன அளவில் சுப்பிரமணியர் அதிகபக்தியோடு வேலாயுதத்தையேவினார் அது போதவான், புத்திரான்டான், புருகூதன், போதன், பாண்டரங்கன், சோமன் வாமன் என்று சொல்லப்பட்ட ஏழு பேரையும், அவர்களிருந்த மலையையும் உருவி, நல்ல தண்ணீர் கட்லுக்குப்போய்ச் சலங்கொண்டுவந்தது. அந்த நதிக்குச் சேயாறென்றுபெயர்.

பார்வதியம்மன், சுப்பிரமணியர் வரவழைத்த ஆற்றிலே நீர்க்கடனெல்லாம் முடித்துக்கொண்டு வாழைப்பந்தலிலிருந்தாள். அப்போது சுப்பிரமணியர் அம்மனை வணங்கி இந்த ஆற்றுநீர் சிவப்பாயிருக்கவேண்டியதென்ன வென்று கேட்க, அம்மனும் குழந்தாய்! அனந்தபுரமென்கிற பட்டணத்தில் ஏழு பிராமணர்கள், அறியாதகாலத்தில் அனந்தம் தீவினைகளைச்செய்து, அதன்பின்பு நல்ல விவேகந் தோன்றியதால் இலைகளையே உணவாகக்கொண்டு பிரமனைக்குறித்துத் தவஞ்செய்தார்கள். அக்காலத்தில் பிரமன் அவ்வேழுபேர் முன்னேபோய் அடாபாவிகளே! நீங்களேழுபேரும் ஏழுமலைகளில் விதிமுறையாகத் தவஞ்செய்வீரானால், அம்மைக்குச் சலம்வேண்டிய நிமித்தியத்தால் சுப்பிரமணியர் வேல்விடுவார், அதனால் உங்கள் சடையோடுங்கூடிய சிரசுகளும் பாவங்களும் பொடியாகப்போமென்று சொல்லி விட்டுப்போனார். அவர்களும் அந்தப்பிரகாரந் தவஞ்செய்தார்கள். இப்போது நீவிட்ட வேலாயுதம் அவ்வேழுபேரையும், அவர்களிருக்கிறமலை யேழையும் பிளக்க, அதனால் வழிந்தொழுகுகின்ற அவர்களுடைய இரத்தத்தோடு சலங்கலந்து சிவந்துவிட்டது. இதுபற்றி உனக்கொரு குற்றமுமில்லையென்றுசொல்ல, சுப்பிரமணியர் அம்மனை வணங்கிச் சந்தோஷத்தோடிருந்தார். அவ்வளவில் மலையில் தவஞ்செய்துகொண்டிருந்த முனிவர்களுடைய இரத்தத்தினாற் சிவப்பு நிறத்தையடைந்தது போல்ச் சிவந்தது செவ்வானம். சுவாமியினுடைய கண்களை முன்னே மூடியதால் உலகமெல்லாம் பரவியவிருள், ஒருவனுக்கு மறுமையில்வந்து பிடித்துக்கொள்ளுகிற பாபத்தைப்போல், அந்தத் தலத்தில் பிறகுவந்து அம்மையைப்பிடித்தது போலிருண்டது. பார்வதியோ முத்துப்பந்தலின் கீழிருப்பாளென்று தேவர்கள் போட்டுவைத்த முத்துப்பந்தலை யொத்திருந்தது நக்ஷத்திரங்களால் நெருங்கப்பட்ட ஆகாயம். மாலைக்காலமென்கிற துர்க்கையானவள், இருட்டாகிய மகிடாசூரன் தலையையறுத்து, அதனால் செவ்வானமென்று சொல்லப்பட்ட இரத்தக்கோலத்தோடு பொருந்திய ஸ்படிக

லிங்கத்தைக் கைக்கொண்டதுபோலச் சந்திரனுதயமாகி மேற்குத்திக்கி லஸ்தமித்தான்.

அன்றிரவு கழிந்ததும் நீலகண்டராகிய பரமசிவனது இரண்டு நேத்திரங்களையும் அம்மன் புதைத்த அளவில் நான்கு திக்கும் பரவிய எல்லாவிருளும் போகும்படியாக விழித்த அச்சுவாமியினது நெற்றிக்கண்போலச் செம்மைநிறம்பொருந்திய சூரியன் கிழக்கு திக்கில் உதயமாகிறான் பார்வதிகங்கைக்குச் சமானமாகிய சேயாற்றில் காலைக்கடனை முடித்துக்கொண்டு, பொன்மயமாகிய பல்லக்கிலேறிக்கொண்டு, வேதகோஷ்டம் முழுங்கிட சென்று திருவண்ணாமலையைப் பார்த்துச் சாஷ்டாங்கமாகச் சேவித்துக்கொண்டு, வடக்கு வீதியி லெழுந்தருளி அருணாசலேசுரரை வணங்கி; கோயிலுக்குள் சென்று அருணாசலத்தி லெழுந்தருளியிருக்கிற ஞானசொரூபரைத் தரிசித்து நமஸ்கரித்து, உருக்கத்தையடைந்து, திரும்பி பலசத்திகளுடனே தலைச்சுரமென்கிற மலைச்சாரலை யடைந்தாள்.

அங்கு வெகுகோடிபேர் ஊசிமுனையிலே ஒருகாலினுடைய விரலை யூன்றிக்கொண்டு ஒருகாலைமடித்து, மூக்கு நுனியிலே கண்களைச்சேர்த்துப்; பஞ்சாக்கினியைவளர்த்துப், பிரகாசமான அமிர்த தாரணைசெய்து, பிரமமந்திரத்தின் வழியாய்வருகிற அமிர்தத்தைச் சாப்பிட்டு விஸ்வாமித்திரன் போலத் தவஞ்செய்வார்கள். அனேகங் கோடி பேர் மும் மலங்களைநீக்கி வினையையுந் தீவினையையுஞ் சாடி, மனமென்பது இறந்து; தற்போதங்கெட்டு, சிவசொரூபமாய் மோக்ஷம்பெறும்படி ஆசைக்கொண்டு முற்றோராசையுமின்றி சிவ ஞானம் பெறுவார்கள். கோடான கோடிபேர் அடியார்களோடு ஆகமங்களிற்சொன்ன விதிமுறைப்படி சூரியன்முதல் சண்டேசுரர் அந்தமாகப் பூசைசெய்து, தேவருக்கெல்லாஞ் சுவாமியாகிய சிவபெருமானுடைய பஞ்சாக்ஷரமந்திரத்தை யோதி, மனமகிழ்ந்து கிரியைகளை நடத்துவார்கள். அனேக கோடிபேர்கள் அஷ்டாங்க யோகங்களின் வகைகளையறிந்து அவைகளைத் தேகசிரமப்பட்டு முயல்வார்கள். இப்படி மகத்தாகிய தவத்தினை யுடையோர்கள் செய்யும்செயல்களையும், குளிர்ந்த அருவிகளையும் பார்த்து மனமகிழ்ந்துக்கொண்டுவரும் பார்வதியம்மன் அவ்விடத்தில் இராநின்ற கௌதமருடைய ஆசிரமத்தில்வந்து சேர்ந்தாள்.

அக்கௌதமருடைய ஆசிரமத்திற்கு அம்மன் வந்தவுடனே, அவருடைய பெண்சாதி அகலிகையும், புத்திரராகிய சதானந்தரும் வந்து பணிந்தார்கள். அம்மன் ஆசீர்வதித்து கௌதமர் எங்கேயிருக்கிறார்? என்று கேட்க, சதானந்தரும் அம்மா! அவர் தருப்பைக்கொண்டு வருகிறதற்குப் போனார்; தாங்கள் க்ஷணப்பொழுது இவ்விடத்திலிருந்தால் இதோ அழைத்துக் கொண்டு வருகிறே

னென்று சொல்லி, அம்மனுடைய பாதங்களைத் தொழுது, தன்பிதாவாகிய கௌதமரை அழைத்துவரப் போனார்.

இவர் போகிறபோது, தருப்பையைக் கொய்து அனேக முனிவர் சூழ கௌதமர்வர, அப்போது அவ்விடத்திலெல்லா விருக்ஷங்களும் புஷ்பித்துக் கற்பக விருக்ஷம் போலக் காணுகிற படியினாலே நம்முடைய வனமல்லவே இது யாருடைய வனம்? என்று சந்தேகப்பட்டு பார்த்தார். இந்த இடத்தில் வந்த பெரியோர்கள் யார்? என்று பிருகு ரிஷியும், பராசரும், அத்திரி யென்பவருங் கேட்க, கௌதமர் தம்முடைய பிள்ளையாகிய சதானந்தரைக்கண்டு இவ்விடத்திலுண்டாகிய விசேஷம் என்ன? வென்று கேட்டார். சதானந்தர், தகப்பனாராகிய கௌதமரைப் பார்த்து ஐயா! பிரமன் முதலாகிய ஐவரையுந்தன்னிடத்தி லுண்டாகிய ஜோதிசொரூப பராசக்தி இவ்விடத்தி லெழுந்தருளியிருக்கிறாள் என்று சொல்ல, கௌதமரும் மறைகள் தேடுதற் கரியதேவி நமது குடிசையில்வர யென்ன தவம் பண்ணினோம்! என்று உள்ளமுருகி, இந்த வார்த்தையைச் சொன்ன சதானந்தரைக் கட்டியணைத்து; ஓடினார்; திருக்கூத்தாடினார்; சந்தோஷமென்னுஞ் சமுத்திரத்திலாழ்ந்தினார்; பாடினார்; கையிலிருந்த தருப்பையை கீழே விட்டெறிந்தார்; என்னுடைய பாவம் வேருடனே கெட்டுப்போயிற்றென்றியம்பி பார்வதியம்மனிடம் வரத்துணிந்தார்.

உடனே அத்திரி முதலாகத் தலைமையுற்ற ரிஷிகளெல்லாரும் வந்து பார்வதியம்மனுடைய பாதத்தில் விழுந்து நமஸ்கரித்து! தாயே! நீயோ கன்னிகை சுவாமியோ நித்திய பிரமசாரியென்று, சிருஷ்டி தொடங்கி இதுவரைக்கும் வேதங்களெல்லாஞ் சொல்லிக் கொண்டிருக்கின்ற எல்லாவுயிர்களுந் தோன்றி உன்னைத்தாயென்று சொல்லும். நித்தியமாக விருக்கிற சிவபிரானை முதலில் உண்டாக்குவாய். பிறகு அச்சிவனிடத்திலே சத்தியாக வருவாய். அப்பால் சத்தி சிவமென்கிற தன்மையைக் கொண்டு உயிர்களையெல்லாம் பெறுவாய். அத்துவித சொரூபமாயுமிருப்பாய் பரமசிவன், மகேசுரன் உருத்திரர்-பிரமன்-விஷ்ணுவானால், நீ, மகேஸ்வரி உருத்திரி-சரஸ்வதி-இலட்சுமியாவாய் அச்சிவபிரான் இப்படி யல்லாமல் இன்னும் எப்படிப்பட்ட உருவங்கொண்டாலும், அதற்குத் தகுந்த உருவங்கொள்ளுவாய் இப்படிப்பட்ட உன் பெருமையையார் அறிய வல்லவர்கள்? என்று புகழ்ந்து தோத்திரஞ் செய்தார்கள். அச்சமயத்தில் கௌதமர் பார்வதியம்மன் சமீபத்தில் வரும்போதே இரண்டு கைகளையுஞ் சிரசில் வைத்துக்கூப்பி லோகமாதாவின் இரண்டு பாதங்களினும் நமஸ்கரித்து தாயே! பிரமன் அஷ்டதிக்குப் பாலகர் சிரத்திலே வைத்ததற்கு அருமையான பாதமிரண்டும்

அடியேனுடைய சிறுவீட்டில் மிதிக்க என்ன புண்ணியஞ் செய்தேன்? என்றார். அதற்குப் பார்வதி கௌதமரே! எனக்கோர் குறைவந்தால் சுப்பிரமணியரிடத்திலும்; கணபதியிடத்திலுந் தீர்த்துக் கொள்வேன்? அவ்விடம் விட்டால் என்பேரில் அன்பு வைத்த உன்னிடத்தில் வந்துதீர்த்துக் கொள்ளுவேனென்றும், பரமசிவன் சொன்னபடி தான் பூமியில் வந்த சமாச்சாரத்தையெல்லாம் பாயிரத்தோடு கூடிய நூல்போலவுஞ் சொன்னாள். அதற்குக் கௌதமர் அம்மா! நீர் சொல்லியதற்கு இந்தஸ்தலம் முதன்மையான ஸ்தலம். இதனுடையபேர் தலேச்சுரம், இது மிகவும் உத்தமமானது. இதில் ஒரு புண்ணியத்தைச் செய்தால் ஒன்று பலவாய் விருத்தியாகும். இதிலிருந்துக் கொண்டு நீ மெய்யாகிய தவசு செய்தால், பரமசிவன் ரிஷபவாகனத்தின்மேல் எழுந்தருளி உனக்கு இடபாகத்தை கொடுப்பார். இந்தமலையில் விஷ்ணு பிரமன் அஷ்டவசுக்கள், தேவேந்திரன், அனேக முனிவர்கள் தவசு செய்து தாங்கள் நினைத்த காரியத்தை முடித்துக் கொண்டார்கள். நீவந்த காலமும் இடமும் நன்மையாகும்; நீ இவ்விடத்தில் தவஞ் செய்தால் கைப்பலமாகி முடியும் என்ன, அம்மனும் இவ்விடத்திலேயே தவசு செய்து என்கருத்தை முடித்துக் கொள்ளுகிறேனென்று பிரிய வசனஞ்சொல்லி விடை கொடுத்தாள்.

## பார்வதியார் தவசு

அப்பால் பார்வதி அருணாசலத்திற்குக் கிழக்குப் பக்கத்தில் பர்னசாலை புதிதாகச் செய்வித்து, மனங்களித்து சத்தமாதர்களைப் புறக்காவலாக வைத்து, நான்கு வாசலையும் எட்டு வைரவர்கள்காக்கவும், விநாயகர், சுப்பிரமணியர் தன்னிரண்டு பக்கங்காக்கவும், துர்க்கை உட்பக்கங்காக்கவும், தன்னுடைய புஷ்பங்களைத் தரிக்கின்ற கூந்தலைச் சடைசெய்து விரித்துத், தோள்-கழுத்து-காதுகளில்-ருத்திராக்ஷமாலைகளைத் தரித்து, மரவுரிதரித்து, சர்வாங்கமும் திருநீறு பூசி, அக்கினி மத்தியிலேயிருந்து, நெருப்பில் காய்ந்து பளபளவென்று பிரகாசிக்கும் ஊசியில் ஒருகாற் பெருவிரலை யூன்றிக் கொண்டு, இராப்பகலாக மனதிலே பரமசிவனைத் தியானமாக நிறுத்த அரிதாகிய பெரியதீவச்தைச் செய்ய முயன்றாள். அப்படிச் செய்கிறபோது அம்மனுடைய வருத்தத்தை நீக்கி சரஸ்வதியானவள் இளைத்து களைத்து, மனது துடித்து, கண்களை மூடிக்கொண்டு கண்ணீரால் மூழ்கினாள். இலட்சுமியானவள் மனது வருந்தி சஞ்சலப்பட்டு அழுது விழுந்தாள் மற்ற ஜீவராசிகளெல்லாம் மனங் கரைந்து உருகியதுகள். நான் இதைப் பிரித்துப் பிரித்துச் சொல்லுவதினாலென்னபயன் தாயானவள் வருந்தி வாளாயின் கருவாகிய ஜீவன்களெல்லாம் வருத்தத்தை யடையாதோ? அப்போதவ்விடத்தில் பிரமனும், விஷ்ணு முதலிய தேவர்களும் வந்து பார்வதியை

வணங்கினார்கள். பார்வதியானவள் விஷ்ணு முதலான தேவர்களெல்லாருக்கும் உபசாரஞ் சொல்லி நீங்களிவ்விடத்திற்கு வந்த காரணமென்ன? வென்று கேட்க, அவர்களும் மகிடாசூரனாலே தாங்கள் துன்பப்பட்டுத் தளர்ச்சியடைந்ததை விபரமாகச் சொன்னார்கள். அதற்குப் பார்வதியானவள் துர்க்கையைக் கூப்பிட்டு நீ சத்தியினாலே அந்த மகிடாசூரனைக் கொன்று விடு என்று சொன்னாள். துர்க்கையும் அப்படியே செய்கிறேனென்றாள். விஷ்ணு முதலானவர் சந்தோஷமடைந்து பார்வதியை வணங்கி விடைபெற்றுக்கொண்டு சென்றார்கள்.

## மகிடாசூர சம்மாரம்

மகிடாசூரனென்பவன் அஞ்சனகிரியில் வாசஞ்செய்துக்கொண்டிருக்கிற ஒரு அசுரன். அவன் எல்லாரிலும் அதிகப் பராக்கிரமத்தை யுடையவன்; விஷத்தினுக்குச் சமானமுடையவன்; யமனுக்கும் யமனானவன்; நெருப்பைச் சுடத்தகுந்த தீமையுடையவன். அளகாபுரியில் குபேரன் தரித்திரத்தை யடைய அங்கிருக்கிற வளங்களை யெல்லாம் கொள்ளையிட்டவன், விஷ்ணு நித்திரைச் செய்கின்ற ஆதிசேடனைத் தலையும் வாலையும் ஒரு கையினாலே சேர்த்துப் பிடித்துக் கவண்போல்கொண்டு, அந்த விஷ்ணுவை கல்லாக்கி தூரத்திலே எறிந்து விளையாடுவான். அக்கினிதேவனைத் தள்ளிவிட்டு அவனேறுகின்ற ஆட்டை தன்பிள்ளைகளுக்குக் கொடுப்பான். சந்திரனை வாகனத்தோடு பிடித்து தன் கையால் நசுக்கிப் பிழிந்து அதனுடம்பிலிருந்து வருகிற தேவாமிர்தத்தைப் பானஞ்செய்வான். தேவேந்திரனுடைய வெள்ளை யானையின்மேல் திருவோலக்கம் வருவான். சூரியனுடைய தேரிலேறிக்கொண்டு பச்சைக் குதிரைகளேழும் நடக்கப் பவனியாக வருவான். நிருதியைச் சுமக்கின்ற பேய் வாகனத்திலேறிக்கொள்வான், நிணங்களாலே முழுகப்பட்டு இரத்தங்களைக் கொப்பளிக்கும் ஒரு வாளாயுதமெடுத்து சர்வத்திர சீவன்களையுங் கொல்லுவான். சோதிசொரூபமாகிய சிவனிருக்கிற கைலாசகிரியையுஞ் சாயச்செய்தான். அவன் எருமைமாட்டு முகத்தையுடையவனானபடியினாலே தெற்குத் திக்குலிருக்கிற யமனவன், எருமைக்கடாவி லேறாமல் காலினால் நடந்து திரிந்தானென்றால் அவனுடைய கொடுமை நம்மா லெப்படிச் சொல்லக்கூடும்.

அப்படிப்பட்ட மகிடாசூரன் மயனென்கிற தேவதச்சனால் இரத்தினகசிதமாகச் செய்யப்பட்ட மகிடபுரத்தில் பிரமனானவர் நித்தியம் அறுகும் அட்சதையுங் கொண்டுவந்து கொடுக்க வாழ்ந்துக் கொண்டிருந்தான். அந்நாளில் அந்த அசுரன் தின்னுகிற மாமிசத்துக்காக ஆயுதபாணிகளாகிய ஆயிரம்பேர்கள் யானை முதலாகிய மிருகங்களைத் தேடி வேட்டை மார்க்கமாகக் காட்டுக்குப் போனார்கள்,

அப்படிப் புறப்பட்ட ஆயிர மசுரர்களும் பார்வதி தவஞ்செய்துக் கொண்டிருக்கிற வனத்தில் வந்து சுற்றிக்கொள்ள, அங்கு காவலாக இருக்கிற அஷ்டவயிரவர்களும் அந்த ஆயிரம்பேரையுங் கொன்றார்கள். உடனே தூதர்கள் மகிடாசூரனிடஞ் சென்று ஆயிரம்பேர் இறந்ததையும், அம்மன் தவசு செய்கிறதையுந் தெரிவிக்க, மகிடாசூரனுக்கு பகையும் சிரிப்பு முண்டாகி இரண்டு கண்களும் நெருப்புப் பொறி பறக்க சிவந்தது. அப்போது அண்டகோளமும் கிறுகிறென்று சுழன்றது; அஷ்டதிக்கி லிருக்கிற யானைகள் தலையைத் தொங்கப்போட்டதுகள், தேவர் கூட்டம் நடுக்கத்தை யடைந்தது; யமன் பார்த்து ஒளித்துக்கொண்டான், ஆலகாலவிஷமும் கிளிர்ச்சி யடைந்தது அப்படிக்கோபிக்குமளவில் படைத்தலைவனாகிய நிகும்பாசூரன் எழுந்து மகிடாசூரனைப் பணிந்து, ஐயா! உம்முடைய கோபத்தை அற்பமாகியவர்கள் பொறுப்பார்களா? ஆதலால் இதோ நான் சென்று அவ்விடத்தி லிருப்பவர்களை யெல்லாம் என் கை வாளால் கொன்று வருகிறேனென்று சொல்லி, மேற்குச் சமுத்திரத்தின்மேற் கோபித்துக் கிழக்குக்கடல் சண்டை செய்ய புறப்பட்டது போலவும், மகாமேருவிக்கும், அகஸ்தியரிருக்கும், பொதியமாமலைக்கும் மத்தியிலே ஒரு பெரிய மேகம் எழுந்ததென்று சொல்லும்படியாகவும், யானைகளும், குதிரைகளும், காலாட்களும், தன்னோடு சூழ்ந்து வர, ஆயிரங் குதிரைகள் கட்டிய தேறிலேறிப் புறப்பட்டு பார்வதி தவஞ்செய்யும் வனத்திற்கு வந்தான்.

இவன் வருகிறபோதே தன்னோடுவந்த அசுரப்படைகள் அனேக மலைகளை விட்டெறிவதைக்கண்ட தாக்கணங்கு நோக்கணங்கு என்னு மிருவரும் அவளை வணங்கி ஆயுதபாணிகளாகப் போய்வந்த அசுரர்கள் தடுத்தார்கள். சண்டன்-ருத்திரன்-சோமன்-கபாலி சங்கரன்-கோதண்டன்-வீதன்-சித்திராங்கதன்-இவ் வெட்டுப் பேர்களும் அண்டகோளமுடைபட யானையைக் கொல்லுகிற சிங்கங்கள்போலக் கர்ச்சித்து, நிகும்பாசூரனும், அவன் மந்திரியும், தேருந்தவிர மற்றச் சேனைகளை யெல்லாம் நொடிப்பொழுதிலே கொன்றார்கள். இப்படியாக இறந்துபோகிறதைப் பார்த்த நிகும்பாசூரன் மிகக் கோபமுடையவனாகி தேரைவிடும்படி சாரதியைத் தூண்டி, தாங்கணங்கு-நோக்கணங்கு-இவர்களுடைய முகத்திலும், மார்பிலுந், தோளிலும், விலாவிலும் பாணவருஷம் பொழிவதுபோல் அனேக பாணங்களைப் பொழிந்தான். அப்போது தாக்கணங்கு யென்பவன் அவன்விட்ட பாணங்களை யெல்லாம் விலக்கி தன் கை வாளாயுதத்தால் சாரதியைக் கொன்று, அம்புகளைத் தொடுத்த நிகும்பன் கைகளை யறுத்து, அவனுடைய தலையையும் அறுத்துக் கொன்றாள்.

இந்த நிகும்பாசூரன் இறந்த செய்தியை தூதர்கள் மகிடாசூரனிடஞ் சென்று சொல்ல, அவனும் தன்னுடைய அருகிலிருக்கும்

கயிடவனைப் பார்த்து அடா! ஒரு காட்டில் சஞ்சரிக்கின்ற சிறிய பேய்களும், கணங்களும் நம்முடைய சேனைகளைக் கொன்றதாக வென்றால் சிவன்-பிரமன்-விஷ்ணு முதலானவர்கள் நாம் சொன்ன படி கேட்பார்களா? என்று சொல்லி, அதிகமாக நகைத்து, எழுந்திருந்து ஆயிரம் யானைகள் கட்டிய தேரிலேறி புறப்பட்டான். அவனுடன் பதினொருகோடி யானைப் பலத்தை யுடையவராகிய நீலன்-முதுகரன்-குருதி-அண்டன்-ஈசகன்-சண்டன்-முண்டன்-மது-கயிடவன்-தீக்கண்ணன்-புகைக்கண்ணன்-மாலி-என்னும் பன்னிருவரும் தங்கள் தங்கள் இரதங்களை நடத்தினார்கள். யானைமுகத்தை யுடையவர் நிவாதகர்வசகள், காலகேயர்கள், குதிரைமுகத்தை யுடையவர்கள் புலிமுகத்தை யுடையவர்கள், சிங்கமுகத்தை யுடையவர்கள் அசுரர் கூடிய ஆயிரம் வெள்ளம் நடந்தார்கள். இன்னும் ஐந்நூறு வெள்ளக் குதிரைகளும், இருநூற்றைம்பது வெள்ளத் தேரும் நடக்க, பேய்களும், காக்கைக் கூட்டமும், விருந்தகப்பட்டதென்று களித்துக் கூத்தாட, வெள்ளைக் கொடிகளாடப் புள்ளாங்குழல் பேரிகை முதலானதுகள் முழங்க வந்தேன் மகிடாசூரன் யென்ற கோஷ்டத்தோடு அம்மனிருக்கிற காட்டில்வந்து சேர்ந்தார்கள்.

இவ்வாறு மகிடாசூரன் வருகிறதைப் பார்த்து முனிவர் முதலானோரெல்லாம் பயந்து அம்மனிடஞ் சென்று முறையிட, அம்மனும் அவர்களுடைய பயங்களைத் தீர்த்து தன் சமீபத்தில் நின்ற துர்க்கையை யழைத்து உன்னுடைய கத்தினாலே கொன்றுவிடென்று சொன்னாள். அம்மனிடம் உத்திரவுபெற்ற துர்க்கையானவள் உடனே ஆளிவாகனத்தி லேறிக்கொண்டு, அருணநாயகி முன்னே போகவும் காளி-துந்துபி என்கிற இருவரும் பின்னே வரவும், பார்வதியினது கணங்களும், ஞாளிமேல் வயிரவர்களும், அபிராமி முதலான சத்த மாதர்கள் தங்கள் தங்கள் வாகனங்களிலும் புறப்படவும் சென்று, உலக்கையினாலும், மலைகளாலும், வில் முதலிய ஆயுதங்களினாலும், கோபத்துடனே போர்செய்து, மகிடாசூரனுடைய பாதிசேனைகளைக் கொன்றுவிட்டார்கள். மகிடாசூரனும் அவனுடைய சேனைத் தலைவர்களும் மலைபோல் எதிர்த்து துர்க்கையினுடைய சேனைகளை யெல்லாந் துரத்திக் கொன்றார்கள். மகிடாசூரனுடைய படைகள் எதிர்த்து யுத்தஞ்செய்த அளவில் துந்துமி-காளி-மதங்கி-சண்டி-என்கிற நான்கு சத்திகளுந் தோற்றார்கள். சூலி-நீலகண்டி-வராகி-சண்முகி-திரிக்கையாள்-இந்திரை-மறையாள்-என்கிற எழுமாதரும் யுத்தஞ்செய்ய மாட்டாமற் காட்டிலெரித்தார்கள், வயிரவர்களுந் தோற்றார்கள். துர்க்கையானவள் மனந்தளர்ந்து அம்மனே துணையென்று அம்மனைத் தியானித்தாள். அப்போது அறுபத்துநான்குகோடி யோகினிகள் ஆகாயத்தில் ஆர்பரித் தெழுந்து நெருப்பு மழையையும், இடிமழையையும் சொரிந்தது. அதனால் மகிடா சூரனுடைய

சேனைகளெறிந்து போனதுகள். அப்பொழுது மகிடாசுரனுடைய சேனைத்தலைவர்கள் கோபமாகி எதிர்த்து சண்டைசெய்ய "அபிராமி என்பவள் அருசிகனென்பவனையும், வாரணியென்பவள் காந்தனென்பவனையும் சண்முகியென்பவள் சுரனென்பவனையும், நாரணி என்பவள் நாகனென்பவனையும், சூலபாணியென்பவள் மிண்டனென்பவனையும், நீலகண்டியென்பவள் மதுவென்பவனையும், இந்திரையென்பவள் நீலனென்பவனையும், துந்துபியென்பவள் சோணிதவூணனென்பவனையும், அருணாசலையென்பவள் அக்கினிக்கண்ணனையும், சுந்தரியென்பவள் கயிட்வனையுங் கொன்றார்கள்.

துர்க்கையானவள் மகிடாசுரனை யெதிர்க்க, அவனும் எதிர்த்து யுத்தஞ்செய்ய ஆரம்பித்தான். அப்போது அவன் விட்ட பாணங்களை யெல்லாம் சத்தமாதர்கள் தங்களாயுதங்களினாலே விலக்கினார்கள். அவ்வேளையில் துர்க்கையானவள் தன் கையிலிருந்த சங்கத்தை மகாமேரு அசையும்படி யூதினாள் அத்தொனியால் அசுரர்கள் ஒருவராவது இல்லாமல் மயக்கத்தை யடைந்தார்கள். அருமையாகிய வரத்தினாலே பெற்ற பாணங்களை இருவரும் மழை போலச் சொரிந்தார்கள். துர்க்கையானவள் எந்தெந்த பாணங்களை விட்டாலும் மகிடாசுரன் அதுகளை அந்தந்த பாணங்களினாலே அறுத்துத்தள்ளினான். அதன் பிறகு துர்க்கை இரண்டு அர்த்த சந்திர பாணங்களை அவனுடைய சிரசில் அழுந்தும்படி விட்டாள். அப்பாணங்கள் மகிடாசுரன் தலையிலே முளைத்திருந்த இரண்டு கொம்புபோல தலையிலே தைத்து அழுந்தி வளைந்து தோன்றினதுகள். உடனே மகிடன் துர்க்கையின் கைவில்லை இரண்டாக முறிக்க அவ்வில்லினாலேயே அவன் நெற்றியை யோங்கி அடிக்க அது அவன் நெற்றியிலே சுவாமியினுடைய கண்ணக்கினிபோல் சுறுக்கென்று தாக்கியது. இன்னுந் துர்க்கைக்கு வில்லொடித்த கோபத்தால் ஒரு சக்கராயுதத்தை விட்டு அவனுடைய தலை யறும்படி செய்தாள். அச்சக்கரம் மகிடாசுரனுடைய தேகத்தைச் சின்னபின்ன மாக்கியஞ் சாகாதவனாய், பூர்வகாலத்திலே செய்த தபோ பலத்தினால் மும்மதங்களைப் பொழியா நின்ற ஒரு பெரிய யானையுருவங் கொண்டு எதிராக வந்தெதிர்த்தான்.

அப்படி யானையுருவங் கொண்டெதிர்த்த அளவில் துர்க்கையேறுகின்ற யாளியானதுபோய் அந்த யானையுச்சியிலிருக்கின்ற மூளையைக் கையினாலே அறைந்து தோண்டி யெடுத்துத் தின்றது. அதினாலேயுஞ் சாகாமல் கையினாலே திரும்பியுந் தண்டாயுதங் கொண்டெறிந்தான். உடனே துர்க்கை தன் வேலாயுதத்தைவிட, அதுபோய் பாய்ந்த உடனே சகிக்கமாட்டாமல் இறந்தான். அப்படி இறந்து போனதும் குதிரைமுக அசுரனாகி எதிரேவந்து தண்டாயுதத்தினாலே அடித்தான். அடித்த தண்டாயுதத்தையும், அவ

னுடைய தலையையும் கத்தியினுலே அறுத்தாள். அதன் பின்பு மகிடா சூரன் நெருப்பு ரூபமாகவும், சலப்பிரளய ரூபமாகவும் அந்த காரமாகவும், பிரமனுகவும், விஷ்ணுவாகவும், இன்னும் பலபல ரூபமாகவும் வந்து எதிர்த்தான். அதுகளைத் தூர்க்கைப் பார்த்தவுடனே மாயையினுலே துன்பப் படுத்துகிறுன் என்ன உபாயஞ் செய்தாலும் சாகிறதில்லை; இனியென்ன செய்வேனென்று பார்வதியினுடைய இரண்டு பாதங்களையும் மனதிலே தியானித்தாள். அப்போது அனேக விதமான மாயவேஷங்களெல்லாம் சுபாவமான எருமை ரூபங் கொண்டபோது அவன் தலையை அறுத்துக் கீழே தள்ளி உனது காலினுலே மிதித்தால் அவனுடைய மாயை யொழிந்து இறந்து போவானென்று ஆகாயத்தில் அசரீரி வாக்கியஞ் சொல்லியது.

அவ்வார்த்தையைக்கேட்ட தூர்க்கையானவள் தேரிலேறி யெதிர்த்தாள். மகிடாசூரனும் அனேக ரூபங்கொண்டுவர, தன் கை சூலத்தினுல் கொன்முள். அப்பால் பழய எருமைக்கடா முகத்தையுடையவனுகி பலவித ஆயுதங்களைப் பிரயோகஞ்செய்ய, தூர்க்கையானவள் அதுகளை விலக்கி தனதுவாளாயுதத்தால் அவன் தலையை அறுத்துத் தள்ளிச் காலினுலே மிதித்துக்கொன்முள். தூர்க்கையம்மன் பாதத்தை நினைத்தாலும் அதை நினைத்தவர்களுடைய ஆணவமாயை காமியமென்கிற மும்மலங்களையும் நீக்கிவிடும். அப்படிப்பட்ட ஒப்பிலாத பாவம் பரிசாகும்படி ஊன்றிமிதித்தால் பொய்யாகிய மாயை மாத்திரந் தவிர்ப்பது பெரிதோ? அப்போது தேவர்களெல்லாம் புஷ்பவருஷம் பொழிந்தார்கள். மகிடாசூரனும் அம்மனுடைய கையினுலிறந்ததினுலே மெய்ம்மையாகிய மோக்ஷத்திற்சேர்ந்தான். அவன் கழுத்தை யறுத்தபோது அவன் கண்டத்தில் ஒருபடிகலிங்கமிருக்ககண்ட தூர்க்காதேவி அதனை யெடுத்துக் கொண்டுவந்து, உமாதேவியைத்தொழுது நடந்த காரியமெல்லாஞ் சொல்லி சுவாமியைக் கொடுத்தாள். அந்த லிங்கத்தை அம்மன் வாங்க, தேவர்கட்கெல்லாம் நாதராக விருக்கின்ற சுவாமியும் அம்மன் கைமேலேவைத்திருந்த ஆசையினுலே கையைவிடாமற் கெட்டியாகவிருந்தார்.

பார்வதியானவள் அந்த ஆச்சரியத்தைப்பார்த்து, மகிழ்ச்சியடைந்து, சுவாமியானவர் என்கையை விடாமலிருந்தது எதனுலேயென்றுகேட்க, கௌதமரும் வாயைக்கையினுலே பொத்திக் கொண்டு அம்மா! முற்காலத்திலே அகஸ்தியர் முதலான ஸப்தரிஷிகள்கூடி வரமுனியென்பவருடைய ஆசிரமத்திற்குப் போனார்கள். அந்தவரமுனியானவர் தம்முடைய தபோபலத்தினுலே மரியாதையாக உபசாரஞ் செய்யாமலிருந்தார். அப்போது எல்லா முனிவர்களும் அவர்மீது கோபித்து எங்களுக்கு அவமரியாதை செய்தபடியினுலே யாவராலுங் குறைவுசொல்லப்பட்ட கரியு

எருமைக்கடாவாகப் பிறக்கக்கடவாய் என்று சபித்தார்கள். அச்சாபத்தின் குரூரத்தைக்கேட்ட வரமுனியும் பயப்பட்டு, எழுந்து வந்தனஞ்செய்து, முனிவர்களே! தெரியாமல் நான்செய்த பிழையைப் பொறுத்துக்கொள்ளுங்களென்றார். அதற்கு நீர் எருமை முகம் அசுரனுகி அரசாளுங்காலத்தில், சுவாமியினது இடபாகத்தை பெறும்படி தவஞ்செய்துக்கொண்டிருக்கிற அம்மனுனவள் உம்முடைய சாபத்தை கொடிப்பொழுதில் தீர்ப்பாளென்று சொன்னூர்கள்.

அந்த முனிவர்கள் சொன்னபிரகாரம் வரமுனியானவர் அசுரகுலத்திற் பிறந்து, இராஜாவாகி, மகிடாசூரனென்கிற பெயரையடைந்து கொடுங்கோலரசு செய்துக்கொண்டு வருகையில் ஒருநாள் வேட்டையாடும்படியாக வனத்தில்வந்து மிகுந்த பசியினுலே இரையொன்று மகப்படாமல் ஓடித்திருந்து கொண்டிருக்க, அவ்விடத்தில் நீங்குதற்கரிய தவசுசெய்துக்கொண்டிருந்த மன்னதரிஷி என்பவன் எதிர்ப்பட்டான். அவனை அவனது கையிலிருக்கும் இலிங்கத்தோடே இந்த மகிடாசூரன் எடுத்து விழுங்கிவிட்டுப்போனுன். பின்பு அவன் கண்டத்திற் படிகலிங்கஞ் சிக்கிக் கொண்டிருந்தபடியினுலே மிகுந்த பெருமையை யடைந்திருந்தான். அந்த லிங்கமிருந்தகண்டத்தை யுடையவனும் சிவசொரூபமன்ரூே? நீ அவனைக் கொன்றபடியினுலே பாவஞ்சம்பவித்தது. அதற்கு நவதீர்த்தங்களாடினுல் அந்த பாவம் போகுமென்ரூர். இவ்வாறுசொன்ன அளவில்பாவந்தீர ஆடுதற்கு ஒன்பது தீர்த்தமும் இவ்விடத்தில் வரும்படிச்செய்யென்று ஆகாயத்திலிருந்து ஒரு வார்த்தை பிறந்தது.

அதைக்கேட்ட பார்வதியும் அருகிலிருந்த துர்க்கையின் முகத்தைநோக்கி உன்னுடைய கையிலிருக்கிற வாளினுலே பூமியைப் பிளந்து கங்கைவரும்படிச் செய்யென்று சொல்ல, ஜயகங்கையிற்றரித்த துர்க்கையும் அம்மனை வணங்கி வாளாயுதத்தால் பூமியிலே வீசியெடுத்தபோது ஒன்பது தீர்த்தங்களும், மற்றுமுள்ள நதிகளும் விடாயாறும்படி உதவிசெய்யும் நல்ல ருசியைக்கொடுக்கின்ற அனேக தடாகங்களும் உண்டானதுகள். அந்த நதியில் ஒருமாதம் வரைக்கும் தன்குற்றம் நீங்கும்படி ஸ்நானஞ் செய்துக் கொண்டிருந்தாள். கையைப்பற்றிக்கொண்டு விடாமலிருந்த லிங்கமும் நீங்கியது. அப்போது அம்மன்மனது சந்தோஷித்து கரையில்வந்து, அருவமாகியும், உருவமாகியும் விளங்குகின்ற ஒப்பற்ற சிவனை அந்தநதிக்கரையிலே எழுந்தருளச்செய்து, அர்ச்சனைசெய்து, நம்முடைய நல்வினை தீவினை இரண்டையுந் தீர்க்கின்ற சுவாமிக்கு "என்பாவந் தீர்த்தார்" என்று இயற் பேரைச்சூட்டி, அர்சுனைக்கு கடகதீர்த்தமென்று பெயரிட்டாள்.

## பார்வதியார் இடபாகம் பெறுதல்.

அப்பால் அருணசலத்தி லெழுந்தருளியிருக்கின்ற பரம சிவனை வணங்கவேண்டி கோயிலுக்குப்போய், பிரமதீர்த்தத்தில் முழுகி, விபூதிதரித்துச் சிவந்த கைகளைச் சிரமேல் வைத்துத் தண்ட னிட்டுத், தன்னருகேவருகிற கௌதமர்சொன்னபடி உள்ளே போய்க் குளிர்ச்சிபொருந்திய அமிர்தம்போன்ற சுவாமியைக் கண்ணாலே தரிசித்தும் பூமியிலே தேகம்பொருந்த நமஸ்காரஞ் செய்து எழுந்திருந்து, பரவசமாகிப்பாடி, உருக்கமடைந்து, களித்து, ஆனந்தக்கண்ணீர் பெருகிப், பெருமூச்செறிந்து, வலமாக வந்து தன்னுடைய குறையைச்சொல்லி வணங்கி, கார்த்திகை மாதத்தில் ஆகமத்தின்படி திருநாள்செய்து நெருப்புக்கண்ணை யுடைய சிவபிரானைப்பணிந்தாள். அவ்வளவில் மலைமேல் ஒரு பிரகாச முண்டாகி, அதிற் சொல்லுதற்கரிய பலகோடி பாலசூரியப் பிரகாசமாய் சுவாமியெழுந்தருளி இம்மலையை வலமாகவாவென்று கூறி மறைந்தார் அருகிலிருந்த கௌதமரும் வலமாகவருவாய் என்று சொல்ல, அம்மனைவள் மனதுகளித்து, அக்கினி மலையை எதிர் முகமாகத்தொழுது, சமுத்திரம்போல் வேதகோஷம் முழங்கவும், ஆகாயத்தில் பேரிகை-காகளம்-சல்லரி-மல்லரி-முரசு - துந்துமி- மத்தளம்-குடமுழா-முதலான வாத்தியங்கள் முழங்கவும், அரம் பை, ஊர்வசி, முதலான தெய்வலோகத்துப் பெண்கள் நாட்டிய மாடவும், நீரமங்கையர் சாமரமெடுத்து வீசவும். நாகலோகத்துப் பெண்கள் இரத்தினதீபங்களைக் கையிலெடுத்துக்கொண்டு வரவும், இலட்சுமியும், சரஸ்வதியும், இந்திராணியும் வழியிலிருக்கும் முள்ளு களையும் கல்லுகளையும் தள்ளிக்கொண்டுவரவும், பூமிதேவி கைகளை நீட்டிச் சாக்கிரதையாகத் தாங்கிக்கொண்டு வரவும். தேவஸ்திரி களும் புஷ்பத்திலிருக்கிற தேனருவியினலே வழிச்சேற்றை நீக்கி புஷ்பத்துக் குள்ளிருக்கிறதுகளைக் கொட்டி நல்லவழியாகச்செய்ய வும், கங்கையானவள் அம்மா ! உன்பாதமிரண்டும் பூமியிலே பட்டுக் கன்றிப்போய்விட்டது பொறுக்கவேண்டுமென்று இரண்டுகைகளை யுங் கூப்பவும், வலமாக நடந்து தெற்குதிசையையும் நிருதி மூலையையுந்தாண்டி மேற்குதிசையிற்போனள், குறைவில்லாத கீர்த்தியுடைய சுவாமியும் இளமையான ரிஷபவாகனத்தில் எழுந் தருளிவந்து தரிசனங்கொடுத்து நடந்தார். அப்பால் பார்வதி காணுதிக்கும் வணங்கும் அருணசலேசரது நடனபாதத்தை வணங்கி மேற்குத் திசையையும், வாயுத்திசையையுந்தாண்டி, வட திசையை மறுபடியுந்தொழுது, ஏற்றிலேறுகின்ற ஈசனுடைய திசையைக் கடந்து கிழக்கு திசைக்கு வந்தாள். அப்படி வந்தது இமோர்பர்வதத்தில் சுவாமி கலியாணஞ்செய்தபோது ஓமாக் கினியை வலம்வந்தபோலிருந்தது.

அப்போது பானுகம்பனென்பவன் தன்னுடைய ஆயிரங்கைகளினாலுஞ் சங்கத்தைவைத்து ஊதுகிற ஒலியும், விஷ்ணு வானவர் தமது சங்கத்தை வாயில்வைத்து ஊதுகிற சத்தமும்; நாரதர் வீணையை வாசிக்கிற சத்தமும், ஆகாய துந்துபியினுடைய சத்தமும் திக்குகளெல்லாஞ் செவிடுபடவும்தேவர் புஷ்பவருஷங்களைச் சொரியவும், கற்றையாகிய நீண்ட சடையில் தரியப்பட்ட இளமையாகிய பிறையினது சந்திரிகை பிரகாசிக்கவும், ஆபரணமாகிய சர்ப்பத்தின் தலையிலிருக்கிற மாணிக்கம் காந்தியை விரிக்கவும் உலக மாதாவாகிய பார்வதிக்குப் பாதி சரீரத்தைக் கொடுக்கிறதற்காக மத்தியாகப் பிடித்த ஏற்ற நூல்போல் புரியாகிய பூணூலானது மார்பிற் பிரகாசிக்கவும், வேதங்களாலும், அறியப்படாத பரமசிவன் ரிஷப வாகனத்தி லெழுந்தருளப், பார்வதி அந்தச் சுவாமி பாதத்தைத் தொழுது வணங்கினாள் எல்லாவற்றையும் நீக்கிய கடவுளானவர் அவ்வம்மையை நோக்கி உமையே! நீயும் நானும் பெண்ணு மாணுமாகி உலகத்தில் அனேகம் ஜீவராசிகளை வேறு வேறுண்டாக்கினோம். சமீபத்தில் ஆவிடையாரும் இலிங்கமுமானோம். நீ யென்றும் நானென்றும் வேறுபேதமில்லை. மரமும் அதற்குள்ளே யிருக்கின்ற வயிரமும்போல் ஒன்றுப்ச் சேர்ந்திருப்போம். .நீ உன் தேகத்தை விட்டு நம்பொருட்டாக இமயபர்வதத்திலே வந்து பிறந்தாய்; ஆனதால் இவ்விடத்தில் நாம் உனக்கு ஒரு பாகங்கொடுப்பது இயற்கையே. பெண்ணே! நம்முடைய இடபாகத்திற் சேர்ந்திரு என்று சொல்லி சந்தோஷமடைந்து கையினாலே அம்மனை அணைத்துக் கொண்டார். அணைத்ததும் சுவாமி தேகமும் அம்மன் தேகமும் உருகி ஒரு தேக்கமானார்கள். அப்போத் ஒரு புறம் பச்சை நிறமும், ஒருபுறம் பவளநிறமும், ஒருபுறம் கச்சணிதனமும், ஒருபுறம் அழகானமார்பும், ஒருபுறம் அபயமும், ஒருபுறம் வரதமுமாய் ஆசையோடு இருவரும் பொருந்துதலைப் பார்த்த தேவர்களெல்லாம் வணங்கினார்கள்.

இக்கதையைப் படிப்பவர்களும், காதிலே கேட்பவர்களும், சந்தன விருக்ஷங்கள் சூழ்ந்த பொதியமலையி லிருக்கின்ற அகஸ்தியர் போல் தமிழ்க்கடல் கடப்பார்கள். சந்தான பாக்கியத்தோடுஞ், சுற்றத்தாரோடும், உலகத்தில் வாழ்வரீர்கள். தங்களைப் பந்தமாகச் சூழ்ந்துக்கொண்டிருக்கிற தீவினையைத் தள்ளி நிலைபெற்ற மோக்ஷத்தைப் பெறுவார்கள்.

என்றிவ்வாறு நந்திகேசுரர் மார்க்கண்டேயரைப் பார்த்து என்னைப்பெற்ற பரமசிவன் சொன்ன சரித்திரத்தின் முறையிதுவென்றுசொல்ல, அந்த மார்க்கண்டேயரிஷி எழுந்து தெண்டம் செய்து பின்பு சுவாமி வச்சிராங்கத பாண்டியன் உயர்வாகி மோக்ஷம்

அடைந்ததைச் சொல்லுங்களென்று கேட்க, நந்திகேசுரர் சந்தோஷ மடைந்து சொல்லத் தொடங்கினர்.

## வச்சிராங்கத பாண்டியன்

சகல வளமும் பொருந்திய பாண்டிய நாட்டில், சந்திரகுல வம்சனகிய வச்சிராங்கத பாண்டியன் அரசாக்ஷி செய்துக் கொண் டிருந்தான் அந்த பாண்டியன் தேகத்திரியந்தமாக மன்மதன்போல் அழகு படைத்தவன் ; ஸ்திரிகள் விரும்பாநின்ற தோளையுடையவன் ; வியக்கத்தக்க வீரகண்டாமணியைக் காலில் தரித்தவன் ; சமுத் திரத்திலே குதித்து வாரிவந்தவர்கள் கொடுத்த முத்துக்கள் இறந்து கிடக்காநின்ற முற்றத்தை யுடையவன் ; மீனக்கொடியைத் தரித்த வன் ; தங்கள் குலத்துக்குத் தலைவனகிய சந்திரனை சிரசில் தரித்த சுவாமியினது பாதங்களையும், அவர்சடைக் காட்டியனிடத்தில் பிரகாசிக்கும் ஆத்தி மாலையினது வாசனையும், இடைவிடாது மனதில் தியானித்துக் கொண்டேயிருக்கும் பக்தியுடையவன் ; நன்றியை பாதுகாப்பதில் இவனுக்குச் சமானமாக வேறொருவருமில்லாதவன் ஆகமமுழுதுந்தெரிந்த விவேகத்தை யுடையவன் ; தெய்வலோகத்தி லும் பூமியிலும், இமயபர்வதத்தினிடத்திலும் தன்கீர்த்தியை நாட் டினவன் ; அசுரர்க்கரசனை தேவேந்திரன் முடி சிதறும்படி வளை யென்னும் ஆயுதத்தைப் பிரயோகஞ் செய்தவன் ; யுத்தத்திற் தோற் படையாக புஜபலபராக்ரம முடையவன் ; தன்கொடைக்குத்தோற்ற மேகத்தையுஞ் சிறையிட்டானெனில், தன்னிடந்தோற்ற அரசர்களை சிறையிலே போட்டானென்பது பெரிதாகுமா ? இன்னும் அவனு டைய புகழ், வீரம் முதலியவைகளை அளவிட்டு சொல்லக்கூடா தவன்.

இப்படிப்பட்ட வச்சிராங்கத பாண்டியன் ஒருநாள் வேட்டை யாடும்படியாக மனதிலெண்ணி யானை-குதிரை சேனைகள் சூழக் குதிரைமேலேறிக் கொண்டு சந்திரனைக்கண்ட இருள்கூட்டங்கள் போல யானைக்கூட்டங்கள் அஞ்சியோட உத்திரகிரியில் நடந்து கடம்பை-மான் முதலிய மிருகங்களைக்கொன்று வேட்டையாடிக் கொண்டுவந்தான். அப்படி வேட்டையாடும்போது ஒரு புனுகு பூனையைக்கண்டு துரத்த அப்பூனை பயத்தோடு அருணசலத்தை சுற்றியோடி, கண்முன்னே விழுந்து விஷத்தைச் சாப்பிட்டவர்கள் போலத்தன் தேகத்தைவிட்டு வித்தியாதரர் முதலானவர்கள் துதிக்க விமானத்தின்மேல் திவ்விய தேகத்தைப் பெற்றுக்கொண்டு எழுந் தது. குதிரைமேல் ஏறியிருந்த வச்சிராங்கத பாண்டியன் அகஸ்மாத் தாய் கீழே விழக், குதிரையானது இடறிவிழுந்து தன்தேகத்தை விட்டு சித்திரக்காரரும் எழுதக்கூடாத திவ்விய ரூபத்தைப்பெற்று ஒரு புஷ்ப விமானத்திலேறிப் பிரகாசித்தது. இவ்விரண்டுபேருக்கும்

குதிரை-காவி-யென்கிற பெயர் துலைந்துப் போய்ப்பழய காந்திசாலி-கலாதரன், என்கிற பேரைப்படைத்தவராகி, மிகுந்த சினேகதராய் அருவிபோலக் கண்களிருந்து ஜலம்வர ஒருவருக்கொருவர் கட்டியணைத்து, உச்சிமோந்து சந்தோஷத்தில் மூழ்கினார்கள். குதிரைக் காவினருகில் விழுந்து அருணகிரியின் அடியில்வருந்திய வச்சிராங்கத பாண்டியன் இது வந்தவகை என்னவென்று இரங்கி வருத்தமுற்றான்,

அப்போது வித்தியாதரர்களாகிய காந்திசாலி-கலாதரனென்கிற இருவரும் பாண்டியனிடத்தில் வந்து, நீ பயப்படாதே யென்று கையமர்த்தினார்கள். அதற்குப் பாண்டியன் மிகவுஞ் சந்தோஷமுடையவனாகி, ஐயா! நீங்களிருவரும் யார்? உங்களுக்கு இப்படிப்பட்ட துக்கம்வந்ததற்கு காரணமென்ன அதுபோனது எவ்விதத்தினாலே? சொல்லுங்களென்று கேட்கக், கலாதரனென்பவன் ஐயா மதுரைக்கரசே! நாங்கள் ஒப்பற்ற வித்தியாதரர்கள்; இவன் பேர் காந்திசாலி; என்பேர் கலாதரன்; அவனும் நானும் மிகுந்த சினேகதராய் விளையாடிக்கொண்டிருந்தோம். அவ்வாறிருக்கு நாளில் முன் செய்த ஊழ்வினை வந்து தொடர்ந்ததால் இருவரும் மகாமேருவின் சாரலிலே போய்ச் சேர்ந்து அங்கு கோபமிகுந்த தாருவாசரிஷி வாழாகின்ற ஆசிரமத்தின் அருகிலே யந்தரிஷிமனமுருகித் தண்ணீர் சொரிய வளர்ந்த நந்தவனத்திற் புகுந்து, இந்த காந்திசாலி அங்குள்ள சிறுபுதல்களை மிதித்தான். மிக்க வினையையுடையானும் அதுகளிலிருக்கின்ற மேன்மையாகிய புஷ்பங்களைப் பறித்தேன். அந்தக் க்ஷணமே தூருவாசரிஷியறிந்து, விழிகளாலே நெருப்புகளைக் கக்கிக்கொண்டு, சடையவிழவும், முத்துகள்போல் முகத்தில் வேர்வையுண்டாகவும், பவளம் போன்ற இதழ் துடிக்கவும், கோபித்து, அடா! சிவப்பாகிய சூரிய கிரணமும் என்னுடைய பயத்தினாலே வரக்கூடாது; தென்றல் காற்றும், வண்டுகளும் ஒருபோதும் இந்த வனத்தை யடையாதுகள்; இலைகள் உதிராது; வாடாது; இதுவோ ரிஷபவாகனராகிய சிவனுக்கு இனிமையாகிய பூசைக்குச் சாத்தும் புஷ்பங்கள் பொருந்தியசோலை. இந்த வனத்தில் ஒருவர் வருகிறதற்கு எளிதோ இப்படியிருக்க நீங்கள் புகுந்து என்னுடைய கோபமாகிய நெருப்பினிடத்திலே அகப்பட்ட பஞ்சானீர்கள். நீ குதிரையாகப்போவென்று இந்த காந்திசாலிக்குச் சாபத்தைக் கொடுத்தார். புஷ்பம் பறித்த என்னைப் புனுகு பூனையாகப் போவென்று சபித்தார். அப்படிக் கோபமேதவசாகப் பலித்த பொல்லாத ரிஷியிட்ட சாபம் எங்கள்மேல்வர, நாங்களிருவரும் தளர்ச்சியடைந்து ஓ ஞான விளக்கே! மிகுந்த கிருபையே! பக்தருடைய செல்வமே! என்று வணங்கி, எங்கள்மேல் வந்தசாபம் ஒருழிநாள் என்றைக்கு என்று கேட்டோம். அவரும் கோபம் நீக்கி, உங்களுக்கு நானிட்டசாப

மானது ஒப்பற்ற திருவண்ணுமலையை வலம்வந்தாற் போகும். அப்படி வலம்வருவது சிறந்த பாண்டியதேசத் தரசனுன வச்சிராங்கத பாண்டியனுல் கிடைக்குமென்ருர்.

இன்னும் இங்கே அக்கினிமலையாக நிற்கும் சுவாமியினிடம் முன்னே வனக்கடவுள் கொடுத்த வாசனை பொருந்திய மாம்பழத்தைத் தமது பிள்ளைகளாகிய விநாயகரும், சிவசுப்பிரமணியரும் வருந்திக் கேட்கச், சுவாமியும் பிள்ளைகளைப்பார்த்து குழந்தைகளே! இன்றைக்குள் உலகமுழுதும் சுற்றி வந்தவர்களுக்கு இந்த பழத்தைக் கொடுக்கிறேனென்று சொன்னுர். அப்போது சிவசுப்பிரமணியர் மயில்வாகனத்தி லேறிக்கொண்டு சப்த சமுத்திரஞ் சூழ்ந்த பூமி முழுதுஞ் சுற்றவாரம்பித்தார். யானை முகத்தையுடைய விநாயகர் எழுந்திருந்து, சுவாமிதானே உலகமாயிருக்கிருர் அவரைச் சுற்றி வந்தால் உலக முழுதுஞ் சுற்றிவந்ததை யொக்குமென்று கருதி, எல்லார்க்குந் தகப்பனுகிய தன்னுடைய தகப்பனை பிரதக்ஷணஞ் செய்தார். சுவாமி மகனைத் தழுவிக்கொண்டு மாம்பழத்தையும் வேண்டிய வரமுங் கொடுத்தார். அப்பால் சிவசுப்பிரமணியர் சீக்கிரத்தில் பூமியைச் சுற்றிவந்து பழங்கேட்க, சுவாமியானவர் மகனை நோக்கி அப்பா! விநாயகன் நம்மைக் காலால் நடந்து சுற்றிக் கனியைப் பெற்ருன். ஏழுலகத்தை வலஞ்செய்தாலும், பலபலவாகிய தவத்தைச் செய்தாலும், நம்மைச் சுற்றிவரும் பலனுக்குச் சமானமாகுமோ? சிவப்பான மலையுருவமாகிய நம்மைதினம் வலம் வந்தவர்கள் பிரமனிலும் அதிகமாவார்கள்; விஷ்ணுவிலும் அதிகமாவார்கள்; பார்க்கில் உம்மிலும் அதிகமாவார்கள். நமது உருவமாகிய இந்த மலைக்குத் தேவர்களும் பூசை பண்ணமாட்டார்கள் அதை வலமாகச் சுற்றி வந்தவர்களுக்கு ஆசையுடனே செய்கிற பூசை நமக்கு இனிதாகச் செய்கிற பூசையாகும். அவர்களுக்கு கூசும்படி செய்த தீமை நமக்குச்செய்த தீமையேயாகும் என்று அருளிச் செய்தார் என்று துருவாசகர் சொல்லிவிட்டுப் போனுர், பின்பு அந்தப்படி குதிரையாகவும், நாவியாகவும் பிறந்தோம். இன்றைக்கு உன்னுல் திருமலையைப் பிரதக்ஷணஞ் செய்து, மின்னற்போன்ற பழைய உருவத்தைப் பெற்று விமானத்திலேறினவர்களானேம். எங்களுடைய சரித்திரம் இதுவேதான், அக்கினி சொரூபமாகிய இந்த மலையை நீ காலினுலே வலஞ் செய்யாமல் குதிரைமேலேறி வலஞ் செய்தபடியினுலே உனக்கு இந்தத் துன்பம் வந்து சம்பவித்தது. என்று சொல்லி காந்திசாலி கலாதரன் இருவரும் தங்களூருக்குப் போனுர்கள்.

பின்பு யானையும், குதிரையும், தேரும், காலாட்களும், மந்திரியும் வச்சிராங்கத பாண்டியனைச் சுற்றிக்கொண்டார்கள். உடனே பாண்டியன் தன் பிள்ளையாகிய இரத்தினங்கத பாண்டியனைச் சீக்கி

ரத்தில் வரவழைத்து, முன்னால் நமது வமிசப் பிரபலனாயிருந்த பரதன்போல் இராச்சியத்தைக் காப்பாற்றென்று சொன்னான். இரத்தினாங்கத பாண்டியன் அந்த வார்த்தையைக் கேட்பதற்கு முன்னமே விடைபெற்றுக்கொண்டு தேர் முதலாகிய சேனைகள் சூழ மதுரைக்குப் போய் இராச்சிய பரிபாலனஞ் செய்துகொண்டு ஆறிலொருகடமை கொண்ட திரவியத்தையும், கடலிற் குளித்து வாரிவந்த முத்துக்களையும், சத்துருக்களால் நிறையிட்ட பொன்னை யும் தினந்தோறும் ஆனையின் மேலேற்றி தன் தகப்பனுக்கு அனுப்பு விக்க, வச்சிராங்கத பாண்டியனும் அந்த திரவியங்களைக் கொண்டு அருணாசலேசுரருக்கு இனிமையாகிய பூசை திருப்பணி முதலான வைகளைச் சிறப்பாகச் செய்துகொண்டு வந்தான். பிறகு தவசு செய்கிறதற்கு நினைத்து கௌதமருடைய ஆசிரமத்தில் ஒரு பக்கம் சேர்ந்து பன்னகசாலை கட்டி, நம்முடைய பாவத்தை தீர்க்காநின்ற நீலகண்டத்தையுடைய சுவாமிக்கு அன்பாக கிரி பிரதக்ஷிணஞ் செய் கிறநாளில், வஞ்சகம் பொருந்திய மனத்தினை யுடையவர்கள் எதிரே வராத பரமசிவன் வச்சிராங்கத பாண்டியனுக்கெதிரே தோன்றினார். அப்போது வச்சிராங்கத பாண்டியன், சுவாமி அழகு பொருந்திய சிறிய சந்திரனையும், மிகவுங் கருணை பொழியாநின்ற கண்களையும், நீலமணிபோல் பிரகாசிக்கின்ற கண்டத்தையும், நான்கு கைகளையும், கரத்தில் மான்மழுவும் உடையவராய் ரிஷப வாகனத்தின்மேல் இருப்பதைப் பார்த்து, பக்தியோடு வணங்கி ஸ்ரீ உண்ணாமுலையாகிய பார்வதியினது தலைவரே! நெற்றியில் கண்ணையுடையவரே! சடை யில் கங்கையைத் தரித்தவரே! இளமையாகிய ரிஷபத்தின் மீது எழுந்தருளியவரே! எம்மை யாட்கொள்ளப் பட்டவரே! பாவிகளறியப்படாத கைலாயத்தி லிருக்கின்றவரே! தீவினை யுடையவனாகிய நான் குதிரைமேலேறி உம்மை வலமாக வந்த தகாத காரியத்தைப் பொறுத்தருள வேண்டுமென்று வேண்டினான். அப்போது ஐந்துமுகத்தையுடைய பரமசிவனுக்குக் கிருபையுண்டாகி, ஓ வச்சிராங்கதபாண்டியனே! நீ பூர்வ ஜென்மத் தில் தேவேந்திரனா யிருந்தாய். அந்நாளில் நம்மை அலக்ஷியஞ் செய்து வச்சிராயுதத்தை நம்மீது பிரயோகஞ் செய்தாய். அதனாலே பூமியில் மனிதனாகப் பிறந்து துன்பத்தை யடைந்தாய், இப்போது நம்மைப் பூசித்து வலம் வந்தபடியினாலே அக்குற்றம் நீங்கியது. இனித்தேவர்களுக்கு அதிபதியாக தேவலோகத்துக்குப் போவென்று வரங்கொடுத்து சுவாமி மறைந்தார்.

ஸ்ரீ அருணாசலத்தின் வளமிப்படி இந்த ஸ்தலத்தை நினைப்பவர் கள் மரண துன்பத்தைப் பொருந்தாமல் சிவனுடைய ரூபம் பெறு வார்கள். இச்சரித்திரத்தில் ஒரு எழுத்தினது பொருளாயினும் அறிந்தோர்களும், பெரியோர்களோடு படித்தவர்களும், சிவசாயுச்

சியமடைவார்கள், என்று நந்தி யெம்பெருமான் மார்கண்டேய ருக்கு அருளிச்செய்ய அவருங் கேட்டு நந்திகேசுரர் பாதாரவிந்தங் களிற் பணிந்து, கிருபா சமுத்திரமானவரே! உம்மாலே பரகதி யடைந்தோம். இனி வல்லாளமகாராசன் சரித்திரத்தை அருளிச் செய்யவேண்டும் என்ன, அப்படியே யியம்புகின்றே னென்று நந்தி கேசுரர் திருவாய் மலர்ந்தருளிகின்றார்.

## வல்லாள மகாராஜன்

சிறப்புப் பொருந்திய மாணிக்கம்-மரகதம்-வைரம்-வைடூரியம்-கோமேதகம் புட்பராகம்-இந்திரநீலம்-முத்து-பவள மென்னும் நவ மணிகளால் அலங்கரிக்கப்பட்ட மாடமாளிகைகளும், ஆகாயத்தை யளாவியுபர்ந்து தீஞ்சுவைக் கனிகளை புதிர்க்குஞ் சோலைகளும், பரி மளமிகுந்த நறுமலர்ச் சோலைகளும், அருந்ததிக் கிணையான வடிவ மும் கற்பும் வாய்ந்த கணிகை மின்னார்களும் பொருந்திய வளப்ப முடைய அருணாசலமென்னுந் தலத்தை யரசுபுரிந்துவரும் சோர் குலாதிப வல்லாளமகாராசன் என்பவன் மிகவுஞ் சத்தியவாக்கியத் தையுடையவன்; சற்குண முள்ளவன்; சகல வுயிர்களையுந் தன் னுயிர்போற் பாதுகாப்பவன்; ஜகதீசனாகிய பரமசிவனுடைய உபய சரணாம்புயங்களைத் தினந்தினம் திரிகாலமுந் துதிசெய்பவன்; அக் கடவுளினது திருப்பணி செய்யும் பொருட்டு ஓர் வடிவாயுதித்தவன்; பிறர் பொருளாசையற்றவன்; தன் மனையாளையன்றி மற்ற இதர மாகிய ஸ்திரீகளை தமக்கைமார்களைப் போலவுந் தாய்மார்களை போல வும் மனதிற் பரிவுகொண்டு வசனிப்பவன்; குடிகளிடத்தில் ஆறி லொருபங்கு பகுதிபெறப்பட்டவன்; ஆலயத் திருப்பணியை மனக் களிப்போடு நடாத்தும் மேன்மை பொருந்திய பக்தன்.

இப்படிப்பட்ட வல்லாளமகாராசன் ஆக்கினையின்படி புலியும், பசுவும் ஓர்த்துறையிற் சேர்ந்து தண்ணீரருந்திக் களித்து விளையாடி வாசஞ்செய்துவரும்; அந்தணர்கள் வேதாகமங்களை யுணர்ந்து உப தேசிக்கும் வேதபாராயணங்களை யாவரும் பக்தியோடு கேட்பார் கள்; ஆதியாயும் ஒப்பற்றதாகவும் விளங்குங் கடவுளாகிய ஸ்ரீ அருண சலேஸ்வரருடைய திருவருளைப் பெரும்பொருட்டால் அந்நகர் முழு தும் வீதிகள்தோறும் வரிசைவரிசையாய் மகரதோரணங்களும் புஷ் பங்களுங் கொண்டு அலங்கிருதஞ் செய்வார்கள். மங்கையர்கள் வீதிகளிற் ஜலந்தெளித்து விசித்திரமாகிய கோலங்களை யிடுவார்கள்.

இந்த அருணசலத்தில் மாதமும்மாரி பொழிந்து வேளாண்மை எந்நாளுந் தவறாது செழிப்போங்கி வளரும். அன்றியும், அந்நகருள் யாவரேனும் பசிப்பிணியால் மெலிந்துவந்து புசிப்பு வேண்டுமென்று விணவுவோர்களை அக்கணமே யழைத்து மிக்க உபசாரஞ்செய்து

கைத்தல்-புளித்தல்-கார்த்தல்-உவர்த்தல்-துவர்த்தல்-தித்தித்தல் என்னும் அறுசுவையோடு கூடிய பதார்த்தங்களோடு அன்னப்பாலித்து திருப்தியுறச் செய்வார்கள். இன்னும் தபோ மகிமையுடைய குணசீலர்கள் சொல்லுங் குற்றேவல்களைப் புரிந்து, இச்சித்துக் கேட்ட வஸ்துக்களை யெல்லாங் கொடுத்து அவர்களது அருளைப் பெறுவார்கள். இதுவுமன்றி ஸ்ரீ அருணாசலேச ராலயத்தில் எங்கும் பிரகாசம் பொருந்தத்தக்கதாய் திருவிளக்குகளமைத்து, அக்கடவுளை நிதம் பக்தியோடு பூசித்துப் பணிந்து வருவார்கள்.

## வல்லாளமகாராசன் புத்திரசோகம்

இத்தன்மையாய் அரசனது செங்கோன் முறைப்படி யாதுங் குறை வில்லாமல் அந்நகரமானது செழிப்போங்கி இருக்கையில், ஓர் நாள் மன்னனாகிய வல்லாளமகாராசன், தனக்கு ஆண்டவனருளால் எல்லாச் சிறப்பும் பொருந்தியிருக்க, நாம் எடுத்தணைத்து உச்சி முகந்து முத்தமிடவும், இனிய மழலை வார்த்தைகளைக் கேட்டு மகிழ்ச்சியுறவும், பின்னர் நமது பெயரைச் சொல்லவும் பிள்ளை யில்லாமற் போயிற்றே என்று மனம் வெதும்பி மிகவுந் துன்பமுற்றான், உடனே அருகிலிருக்கும் மந்திரிகளை நோக்கி மந்திரிகாள்! எனக்கு சந்ததி யில்லா திருப்பது யாது காரணம்? ஜகதீசனாகியும், உமா மயேசனாகியும், எனையாட்கொள்ளும் பொருட்டு எழுந்தருளியிருக்கும் ஐயனாகிய ஸ்ரீ அருணாசலேஸ்வரருக்கு பேதையேனாற் செய்யப் பட்ட பூசையில் ஏதேனுங் குறையுளதோ? இவ்வுலகநீதி நடத்துவதில் மாறுபாடாகிய குற்றங்களுண்டோ? நங்கடவுளை அர்ச்சித்துப் பணியும் பொருட்டு கொய்த மலர்களிலே ஏதேனுங் குறையுண்டோ? யாது மறியேனே! இனி யான்செய்யும் விதியாது? எனக்குச் சொல்லுவீர்கள் என்றான். அதற்கு மந்திரிமார்கள் வல்லாளமகாராசனைப் பணிந்து, எங்களிறைவனே! நம்மை யாட்கொள்ளும்பொருட் டெழுந்தருளிய சகல புவன கர்த்தாவாகியுஞ், சர்வாந்திரியாமியாயும், திரிநேத்திரதாரி யாகியும், அடியவர்களிருதயத்தில் விளங்கும் ஸ்ரீ அருணாசலேஸ்வரரது மேன்மை பொருந்திய கருணையால், நம் பதியை நாடிவரும் அந்தணர்களும், இன்னும் மற்றவர்களும் எதைக் கேட்டபோதிலும் அவைகளை இல்லை யென்னாது அவர்கள் மனங்களிப்புறும்படியாய் உள்ளன்போடு நல்குவோமாயின் புத்திரனுண்டாகு மென்று புகன்றார்கள்.

## வல்லாளமகாராசன் தருமம்

அவ்வார்த்தையைக் கேட்ட அரசன் மிக்க குதூகலமுடையவனாகி, அமைச்சர்களே நமது நாட்டின்கண் யாவர் வந்து எது விரும்பி

கேட்பினும் அட்டியின்றி அக்கணமே தருகிறோம் என்று ஆகாய பரியந்தம் அளாவியுயர்ந்து படா படாகாரஞ் செய்யும்படியாய் அழகிய பெரிய துவசம் நாட்டுங்களென்றான். உடனே அமைச்சர்கள் துவசத்தை நாட்டி வானுலகளவும் பேரொலி முழக்கம் எட்டும்படியாய் ஜெயமுர சறைவித்தார்கள். அப்பால் வல்லாள மகாராசனால் தருமக்கொடி நாட்டியிருப்பதாய் கேள்வியுற்ற நெடிய கடல்சூழ்ந்த வையகத்திலிருக்கும் விருத்தர், காசி காவடிப் பிராமணர், தபோதனர், முனிவர், ஜோகிகள், ஜங்கமர், பாவலர், கழைக்கூத்தர், யாசகர் முதலிய யாவரும் பக்தியோடு கூட்டங் கூட்டமாய்க் கூடி வந்து தத்தம் வருமை நீங்கும்படியாய் வேண்டியவைகளை குறைவின்றி அரசனிடம் பெறுவார்கள். விவாகஞ் செய்துகொள்ள வேண்டுமென்று ஆவலோடும் அரசனை நாடிவந்து கேட்டவர்களினது மனந்திருப்தி யடையும்படியாய் ஆயிரமாயிரமாக பொன் பெற்றும் பின்னர் ஆபரணாதி முதலிய மண் மனை யாவும் ஈடுவைத்து மீட்டுக் கொள்வதற்கு ஏதுவில்லாமல் தாழ்ந்து போகின்றது இராசாதிராசனாகிய எங்கள் கோவே! தேவரீர் அவற்றை மீட்சி செய்யும் பொருட்டுத் திருவருள் சுரப்பீராயின் மிகு புண்ணியமாமென்று பணிந்து வினவியவர்களுக் கிரங்கி அக்கணமே இரண்டாயிரம் பொன்கொடுத்து அன்னவர்களை மகிழச் செய்வித்தும், அதன் பின்பு வேதாகமங்களை யுணர்ந்த பெரியோர்களாகிய அந்தணர் வந்து அரசனை ஆசீர்வதித்து மகாராசனே! உபநயனம் நடத்த வேண்டி யிருக்கிறதென அறிவிப்பார்களாயின் அவர்களுக்கு முந்நூறு பொன் கொடுத்து மனமகிழச் செய்விப்பார். ஸ்ரீ அருணாசலேஸ்வரர் எழுந்தருளி யிருக்கும்படியாகிய கோயிலினுள் நவமணிகளினாலுஞ் சந்திரகாந்தக் கற்களினாலும் அமைத்துப் பிரகாசம் பொருந்தியிருக்கும் மண்டபங்களும், செஞ்சுடர்க் கிரணனாகிய சூரியனுஞ் சாய்ந்து ஒதுங்கிப் போகும்படியாய் ஆகாயத்தையளாவி மேகங்கள் தவழுஞ் சுற்று மதில்களுங் பழுதுபட் டிருக்கின்றமையால் அவைகளைத் திருத்தஞ் செய்யும்பொருட்டுப் பொருளுதவி செய்யவேண்டும் மகாராசனே யென்று கேட்குங்கால், அரசனானவன் நனிபக்தியோடும் ஜகதீசன் திருப்பணி நிறைவேறும் பொருட்டு இருபதினாயிரம் பொன் கொடுத்துச் சீர்திருத்தஞ் செய்தும், பின்பு உலகில் மடம் புதுக்க வேண்டுமென்றால் ஐம்பதினாயிரம் பொன் கொடுப்பார். கண்ணில்லாதவர்களும், ஜோகி, சங்கமர்களுக்கும், கரசரணாதிகளற்றவர்களுக்கும், வினைவழியால் வெவ்விய ஆபத்து நேர்ந்து வந்தவர்களுக்கும், ஆதுலர்களுக்கும், கெடாத துன்பத்தை யடைந்து தரித்திரமென்னும் பிணியால் மெலிந்து மனம் நொந்தவர்களுக்கும், பின்னும் புகலும்படியாகிய சகல யாசகர்களுக்கும், சதாகாலமும் அவரவர்கள் விரும்பிய வண்ணம் மனக்களிப்போடும் உதவி செய்வார்.

இப்படியாக வல்லாள மகாராசன் தருமஞ் செய்வதை திரிலோக சஞ்சாரியாகிய நாரத முனிவர் கேள்விப்பட்டு வல்லாள மகா ராஜனிடத்திற்கு மிகுந்த கருணையோடும் எழுந்தருளி வந்தார். அந்த மகா தபோதனராகிய நாரத முனிவர் வரவைக் காவலாளிகளால் கேள்விப்பட்ட வல்லாள மகாராஜன் மிகவு மன்போடும் அரியாசனத்தை விட்டெழுந்து மந்திரி முதலிய சேர்வைக்காரர்கள் புடை சூழ்ந்து வரும்படியாய் அரசன் எதிர் சென்று பணிந்து தமியேங்களை யாட்கொள்ளும் பொருட்டுத் திருவருள் சுரந்தெழுந்தருளிவந்த மாதவமே! புண்ணியப் பொருளே! பண்ணுறுந்தெருளே! யென்று துதித்துப் பேரானந்தத்தோடும் அழைத்துவந்து குற்றமற்ற மணிகளினு லங்காரஞ் செய்யப்பட்ட பொற்பீடமளித்து அவற்றி லெழுந்தருளச்செய்து, சிருஷ்டி கர்த்தாவாகிய பிரமதேவன் தபோ மகிமையால் உதித்து தாமரைப் போன்ற அழகிய கரத்தில் வீணையானது இலங்கக்கொண்டு கானஞ்செய்யும் மேன்மை பொருந்திய முனிவரே! தாங்கள் நாயினுங் கடையேனாகிய பேதையின் மீது கருணைவைத் தெழுந்தருளிவந்த சங்கதியை அருள் செய்ய வேண்டுமென்று பணிந்து நிற்க, உடனே வல்லாள மகாராசனைப் பார்த்து வல்லாள மகாராசனே! புவனத்தின்கண் மகாமகிமை பொருந்திய முனிவர்களும் புகழத்தக்க ஐம்புலனுகர்ச்சிகளையும் வென்று சின்மயத்தைப் பொருந்தி யிருக்கும் புண்ணியர்களால் சொல்லப்பட்ட சோமசூரியாக்கினியென்னு முக்குலத்தாருண் அக்கினிவம்ச க்ஷத்திரியகுலத் துதித்த அரசரே! நினது மகாதானத்தின் பெருமையைக் கேள்வியுற்று அங்கிமித்தியத்தை யரியும் பொருட்டு வந்தோம் ஆதலால் உமது மருமத்தை வெளியிடுவாயென்று நாரதமகா முனிவர் கேட்டார். அதற்கரசன் வேத சாஸ்திரங்களை யுணர்ந்த முனிவர்கள் புகழத்தக்க மகா தபோபலத்தையுடைய நாரத முனியே கேளும். எளியேனது ஆளுகையைத் தாக்கிக்கொள்ளவும், பின்னர் எளியேன் பெயரைச் சொல்லவும் மைந்தனில்லாமையால் மனமெலிந்து பூங்குழலாளென்னு உமாமகேஸ்வரியின் பாகனாகிய ஸ்ரீ அருணாசலேஸ்வரரது அடியார்கள் இச்சித்துக் கேட்டவைகளை இல்லையென்னாது கொடுக்கும் நியமங்கொண்டு துவசமு நாட்டி நடத்தி வருகிறேன் நம்மை யாட்கொள்ளுங் கடவுளின்திரு வுளம்யாதோ? அறியேனென்ன முனிவர் கிருபையோடு நோக்கி அழகினுயர்ந்த முப்பத்திரண்டறங்களையும் இறப்பவர்க்கில்லை யென்னாது நடத்துபவர்கள் மண்மீது புத்திர பாக்கியங்களைப் பெறுவார்களென்று மேன்மை பொருந்திய ஆகமசாஸ்திரங்களிற் சொல்லி யிருப்பதல்லாமலும், மறைவிதி யுணர்ந்த பெரியோர்களுஞ் சொல்லுவார்கள்; ஆதலால் எங்கும்பரவி மகாமகிமை பொருந்தியிருக்கும் கங்கையையும், மூன்றாம் பிறைச்சந்திரனையுஞ் சடையிற்றரித்து தயாபராதி எண்பத்துநான்கு லக்ஷசஞ் சீவபேதங்களைப் படைத்தளிக்கும் பரம

சிவத்தினருளால் மக்கட்பேறு பெறுவாய். எனக்குச் சிலவுதருவாய் அரசனேயென்று நாரத முனிவர் விடைபெற்றுச் சென்றார்.

அப்பால் நாரதர் வல்லாள மகாராசனுடைய நன்மார்க்கத்தையும், தருமபரிபாலனத்தையும், கைலாசகிரியில் எழுந்தருளியிருக்கும் பார்வதிசமேதனாகிய பரமசிவனுக்குத் தெரிவிக்கும்படியாக வெண்ணங்கொண்டு சிரேஷ்டங்கொண்ட முனிவன் ஆசையோடுஞ் செல்லுகையில் அங்ஙனம் அனேக சிவகணங்கள் அடிபணிந்து துதித்துநிற்க முன்னம் பிரகாசித்துக் கட்டளைகள் விதித்துக்கொண்டிருக்கும் இரண்டாஞ் சங்கரனாகிய நந்திதேவரைப் பணிந்து பின்பு மகாதபோதனர்களும் தேவர்களும், முனிவர்களும் புடைசூழும்படி போய் உமையவள் இடப்பாகத்தில் இலங்கக் கொலுவீற்றிருக்குஞ் சிவபெருமானுடைய திருக்கோலத்தைக்கண்டு சாஷ்டாங்கமாய்ப் பணிந்தெழுந்து போற்றிசெய்து. பிரகாசம் பொருந்திய கயிலாசகிரில் வீற்றிருக்குந் தேவனே! உனது உபயசரணங்கள் போற்றி. பூலோகத்தின்கண் குற்றமற்று விளங்கும் அருணையம்பதியென்னுந் தலத்துக் கிறைவனாகிய வல்லாளமகாராசன் என்பவன் தன் பெயரை விளங்கச்செய்வதற்காக ஓர் புதல்வனைவேண்டி, யாவர் எப்பொருளை விரும்பிக்கேட்ட போதிலும் அன்னவர் திருப்தியடையும் படியாயத் தருகிறேனென்று கொடிபோட்டு பறைசாற்றி நடத்திவரும் பெருமையைக்கேளும் எந்தையே னென்றும், நன்மார்க்கத்தை நீட்டும்படியாய் வளர்ப்பவன்; சத்தியத்தைக் காப்பாற்றதக்கவன்; விதிபிசகாதவன; பாவங்களென்னும் இருளை துரத்தியெழுந்த மதி போன்ற தருமமாகிய ஒளியே ஒருருவங்கொண்டு உலகின்கண் ஜனித்த மேன்மைபொருந்திய அரசன். அன்றியும், பூமியில்வாழும் மன்னுயிர்யாருந் தன்னுயிர்போலமனதி லெண்ணி இரட்சிக்கப்பட்டவன்; அடியவர்க்கெளியவன் ஆதிக்கடவுளாகித் தங்களது சரண கமலங்களில் மனத்தைப்பொருந்திச் சதாகாலமும் பணிந்து துதி செய்து வாழ்ந்துவரும் மெய்த்தொழும்ப னென்றுங் கூறினார்.

## ஜங்கமமூர்த்தி விஜயம்

அங்ஙனம் வந்து வல்லாள மகாராசனது பெருமையைச் சொல்லும் நாரத முனிவன் மொழியைப் பரமசிவன் கேட்டு அவ்வரசனது தன்மையை நாமுங் கண்டறிய வேண்டுமென்று மனதில் நினைத்து, துதிசெய்துக்கொண்டு நிற்கும் முனிவனுக்கும், மற்றுமுள்ள தேவர்கள், இருடிகள் யாவர்களையுந் தங்கள் தங்கள் இருப்பிடம் போய்ச் சேரும்படியாய்த் திருவாய்மலர்ந்தருளி, அந்த க்ஷணமே அளகாபுரிக் கிறைவனாகிய குபேரனை வரும்படியாய்க் கட்டளையிட்டார். அம்மாத்திரத்தில் எண்டிசையு மதிக்கும்படியாய் அவ்வரசன் அளவிருந்த பொற்குவியல்களோடும் பிரயாணப்பட்டு,

அக்குமணிகளாகிய உருத்திராட்ச மாலைகளையுஞ் சர்ப்பங்களையும் ஆபரணமாகவணிந்த சிவபெருமானிடம் வந்து அடிபணிந்து போற்றி நிற்கையில், செவ்வானம் போன்ற தேக காந்தியையுடைய பரமசிவன் அங்ஙனம் அளகைக்கோனை நோக்கி, கேளும் அளகா புரிக்கிறைவனே ! புவனத்தின்கண் நாம் அருணையம்பதியில் வாழப் பட்டவனுகிய வல்லாள மகாராசனது மனவலியை சோதிக்கும் படியாய் எண்ணங்கொண் டிருக்கிறபடியால் நீயும் சிறப்புற்ருேங்கிய சீடனுகி அளவிருந்த கணங்களோடும் நம்முடன் மகிழ்ந்துவரக் கடவையென்று கூறினர். உடனே மகாவிஷ்ணுவும், பிரமதேவ னுங்கண்டு மனதில் ஒருநாளுமில்லாத மகிழ்ச்சிகொண்டு போற்றவும், தேவர்கள் மலர்மாரி பொய்யவும், வேதாகமங்கள் துதிக்கவும், யாவ ராலுஞ் சொல்லுதற்கரிய உமாமகேஸ்வரியின் ஓர் கூறுய் விளங்கும் பரமசிவன் சகலரும் பணியும்படியாகிய ஜங்கமராய வேடங்கொண்டு நின்றார். தேவனுகிய பரமசிவன் வாழும் கயிலாசகிரியில் வாசஞ் செய்துக் கொண்டிருக்கும் அழகிய சிவகணங்களெல்லாம் எமதை யனது கருணைரசத்தினுல் ஆண்டிகளுருவங்கொண்டு, உலகின்கண் இணையில்லாக் கீர்த்தியை வகித்து பிரகாசித்துக் கொண்டிருக்கும் வல்லாளமகாராசன் வாழும் பதியை நோக்கி இராஜ நீதியோர் கொண்டாடி பணியத்தக்கக் குருமூர்த்தியாய் எழுந்தருளியிருக்குஞ் சிவபெருமானைச் சூழ்ந்து வந்தார்கள்.

இவ்வாறு திருவண்ணுமலையில் வரும்போது கற்பினில் அருந் ததியைப்போல் மிகுந்தும், தத்தம் கணவனையே தெய்வமாக பாவித்து நடக்குந் தாய்மார்களொருவரு மில்லையோ? அடியார்க ளது பசிவேளை யறிந்து அன்னங்கொடுப்பா ரில்லையோ? மநுநீதி யோடுங்கூடிய அரசர்களில்லையோ? சந்துருஷ்டியாய் எங்களைத் தொழுது அழைத்துக்கொண்டு போய் பக்திரசத்தோடும் அன்னம் பரிபாலிக்கும் கன்னியர்களு மில்லையோ வென்று கூறுவார்கள். நாங்கள் செம்பொன்னளித்தாலும் விரும்போம்; இரத்தினங்களை யழுத்தி யிலங்காநின்ற அழகியபணிகளையும் விரும்போம்; பிரகாசம் பொருந்திய இராஜ ரத்தினங்களை அளித்தாலும் விரும்போம்; முத்து மாலைகளிலும் மனம் வையோம்; அரசர்கள் செங்கோலின் விதியைத்தந்த போதிலும் வேண்டோம்; சட்சுவை பதார்த்த வகைக ளோடும் அமுதளிப்பாராகில் மிகவும் பிரீதிகொண்டு உண்ணுவோ மென்று கூறுவார்கள்.

## திருவண்ணுமலை தாசிகள்

அப்பால் அழகியகரத்தில் ஒளிராநின்ற மானைத் தறந்தவராகிய ஜங்கமர், சிறப்போங்கி இலங்கும் அருணையம்பதி வீதியின்கண் ஓசை பெற்றதாக செங்குமுதம்போன்ற திருவாய்மலர்ந்து கொடிதாகிய

பசிப்பிணியால் துன்புற்று இரப்போரைப்போல வற்றிச் சிவந்த கொவ்வைக்கனியையொத்த கணிகை மாதர்கள் வசிக்கும் வீதியில் வந்து சேற்கெண்டையைப் போன்ற அழகிய விழியையும், அஞ் சுகத்தையொத்த இனிய வார்த்தைகளையும், ஆகாயத்தி லிலங்கா நின்ற பூரணச் சந்திரோதயம் போன்ற திருமுக வொளியும், சீதள நிறைந்த களபமலர்களால் கட்டப்பட்ட பந்தை நிகத்து ஊசலாடுங் குழலும் சுகந்தக்களைத் திமிர்த்து தென்னங் குரும்பைப்போல் பிர காசிக்கும் மார்பையுமுடைய வனிதையர்களே! இன்றிரவு விடியு மளவுமிருந்து அசோகு, முல்லை, நீலோற்பலம் மாம்பூ தாமரை இவ் வைந்து மலர்களை ஐந்து கணைகளாகவும் கரும்பை வில்லாகவும் வளைத்து போர்புரிய வெழுந்து நிற்கும் மன்மதனது கணைவலியைத் தடுத்தோட்டும் பொருட்டுப் பரியமாகக் கொடுக்கும் பொன்னைப் பகருவீர்கள் சீக்கிரமாய் யென்று வினவியபோது அக்கணிகைமாதர் கள் வெவ்விய விடங்களையுடைய சர்ப்பங்களை ஆபரணமாகவணிந்த ஸ்ரீ கைலாசபதியாகிய பரமசிவனைப்போல் சொல்லுதற்கரிய சங்க மரே கேளும், யாங்கள் பொய் வார்த்தைகளைப் பேசோம்; வஞ்சக மாகிய வார்த்தைகளைப் பேசோம்: வஞ்சகமாகிய துரோக சிந்தனை களையுங் கருதோம்; ஓரிரவு முழுமையுஞ் சுகலீலைகளை யனுபவிப்ப தற்கு ஒவ்வொரு பெண்ணுக்கும் ஆயிரம் பொன் கொடுக்கும் நியம மாதலால் அதுபோற் றருவீர்களாயின் யாங்கள் எங்களது மனமும் மெய்யும் ஒன்றுபடதக்கதாக அஷ்டவித ஆலிங்கனமுஞ் செய்து அனங்கனது கணையுங் கருத்தும் நாணும்படியாய் இணங்குவோ மென்றார்கள். அப்பால் ஜங்கமர் அக்கணிகை மாதர்கள் சொல்லிய வைபோல் அன்னவர் மகிழும்படியாகக் கனகங்களைச் சொரிந்து ஒவ் வொருத்திக்கோர் ஆண்டியை நியமித்து, கங்குல் விடியளவும் விட்டு நீங்காதீர்களென்று ஆண்டிகளுக்கு சண்டையினுற் றெரிவித்து, மிகவுங் கட்டுப்பாடாக அக்கணிகை மாதர்கள் வாழும் வீதியெல் லாம் சிவனடியார்களாகவே பிரகாசிக்கும்படிச் செய்து கோரிய எண்ணங்களை யெல்லா மருளிச்செய்யும் அழகிய அருணையம்பதி எண்காதம் வரையில் விலைமாதர்கள் தனித்திராமல் மருவச்செய்தார்.

பிறகு ஜங்கமர் அவணின் றெழுந்து பிரகாசமும் பெருமை பொருந்திய நன்மார்க்க நிலையைப் பரிசோதித்த சிவிபனுகிய அள கேசனேடும் அரசனது அரண்மனையை நோக்கிச் செல்லுகையில், அப்பதிக் கிறைவனுகியும், சதுர்வேத மார்க்கம் யாவும், பூரணமா யுணர்ந்த மன்னனுகிய வல்லாள மகாராசன் சங்கமர் வருதலையைக் கண்டு எதிர்சென்று பணிந்து போற்றி யழைத்துக்கொண்டுபோய் நவமணிகளா லலங்கரிக்கப்பட்டு பிரகாசம் பொருந்திய அழகிய ஓர் சிங்காதனத்தில் எழுந்தருளிச்செய்து, அஞ்சலிபஸ்தனுய் நின்று தமி யேன்செய்த தவப்பலனே? அல்லது ஸ்ரீ அருணுசலேஸ்வரர் வாழும்

இவ்வருணையம்பதியின்கண் எளியேனாற் செய்யப்பட்ட கிரியைகளின் புண்ணியமோ? பரமசிவத்தைப் போலெழுந்த ஜங்கம தேவரீரின் பிரகாசம் பொருந்திய தங்கமயமான உபயசரண கமலங்கள் வருத்தமிறும்படி இங்ஙனம் அருட்சுரந்த விதியாதோ? அவற்றைத் திருவாய் மலர்ந்தருளினால் அத்தன்மையாய் அடியேனளித்து கண்ணிணைவதல்லாமலுந் தேவரீரது கருணைகடாசத்தா ளுள்ளந் தோய்வேனென்றான். அப்போது ஜங்கமர், இப்பூமண்டலத்தின்கண் கீர்த்திப்பொருந்திய வல்லாளமகாராசனே கேள் உனது அரசும் செங்கோன் முறையும் நீடூழிகாலம் வாழும். இப்போது உன்னை யாம் வேண்டிவந்த காரணம் யாதெனில் உருவிலியாகிய சித்தஜனெய்யும் முல்லை, அசோகு, நீலோற்பலம், மாம்பூ, தாமரை மலரென்று சொல்லப்பட்ட ஐந்து கணைகளினாலும் இன்று யாம் படுந் துன்பத்தை நீக்கும்பொருட்டு. ஒரு ஸ்திரீயை எனக்குக் கிட்டும்படி செய்வாயாகில் உனது கீர்த்தியானது ஏழுகடல் சூழ்ந்த இவ்வையகத்தின்மீது பிரகாசம் பொருந்தி யிருக்குமென்றார்.

அதற்கரசன் ஜங்கமரே! அவ்வகையாய் பரஸ்திரீகளை இச்சித்துத் திரிவதைப்பார்க்கிலும் எக்காலமும் தேவரீரை விட்டகலாம லிருக்கும்படியாய் சிறப்போங்கிய மணஞ்செய்து வைக்கின்றேனென்று மிகுதிபக்தியும் பரிவுங்கொண்டுரைக்க, வல்லாளமகாராசனது அன்பு நிலையையறிந்த ஜங்கமராகிய சிவபெருமான் கேளும் ஓ அரசனே! இப்போது நீ சொல்லிய வார்த்தை கொடிய துன்பத்துக்கிடமாயும் சுடர்முன் மெழுகுபோல மனதை ஒழுங்கு படுத்தாமல் நானாவித கோலங்களை உண்டுசெய்வித்து அலையச்செய்து, பஞ்சேந்திரியங்களுந் தடுமாறி. காமமயக்கத்தால் நாவறட்சி செய்கிறது. காமப்பிணியைப்போக்கும் அமிழ்தம்விலை மின்னார்களுக்குக் கைவல்லியப்பட்டதேயன்றி இதரமான ஸ்திரீகளறியார்கள் ஆதலால் அன்னவரால் என் பிணியை மாற்றுவிப்பாயென்று கூற, அரசன் மகிழ்ந்து இல்வாழ்க்கையைக்கடந்து நிட்டையென்னும் அட்டாங்க யோகங்களையும் செய்யப்பட்ட தபோதனர்களுக்கு ஞானோபதேசஞ் செய்விக்கும் மகாமகிமை பொருந்திய தேவரீராகிய சங்கமரே உமது கருத்தின்படியே நடத்துகிறேனென்று சொல்லி அங்குள்ள காவல்காரரையழைத்து நீங்கள் அதிசீக்கிரமாய் சிறப்போங்கிய கணிகை மின்னார்கள் வாழும் வீதியிற்சென்று அதிரூபலாவண்ய முள்ளவளாய் ஓர் ஸ்திரியை அழைத்து வாருங்களென்று விடைதரக் காற்றிலும் அதிகவேகமாய் நடக்குங்காவலர்கள் சென்றார்கள்.

அரசனது ஆக்ஞையைப்பெற்றுச்சென்ற தூதுவர்கள் அழகிய விலைமாதர்கள் வாழும் வீதிகளில் மனைகள்தோறும் புகுந்து புகுந்து பார்த்து வருகையில் ஒரு வீடாகிலும் நீங்காமல் சுரலயத்தோடு கந்தபரத நாட்டியங்களும் வீணைகான சங்கீத முழக்கத்தோடும்

சிவனடியார்கள், வீடுகள்தோறும் தனித்தனியாயிருந்து ஆனந்தித்துக்கொண்டிருக்குஞ் சம்பிரமங்களைக்கண்டு இன்று முடியாதென்று கருதினவராய் தமது அரசனிடம் வந்து கூறினார்கள். இவ்விதமாய்த் தூதர்கள் உரைத்தமொழியைக் கேட்ட அரசன் கோபித்துத் தனது மந்திரிமார்களைப் பார்த்து நாம் பரமசிவத்தின் அடியவராகிய சங்கமருக்கு உரைத்தமொழியானது பிறழ்ந்துபோவது ஜகதீசனாகிய ஸ்ரீ அருணாசலேசனது திருவுளச்செயலோ? அல்லது நாம் ஆண்டவனுக்கு செய்த பூசைகளின் குறைவோ? என் செய்வேன் செவ்விய சொற்கள் பிரகாசியாநின்ற சங்கமர் நம்மை நாடிக்கோரிய ஸ்திரீகள் கிடைப்பது அரிதென்று அவர் முன் யான் புகலுவது தருமமோ என்று துன்பப்பட மந்திரிமார்கள் அரசனைப் பார்த்து அரசே! மனதிற் கவலைகொள்ள வேண்டாம் கடையர்களாகிய யாங்கள் சென்று அடியவர் கோறியவண்ணம் அதிரூபலாவண்ணியமுள்ள கணிகைமாரைக்கொண்டு வருவோம். தாங்கள் துன்பத்தை யொழியுமென்று சொல்லி அன்னவர் வாழும் பேட்டையாகிய வீதிகளிற் சென்று மனைகளிற் புகுந்து பார்க்கையில் எங்குஞ் சிவனடியார்களாய் விளங்கியிருப்பதைப் பார்த்ததும், ஓமாதர்களே! நீலோற்பவம் போன்ற பிரகாசம் பொருந்திய கண்களையுடைய பெண்கள் கூட்டமாய் வாழ்ந்துக் கொண்டிருக்கும் வீதியில் யாராகிலும் ஒரு கணிகை உண்மை விளங்காநின்ற எங்களிறைவனை நாடிய சங்கமரது வெவ்விய கர்மநோயைத் தணிப்பாரேயாகில் அன்னவர்கள் இரு கரங்களுக்குங் கடகமும், காலிற்கு பாதச் சதங்கையும், இ னும் பலவித பூஷணங்களுடன், நெய்-பால்-தயிர் முதலிய சுட்சுவை பதார்த்தங்களோடும் அமுதுண்டு சதாகாலமும் யாதுங் குறைவின்றி வாழ்வார்கள் என்றழைத்தார்கள். இவ்வண்ணமாய் மந்திரிகளுரைத்த மொழியைக் கேட்ட கொடிமின்னலைப் போன்ற இடையினையுடைய அக்கணிகை மாதர்கள் எதிர்வந்து|நின்று, பணிந்து, பலவாறுகத் துதித்து, நாங்கள் யாவரும் இன்று பகற்போதே நம்மையாட்கொள்ளும் ஸ்ரீ அருணாசலேசருடைய மெய்த் தொழும்பராகிய இவ்வடியார்களிட மின்றிரவு விடியுமளவும் இணங்கி நடப்பதாய் பொன்னைப் பெற்றுக்கொண்டோமாதலால் இத்தினஞ் செல்லுமாயின் தேவரீர்கள் சொல்லியபடி நடக்கலாமென்று மொழிய, அது கேட்ட அமைச்சர்கள் அத்தம்மனஞ்சலித்து அவணின்று நீங்கி அரசனிடம் வந்துரைத்தார்கள்.

அப்போது அரசன் அற்பமாகிய இச்செய்கை நமக்குக் கிடைப்பது துற்பலமாக விருக்கும் காரணம் யாது? ஐயோ வென்று அரசன் துன்பமடைந்த பின்னர் நானாவிதமாய் மனதிலேக்கங்கொண்டு இதுவும் பரமசிவனுடைய திருவிளையாடல் தானோ? ஜகதீசனைப் போல் வடிவுகொண் டெழுந்தருளி வந்த ஜங்கமர் கோறியவண்ணந்

தருவேனென்றெழுந்து வில்லேந்தி பொளிரும் வல்லாள மகாராசனவன் மிகவும் தீவிரமாய் விலைமாதர்கள் வாழும் வீதிக்குச்சென்று, அக்கணிகைகளை நோக்கி பெண்களே! நம்பதியை நாடி வந்தவர்கள் எந்தப் பொருளைக்கோறி கேட்டபோதிலும் கொடுக்கிறேமென்று ஆகாய பரியந்தம் உயர்ந்து படபடாகாரஞ் செய்து பறக்கும்படியாய் துவசமுயர்த்தி நடத்திவரும் நாட்களி லின்றையத்தினம் விரக வேதனையால் மெலிந்து நம்மை நாடிவந்த அழகிய சங்கமருக்கு உமதுநோயை யகற்றுவோமென்று கூறிய வண்ணம் மாறாது ஆசையோடுங் காப்பாற்றிய கணிகைக்கு எனது அரசக்குரிய இப்பதியை யளிப்பேன்; யானை, குதிரை முதலியவைகளோடும் தாங்கள் வேண்டிய பொன்னுந் தருவேன்; இதல்லாமலும் முத்துக்களினால் அலங்கிருதஞ்செய்த பல்லக்கும் கொடுப்பேன்; இப்பூமண்டல முழுமையும் ஆள நினைத்தபோதிலும் எனது செங்கோலைக் கொடுத்தாளும்படி செய்து அன்னவர்கட்கு யான் பணிவிடையுஞ் செய்வேன்; இன்று நாடிவந்த ஜங்கமரது காமநோயைத் தணித்தால் என்னைப்பயின்ற அன்னையுமாவார்களென்று பதன்றான். கடல்சூழ்ந்த இவ்வுலகின் கண் வழங்கும் இன்பங்களுக்கெல்லாம் மேலாகியதும், மானார் விழியினையுடைய பெண்களின் கலவித் தொழிலில் வரும் இன்பமே யதிகமென்றும் வேதநூலுணர்ந்த முனிவர்களும் கூறியிருக்கின்றார்களாதலால், நமது பதியை நாடிவந்த மேன்மைபொருந்திய ஜங்கமரை வருத்தும் விரக வேதனையை இன்று மாற்றினவர்களுக்கு பிரகாசம் பொருந்திய எனது பிராணனைத் தானமாகக் கேட்டபோதிலும் அளிப்பேன்! வருவீர்; கணிகை மின்களேயென்று வல்லாள மகாராசன் கூறக்கேட்ட விலைமாதர்கள், தேவரீர் ஆக்கினையின்படி நடந்து வரும்நாங்கள் இன்றையதினம் குற்றமற்ற பரமசிவத்தின் அடியார்களிடத்தில் பொருள் பெற்றுக்கொண்டோமாதலால் எங்களையாட்கொள்ளும் இறைவனே! யாங்களென்னசெய்வோமென்று அடிபணிந்துரைக்க அம்மொழியைக் கேட்ட வல்லாள மகாராசன் நாணமுற்றவனாய்க் கீர்த்திப்பொருந்திய தனது அரண்மனையைச் சேர்ந்தான்.

## சல்லமா தேவி

அப்போது தன்னுடைய பூரணச் சந்திரோதயம் போன்ற முகாரவிந்தமானது விசனத்தால் வேறுபட்டிருப்பதைக் கண்ட அவன் தேவிமார்கள் மல்லமா தேவியும், மிகுவண்மை பொருந்திய இளையாள் சல்லமா தேவியும் இவ்விருவரும் நெருங்கி வந்து நெடிய கடல் சூழ்ந்த உலகங்களையெல்லாம் ஒரு குடை நீழலின்று பரிபாலனஞ் செய்யும் எங்கள் காதலனே எந்நாளுமில்லாது இன்று யனதிற் றுன்பம் நேர்ந்தவாறென்னே? அதனை தேவரீர் திருவுளம்

பற்றவேண்டுமென்று பாதகமலங்களில் பணிந்து கேட்க, அங்ஙனம் பரிசுத்தமாகிய நிலையினையுடைய வல்லாள மகாராசன், மங்கையர்களே! இன்றையதினம் ஓர் பெரியவர் சேல்போன்ற விழியினையுடைய மடந்தையர்களது மயக்கத்தின்மீது மனம்வைத்து வெற்றி பொருந்திய நம்பதியைச்சேர்ந்து நம்மை வினவினவண்ண மிசைந்து இவ்வருணைமாநகர் முழுமையும் விலைமாதர்கள் வாழும் வீதி எங்கினும் தேடியும் கிடைப்பது பிரயாசையாயிருப்பதால் துன்பமுற்றேன், நான்கொண்டிருந்த வைராக்கியத்தையுந் துறந்து விட்டேன் என்செய்வேன்? அடியவருக் குரைத்த மொழிதப்பிப் போகிறதேயென்று கூறித் துன்பமுற; வேந்தனது வாய்மையை கேட்ட மங்கையர்கள் அசரனை நோக்கி, விரகவேதனையால் மெலிந்து வந்த சங்கமருக்கந் நோயைத் தணியச் செய்கிறேனென்று வாக்குதத்தஞ் செய்த எங்களரசே! தங்களுடைய கருத்து எத்தன்மை பொருந்தியதா யிருக்கிறதோ சிறியேங்களறியோம். ஆதலால் எங்களிருவர்களிற் சிறியவளாகிய என்னை அவ்வடியவர்க்கிசையச் செய்யும்படியாய்க் கருத்திருக்குமாயின் தேவரீரது எண்ணங் குறைபடாமல் எவ்விதமே நடக்கிறேனென்று கூறினாள். அப்போது வல்லாள மகாராஜன் மனமகிழ்ந்து தனது மங்கையைப்பார்த்து ஓ பெண்கள் நாயகமே! எனது எண்ணத்தை நிறைவேற்றி வைத்த கண்மணிகளே! நம்மை நாடிவந்த சங்கமரோடு பள்ளியறையிற் சேர்ந்து மன்மதனாற் படுந்துன்பத்தைப் போக்குவாயென்று சொல்லி விடை கொடுத்துப்பின்னர் பெரியவரிடஞ்சென்று தேவரீர் கருத்தின்படியமைத்தே னங்கீகரித்துக், கொள்ளுங்களென்று மிகு பத்தியோடு கூறினான்.

## ஈசனே புத்திரன்

இராஜபத்தினியாகிய சல்லமாதேவி உடனே மஞ்சனமாடி, ஆடையாபரணாலங்கிர்தஞ் செய்து, சுகந்த பரிமளங்களை யணிந்து, பஞ்சகச்சாயவர்க்கங்க ளேந்தி, வீணையெடுத்துப் பள்ளியறையுட் பிரவேசித்து, இந்திர நீல மரகதங்களா லமைத்தொளிரு மஞ்சத்தில் அம்சதூளிகாசயனத்தின் மீதாரோகணித்துக் கொண்டிருக்கும் அடியவர் பக்கலினின்று, நனி இன்னோசையைத்தரும் வீணையை மீட்டிக் கீதம் பாடிக்கொண்டு சிலநேரஞ் சென்றபின்பு பெரியவர் சித்திரப் பிரதமைபோ லசைவற்றிருப்பதை நோக்கையில் உத்திராட்சமாலிகாபரணமணிந்து விளங்கும் மெய்யினையுடைய பெரியவர் யோக நித்திரையிலிருப்பதைக் கண்டாள். பின்னையும் அருந்ததிக் கொப்பாகிய அவ்வரசியானவள் அங்ஙனம் யோக நித்திரையி லிருக்குஞ் சங்கமர் மனமகிழத்தக்கதாக நினைத்து பிரகாசம் பொருந்திய அன்னவர்மீது மிக்க சுகந்த முலவும் பன்னீரை எடுத்துத் தெளித்தும், நன்னயத்

தோடு நின்றும் கண்விழியாமலும் தன்னையும் நோக்காமலு மிருப்பதை யுணர்ந்த தேவியானவள் சிந்தைமெலிந்து, இராஜாதி இராஜனைப் வெங்கோயானுரைத்த வாய்மை வியர்த்தமாவது தருமமோ? ஐயோ கடவுளே என்று தொழுது அங்கு நித்திரையி லிருக்கும் பெரியவர்மீது மெதுவாய்ச் சாய்ந்து ஆலிங்கனஞ் செய்கையில்; ஸ்ரீ கைலாசபதியாகிய பரமசிவன் ஏந்தும் குழந்தை வடிவமாகி களிப்பும் ஆச்சரியமுங் கொள்ளத்தக்கதாய் செங்குமுதம் போன்ற அழகிய வாயைத் திறந்து அழுகைசெய்ய வாரம்பித்தார்.

## ரிஷபவாகன சேர்வை

ஸ்ரீ கயிலாசபதியாகிய பரமசிவன் குழந்தை வடிவாய் அலறியழுகின்ற செய்தி யறிந்த அரசனானவன், இது ஆண்டவன் திருவிளையாடலென் றுணர்ந்து, மிகத் தீவிரமா யங்கனஞ் சேர்ந்து வனசமலர் களைப்போன்ற விருகரங்களா லெடுத்தணைத்து, முத்தமிட்டு, உச்சிமுகந்து, கனிகாதலோடும் பேரானந்தங் கொண்டிருக்கையில் ஜாதிரூபனாகிய எம்பெருமான் மாயமாய் மறைந்தார். அப்போது, அரசனும், அரசியும், சந்திரசடாதர மூர்த்தியாகிய ஐயனே! தேவரீரது திருவுளச்செயலை மடமையோராகிய யாங்கள் தெரிந்துகொள்ளுவோமோ நீக்கமற்றவனே! நிர்மலகுணனே! உலகநாயகனே! ஜெகதீசா! சிவப்பிரகாசா! அரகரா! அண்ணுமலைநாதா! உண்ணுமுலைப்பாகா! ஜடாமகுடத்தில் மூன்றாம்பிறையும், கங்கையும், ஞானவுலாவுந்தரித்த சோதிசொரூபா! காளகண்ட திரிநேத்திரா! கருதுமடியவர் தோத்திரா! மான்மழு, சூலகபாலா! மறைபுகழ் சீலா! காமதகனா! முயல்கமர்த்தனா! மறையுருவனே! சுருதிநாயகனே! புலித்தோ லுடையோனே! திரிபுர மெரித்தவனே! நாகாபரணனே! சிரமாலை தரித்தோனே! மார்க்கசகாயனே! மாதவர்க் கனுகூலனே! கங்காதரனே! கிருபாகரனே! பராசத்தியை வாமபாகம்பெற்ற மகானுபாவனே! சர்வத்திற்கும் தானாய் நின்றவனே! ஆபத்பாந்தவனே! அடியார்களுக்கு அபயாஸ்தங் கொடுப்பவனே! மெய்ஞ்ஞானச்சுடரே! உமது பரிசுத்தம் பொருந்திய உபய சரணாரவிந்தங்களுக்கு தொண்டராகிய எளியேங்களைச் சோதனைச் செய்யும் பொருட்டோ புதல்வனாகவுந் தோன்றி மறைந்தீர், மேன்மையுற்றவனே எங்களுக் கென்ன மதி? என்று ஆற்றப்படாத துன்பத்திலழுந்தினார்கள்.

அரசனானவன் இவ்வகையாய் மனம் வெதும்பிக் கோவென்று வாய்விட்டலறி நிற்கையில் மகிமை பொருந்திய தபத்தினை யுடையவர்கள் போற்றி பணியத்தக்க பரமசிவன் விடைமீதேறி அநேக சிவகணங்கள் சூழத்தக்கதாகவும், பிரமனும், விஷ்ணுவும் வாகனங்களிலேறிவரவும், அருணையம்பதியை ஆளும் வல்லாள மகாராசனுக்கு

தரிசனந் தந்தார். அப்போது அரசன் ஆவலோடும் பூமியிற் பணிந்தெழுந்து சிரமிசை யிருகரங்களையுங் கூப்பித் துதித்து, ஆதிநாயகனாகிய தேவே சரணம், உலகின்கண் அடியார்களைச் சோதித் தாட்கொள்ளும்படியாகிய பூரணனே சரணம், அருட்பெருஞ் சுடரே சரணம், கங்கையையும் மூன்றாம்பிறைச் சந்திரனையும் பரிசுத்தமாய் பொன்போற் பிரகாசிக்குஞ் சடையிற்றரித்திலகும் பரம்பரனே அடியேனது செங்கோல் விதியை ஏற்றுக் கொள்ளும்படியாய் ஓர் புதல்வனைக் கடாக்ஷித்தருளல் வேண்டுமென்று தொழுதான். அப்போது பரமசிவன் அழகுலாவும் கீர்த்தி பொருந்திய அரசே கேளாய் யாமே உமக்குப் பிள்ளையாய் தோன்றினபடியால் உனது அந்தியகாலத்தில் வேதவிதியிற் அருஞ் சடங்குகளைச் செய்து வருவோம். நீ வாழக்கடவை என்று கூறித் தேவகணங்களுடன் கயிலாசகிரியைச் சேர்ந்தார். பின்பு மிகுந்த ஆவலோடும் வல்லாளமகாராசன் அருணையம்பதியை ஆண்டு வாழ்ந்து வந்தான்.

என்றிவ்வாறு நந்தியெம்பெருமான் அருளிச்செய்யக் கேட்ட மார்க்கண்டேய முனிவர் ஆனந்தக் கடலில் ஆழ்ந்து பக்தியில் மூழ்கி இன்புற்றிருந்தார். இனி பிரமதேவன் ஜனக ரிஷிக்கும், ஜனகர் வேதவியாசருக்கும், வேதவியாசர் சூத ரிஷிக்கும், சூதர் நைமிசாரண்ய ரிஷிகளுக்கும் திருவாய்மலர்ந்தருளிய தீர்த்தங்களின் மகிமையும், அதிற் செய்யப்பட்ட தருமங்களும், கிரிப்பிரதக்ஷணத்தின் மகிமையும், இலிங்க மகத்வமும், சுவாமியை வணங்காதவருடைய இகழ்ச்சியையும், சுவாமியினது பொருளை அபகரித்தவர்களுக்கு வருகின்ற பாவமும், பந்தபாசமறியாமற் செய்த பாவமும்; மனதார அறிந்து செய்த பாவமும், முன்னோர்கள் அப்படி வந்த பாவத்தைத் தீர்த்துக்கொண்ட முறைமையும், சுவாமியினால் மகிழ்ச்சி யடைந்த புனுகு பூனையின் செய்கையுஞ் சொல்லி முடிக்கின்றேன்.

## தீர்த்தம்

கௌதம ரிஷியானவர் சுவாமியின் சந்நிதி முன்னே வேள்வி யொன்று செய்கிறதற்கு யத்தனித்து அக்கினி வளர்க்க அதில் சுவாமியின் கிருபையால் முன்னமே தோன்றியிருக்கிற சிவபிராமணன் அக்கினி சொரூபம்போலப் பிறந்தான். அவனைப் பார்த்துக் கிரிரூபமாக விளங்கிய அருணாசலேசரைப் பூசை செய்யென்று புகழ்ச்சியோடு கூறினார். அதன் பின்பு கௌதமர் ஏழு தருப்பையெடுத்துக் குண்டத்தின் அக்கினியிலே போட, அவ்வளவில் ஏழு பெண்கள் தேவதாசிகளாகப் பிறந்தார்கள். அவர்களைப் பார்த்து நீங்கள் சுவாமியின் சந்நிதியில் நாட்டியஞ் செய்து வாருங்களென்றார். அவர்கள் நன்மையாகிப் பல தடாகங்களை யுண்டாக்கி ஊரைச் சிறப்பு செய்தார்கள்.

தேவர்கள் மந்திரங்களாலே தோத்திரம் பண்ணப்பட்ட அக்கினி மலைக்கு அடுத்த கிழக்கு திக்கில் இந்திர தடாகமென்று ஒன்றுண்டு. அதைத் தேவேந்திரன் முன்னுண்டாக்கி அதில் ஸ்நானஞ் செய்து தன்னைப்பற்றிய தீவினைகளை நீக்கிக்கொண்டு சூரியனுள்ளளவும் வாழத் தெய்வலோகத்தைப் பெற்றான். அதில் தேவலோகத்திலுள்ளவர்கள் நித்தியம் முழுகுவதாலே சந்தனக்குழம்பின் வாசனையும் கற்பக புஷ்பத்தின் மாலையினுடைய வாசனையும் இடைவிடாது மணக்கும். அந்த தீர்த்தத்தில் தைப்பூசத்தில் ஸ்நானஞ் செய்து ஒருகை சலம் ஆசமனஞ் செய்தால் கோடி பிரமத்திதோஷம் போய்விடும்.

அந்த மலைக்குத் தென்கிழக்குத் திக்கில் அக்கினி தீர்த்தமென்று ஒன்றுண்டு. அது முன் அக்கினிதேவன் ஒருநாள் வேதமுணர்ந்த ஏழு முனிவர்களுடைய பத்தினிகளை விரும்ப அதைத் தவது பெண்சாதியாகிய சுவாகாதேவி என்பவளறிந்து அந்த மாதர்கள் வடிவத்தைத் தானெடுக்கப் புணர்ந்து மேலே நினைத்த பாவத்தைத் தீர்த்துக்கொள்ள அந்த தீர்த்தத்தை யுண்டாக்கி அதில் ஸ்நானஞ்செய்து பாவத்தை போக்கிக்கொண்டான். அத்தீர்த்தத்தில் பங்குனி மாதம் பௌர்ணமையில் முழுகினால் மாதர்களால் வந்து பொருந்திய பாவந்தீரும்; தருமமும், தவமுஞ் சேரும்.

அம்மலைக்குத் தென்பக்கத்தில் எமதீர்த்தமென்று ஒன்றுண்டு. அது பிரமதேவனது ஆயுதந்தொடர்ந்து தேகங் குன்றியதை எமன் முழுகித் தீர்த்துக்கொண்டது. அத்தீர்த்தத்தில் முழுகினால் உடல் பொன்வடிவமாகும்; தேகத்திலுள்ள வியாதிகளெல்லாம் போகும்.

அந்த மலையின் நிருதிமூலை திக்கில் தீர்த்தமொன்று ஒன்றுண்டு. முன்னே நிருதியானவன் முழுகியதால் நெருப்பு நிறம்போன்ற கண்களையும், ஆழமாகிய வாயையுமுடைய பேயைத் தன்வசமாகிக் கொண்டான். அத்தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்தால் பகைகளெல்லாந் தீரும்.

அந்த கிரிக்கு மேற்குத் திக்கில் வருணதீர்த்த மென்று ஒன்றுண்டு. அதில் முன்னே ஒன்பது கிரகங்களும் முழுகி தங்களிஷ்டத்தை யடைந்தார்கள். அதில் ஸ்நானஞ் செய்தால் ஒன்பதி கிரகங்களும் நன்மையைக் கொடுக்கும்.

அவ்வெற்பின் வாயுதிக்கில் வாயுதீர்த்த மென்று ஒன்றுண்டு. அதில் முழுகினால் எல்லாத் துன்பமும் தீரும்.

அம்மலையின் வடக்கு திக்கில் குபேர தீர்த்தமென்று ஒன்றுண்டு. அதில் முழுகினால் தரித்திரம் நீங்கிப்போம்.

அந்த மலையின் ஈசான்யத்தில் அசுவனி தீர்த்தமென்று ஒன்றுண்டு. அது அசுவனி தேவர்களால் உண்டாக்கப்பட்டது, அதில் ஸ்நானஞ் செய்தால் நீசரைப் பார்க்கிலும் இழிந்தவராயிருந்தாலும், பெருமையோடு நான்குவருணத்திலு மதிகமாகிப் பரமசிவனைச் சேருவார்கள்.

முன்சொன்ன யமதீர்த்தத்திற்குத் தெற்காக அகஸ்திய தீர்த்தமென்று ஒன்றுண்டு. அதில் புரட்டாசி மாசத்தில் ஸ்நானஞ்செய்து ஒரு கைஜலம் உட்கொண்டபேர்கள் சந்திரனைப்போல பிரகாசித்து தமிழிற் சிறந்தவர்களாவார்கள்; இலட்சுமியும், சரஸ்வதியும் அவர்களிடத்திற் சேர்ந்திருப்பார்கள்.

முன்சொன்ன குபேர தீர்த்தத்திற் கருகே வசிஷ்ட தீர்த்தமென்று ஒன்றுண்டு. அதில் வசிஷ்டர் ஐப்பசி மாசத்தில் முழுகி முனிவர்களுக் கெல்லாம் முதன்மையா யிருக்கப்பெற்றார். அப்படிப்பட்ட தீர்த்தத்தில் முழுகினவர்களுக்குச் சாஸ்திரங்க ளெல்லாம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளங்கும்; பாவமாகிய கடலையுந் தாண்டுவார்கள்.

இன்னும் கங்கை, சிவசுப்பிரமணியர், விநாயகர், பார்வதி, வயிரவர், சூரியன், சந்திரன், சத்தகன்னிகள், அஷ்டவசுக்கள், சரஸ்வதி, மற்றுமுள்ள தேவர்கள் முழுகிய தீர்த்தங்கள் அனேக முண்டு. அதுகளில் ஒவ்வொரு தீர்த்தத்தின் பெருமையை வேதங்கள்கூட சொல்ல அறியாதுகள்.

திருவண்ணாமலைக்கு வடக்குப் பக்கத்திலே ஒரு நதியையும் ஒப்புச் சொல்லக்கூடாத திருநதி யென்று ஒரு நதி யுண்டு. அதில் இலட்சுமி முழுகி விஷ்ணுவுடைய மார்பைச் சேர்ந்தாள். அந்த நதியில் ஸ்நானஞ் செய்தவர்கள் நினைத்த வரங்களை யெல்லாம் பெறுவார்கள்.

அம்மலைக்குத் தென்பாரிசத்தில் நர்மதாநதி வணங்கும் சோணநதியென்று ஒரு நதியுண்டு. அதில் கங்கை, காவேரி, முதலிய நதிகள் முழுகி தங்கள் துன்பத்தை போக்கிக்கொண்டார்கள். அந்த நதியில் ஸ்நானஞ் செய்தால், துன்பங்களெல்லாம் நீங்கும்.

அந்த மலையின் மேற்பாரிசத்தில் புண்ணியநதியென்று ஒன்றுண்டு. அந்நதியின் அருகே புண்ணியாற்றூரின் ஈழனென்கிற அரசன் முழுகி தனக்குத் தீங்காகவந்தடைந்த பெண்ணுருவத்தைத் தீர்த்துக்கொண்டு நல்ல உருவமும் வேண்டியபேறும் பெற்றான். அந்நதியில் ஸ்நானஞ் செய்தால் நல்ல உருவமும் வேண்டிய பேறும் அடையலாம்.

முன்சொன்ன திருநதிக்கு வடபாரிசத்தில் சேயாறு என்னும் ஒரு நதியுண்டு. அதுமுன் சிவசுப்பிரமணியர் வேலெறிந்து அழைத்ததீர்த்தம் அதில் சிவசுப்பிரமணியரே முழுகி அசுரர்களைக் கொல்லும் வரமும், தேவர் சேனாபதியென்கிற பெயரும் பெற்றார். அந்த நதியில் ஸ்நானஞ்செய்தவர்கள் நினைத்த வரங்களை யடைவார்கள்.

சுவாமியினது ஆலயத்தினுள்ளே சிவகங்கை யென்கிற தீர்த்தமொன்றுண்டு. அதில் அனேக ருத்திரர்கள் மாசிமாதத்தில் முழுகி ரிஷபவாகனரூடராய் எல்லாத் தேவர்களிலும் மேன்மைபெற்றார்கள். அந்த தீர்த்தத்தில் மாசிமாசத்தில் ஸ்நானஞ்செய்தவர்கள் எல்லா தேவர்களை பார்க்கிலும் மேன்மைப் பெறுவார்கள், அதை தினந் தோறும் மனதில் நினைத்தவர்கள் கங்கையில் முழுகின பலனை யடைவார்கள்.

அந்தச் சிவகங்கைக்குக் கிழக்கில் சக்கரதீர்த்தமென்று ஒன்றுண்டு. அது முன்னே விஷ்ணு வராக அவதாரத்தில் முழுகி பேறுபெற்றதாகும். அத்தீர்த்தத்தை வலமாகவந்தவர்களும், அதில் முழுகினவர்களும், அந்நீரையுட் கொண்டவர்களும், துக்க சமுத்திரத்தினின்று நீங்கிச் சிவபிரானது இரண்டு பாதங்களையும் பெறுவார்கள்.

அருணாசலேஸ்வரர் எழுந்தருளியிருக்கின்ற கோயிலுக்குப் பக்கதில் அக்கினிதிசையில் பிரமதீர்த்தமென்று ஒரு தீர்த்தமுண்டு. அதில் முழுகினவர்கள் பிறவிக்கடலில் முழுவார்கள். ஆயிரம் பிறப்புகள்தோறுஞ் செய்த தீவினையையுந் தீர்ப்பார்கள்.

## தானம்

அந்தத் தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்து அணுவளவு தங்கம் தருமம் செய்தால், அது இந்த பூமியை யெல்லாம் சொர்ணத்தினாலும் நவரத்தினங்களாலும் நிறைந்து அவைகளையெல்லாம் சுவாமியினுடைய பக்தரிடத்திற் கொடுக்கும் பலனிலும் அதிகமாகும்.

அந்த தீர்த்தங்களில் முழுகிச் சிகப்புப் பசுவைத்தானஞ் செய்தவர்கள் மதங்கொண்ட வெள்ளை யானைகள் சூழ்ந்து தாங்கப்பட்ட மகாமேருபோலுஞ் சொர்ணவிமானத்திலேறிக் கொண்டு மேனகை, அரம்பை, இருவரும் பரிசுத்தமாகிய கவரிவீசப்போய் அப்பசுவினது மயிர் ஒன்றுக்கு ஒருகர்ப்ப காலம் சிவபத்தில் யிருப்பார்கள்.

அத்தீர்த்தத்தில் காலமே முழுகிக் கறுப்புப்பசுவைத் தானஞ் செய்தவர்கள் அழகு பொருந்திய நீலமலைபோல் நீலரத்தினமிழைத்த விமானத்திலேறிச் சூலாயுதம் பிடித்துக் கொண்டு பூதகணங்கள்

தொடர்ந்து வந்து வணங்க நெற்றிக்கண்ணையுடைய சிவனது திவ்ய பதத்திலிருப்பார்கள்.

அத்தீர்த்தத்தில் முழுகி வெள்ளைப் பசுவைத் தானங் கொடுத்தவர்கள் ஆயிரம் வெள்ளை ரிஷபங்கள் சூழ்ந்த முத்தினுலலங்கரிக்கப்பட்ட விமானத்திலேறிக்கொண்டு தேவர் கூட்டங்கள் சேர்ந்து வணங்கச் சுவாமிபாதத்தில் சேர்வார்கள். மழைக்குக் குடையும் வெயிலுக்கு பாதரட்சையுங் கொடுத்தவர்களும் இகழ்தலில்லாத குதிரை கொடுத்தவர்களும் இந்திர பதவியிற் சேர்வார்கள்.

அத்தீர்த்தக் கரையில் கன்னிகாதானஞ் செய்தவர்கள் தேவலோகத்திலும், சுவர்க்கலோகத்திலும், குபேரனுடைய அளகாபுரி பட்டணத்திலும், பிரகாசம் பொருந்திய பிரமலோகத்திலும் சிலசில நாட்களிருந்து விரும்பினவற்றை யெல்லாம் அனுபவித்துத் தேவர்கள் தலையாலே வணங்க அதன்பின் சிவபதவியிற் சேர்வார்கள்.

திருவண்ணுமலையில் அன்னதானஞ் செய்தால், அது உத்தமமாகிய தலங்களில் அருமையாகிய கோடி தவசிகளுக்கும், காசியில் பெரியோர்களுக்கும், கோடாகோடி தவசிகளுக்கும் படைத்த அன்னதானத்திலும் அதிகமாகும்.

பசுவின் குளம்படியளவு பூமியை பிராமணர்களுக்கு தானஞ் செய்தவர்கள் பரமசிவன் பாதார நிழலில் தங்களுடைய சுற்றத்தோடு களித்து வாழ்வார்கள். சுவாமிக்கு பெருமை பொருந்திய ரிஷபங்களைத் தானஞ் செய்தவர்கள் வேறு ரிஷபவாகனத்திலேறிக்கொண்டு சிவலோகத்தில் பவனியாகப் போய் சந்தோஷித்திருப்பார்கள்.

அருணசலத்தில் சாலை வைத்தவர்களும், நந்தவனம் வைத்தவர்களும், கிணறுகள், மணற்குன்று பொருந்திய குளங்கள் வெட்டினவர்களும், இந்திரபதவி யடைவார்கள். ஆலயத்திலுள்ள பள்ளம் நிறைவி, மெழுகி, விளக்கேற்றி வைத்தவர்களும், அலங்காரஞ் செய்தவர்களும், விஷ்ணுவாய்த் திருப்பாற்கடல் மத்தியில் சர்ப்பசயனத்தில் யோகநித்திரை செய்வார்கள்.

நீரரிதாகிய கோடைக்காலத்தில் தண்ணீர் பந்தல் வைத்தவர்கள் செழித்து மேலாகிய பதவியில் தேவர்களும் புகழும்படி வாழ்வார்கள். யானையுரி போர்த்த சிவனுடைய அன்பருக்கு வஸ்திரங் கொடுத்தவர்கள் ஓர் இமைக்கு அளவிறந்த காலம் சிவபதத்திலிருப்பார்கள்.

இத்தலத்தில் ஒரு மடங் கட்டினவர்கள் அம்மடத்திருக்கிற ஒரு திகளுக்கு ஒரு கற்பகாலம் கெடுதலில்லாத மோக்ஷத்தில் நிலைபெற்றிருப்பார்கள். பின்னும் வேறுவிதமா யிறந்தவர்கட்கு விதியாக

உறுதிபொருந்திய பிதிர்யாகம் அத்தலத்தில் செய்தால் அவர் குலத்தாரெல்லாரும் சிவகதியிற் சேருவார்கள்,

ஒரு காக்கை அத்தலத்துக் கோயிற் பலிபீடத்தில் வைத்திருக்கிற பலியன்னத்தை வாயினுற் கிரகிக்கும் போது தன்னுடைய சிறகால் கிழேயடித்தது. அதைச் சுவாமி பார்த்து ஆலயத்தில் பிரியத்தினல் நம்முடைய் கோயிலை விளக்கினதென்று நினைத்து இந்திரன் வாழ்கிற தேவலோகத்தை அக் காக்கைக்குக் கொடுத்தருளினர்.

ஒரு பெருச்சாளி கோயிலில் வளையுண்டாக்கும் போது தேடுதற்கரிய மாணிக்க மணியொன்று அங்கே சிதறிச் சந்நிதியில் விளக்குப் போலக் காண்பிக்க நடனஞ்செய்த சுவாமி நமக்குத் தீபங் கொடுத்ததென்று அதற்கு ஞான மார்க்கத்தைத் தெரிவித்து சாலோக பதவியைக் கொடுத்தார்.

அம்மலையில் ஒருநாள் ஒரு சிலந்தி வாயினுலால் பின்னலிட இது வஸ்திரஞ்செய்து கொடுத்ததென்று அச்சிலந்தியை அரசனகப் பிறப்பித்து நல்ல ஞானத்தைக் கொடுத்துத் தேகவியோகமான பிறகு விஷ்ணு லோகத்தைக் கொடுத்தார்.

பின்னும் அத்தலத்தில் ஒருவன் மணலைச் சிவனுருவ மென்று நினைத்து வைத்ததனல் அவன் மேலாகிய கதியை சேர்ந்து சிவனென்றும், இவனென்றும் பேதமில்லாமல் இருக்கின்ற சாரூப்பிய ப்தவியைப் பெற்ருன்.

## திருமலை வலம்

அந்த அருணசலத்தை வலஞ்செய்வது பிறவி என்னும் பெரிய கடலைத் தாண்டுவதற்கு ஒரு தோணியாகும்; ஏழு நரகக் குழியிலும் புகாமல் அருமையாகிய முத்தியில் ஏறுவதற்கு ஏணியாகும்; காணுவதற்கு அரிய தவசுக்கும், தருமத்துக்கும், சம்பத்துக்கும் ஒரு காணியாயு மிருக்கும்; ஒளியுள்ள நெற்றியையுடைய் பார்வதியை இடபாகத்தில் வைத்திருக்கின்ற சுவாமியை மனமுருக்குஞ் சந்தோஷமாகும்.

காசி முதலாகச் சொல்லப்பட்ட தலங்களிலிருந்து சுவாமியைக் கற்பகாலம் பூசை செய்த பலனும், அநேககாலங் தவஞ்செய்த பலனும், குரு சொல்லிய முறைப்படி சமாதியில் இருந்து அடைகின்ற சித்திகளும், அருணசலத்தை வலம்வர வேண்டுமென்று சொல்லிய பகவானுக்கு நிகராகுமோ? ஆதலால், அருணசலத்தை வலஞ்செய் யென்று சொல்லுமளவில் பிரமஹத்தி பாதகம் போய்விடும். கருமதையாறு நீரளவு மதுவைப் பானம் பண்ணிய பாவமும், வருத்தமுற்று நடுநடுங்கி யோடிப்போகும். பிறருடைய பொருளை களவுசெய்த

பழமையாகிய பாவமுங் கைகுவித்துக்கொண்டு ஓடிப்போகும். குருவாகிய சுவாமிக்குத் தவறு செய்த பாவமும் பயந்து கருப்பங் குலைந்து ஓடிப்போகும். இறுதியை கொடுக்கும் பாவமும் அருணசலத்தை வலஞ்செய்ய வேணுமென்று நினைத்த அளவில் சூரைக் காற்றி னெதிரிலிருக்கும் தீபம்போலவிந்துபோம். தந்தையைக் கொன்ற பாவம் கருடனைக் கண்ட பாம்புபோல் நடுக்கமடைந்து ஓடிப்போம். குழந்தைகளையும் மாதரையுங் கொன்ற பாவமாகிய கடனும் வற்றிப்போம். எம்முடைய சுவாமி திரவியம் திருடின பாவமும் நானிருக்குமிட மெங்கேயென்று ஓடிப்போகும்.

அருணசலத்தை வலஞ்செய்ய வேண்டுமென்று நினைத்து ஓர யெடுத்து வைத்தவருக்கு யாகஞ்செய்த பலன் சித்தியாம். இரண்டிற்கு இராசசூயயாக பலன் சித்தியாகும். மூன்றடி வைத்தவருக்கு அஸ்மேதயாக பலனுண்டாம். நாலடி வைத்தவருக்கு எல்லா யாகத்தின் பலனுஞ் சித்தியாம். இன்னும் பிரதக்ஷணஞ் செய்கையில் தூக்கிவைத்த ஓரடியின் பலன் பூமிப் பிரதக்ஷணஞ் செய்த பலன் தரும். இரண்டடியின் பலன் சர்வதீர்த்தமாடிய பலன் தரும். மூன்றடியின் பலன் சோடசதானப் பலன் தரும். நாலடியின் பலன் அஷ்டாங்கயோகஞ் செய்த பலன் தரும். அதுவுமல்லாமலும் வலமாக வைத்த ஓரடிக்குப் பூசா பலன்களெல்லாம் பலிக்கும். இரண்டடிக்கு இலிங்கப்பிரதிஷ்டை செய்த பலன் கொடுக்கும். மூன்றடிக்கு கோடிவிமானம் தூபிகளையுடைய கோயில்கட்டியபேறுதரும் இதுவுமன்றி, அருணசலத்தை வலஞ்செய்யவேண்டு மென்று ஓரடி வைத்தவர்கள் உருத்திரபத மடைவார்கள். இரண்டடி வைத்தவர்கள் மகேசுரபத மடைவார்கள், மூன்றடி வைத்தவர்கள் கோடிதலைமுறையிலுள்ள மனிதரையும் பதவியிற் கொண்டுபோய்ச் சேர்க்கும். நன்றியைக் கொடுக்கும் அருணசலத்தை வலமாகச் சிறிதுதூரம் நடந்தவர்களுக்கு நெருங்கிய கிரணத்தை வீசுகின்ற வெள்ளி மலையாகிய கைலாயத்திற்குப் போகும் வழி விரைவில் தொலையும். அல்லாமலும் அம்மலையை வலமாக போகிறபோது பருக்கைக் கல்லுகளாலும், அழற்சியினாலும் கன்றிப்போன காலையுடையவரைக் கண்டால் யமனென்று பயந்து பாவங்கள் ஓடிப்போகும். அக்கினி மலையை வலம் வந்தார்கள், பாதத்தில் ஒட்டியதுகளொன்று காற்றினால் நகரத்தையொத்த இடங்களில் சேர்ந்தால் அதுவுங் கைலாயம் போல் பரிசுத்தமாகும். இன்னும் வலம் வந்தவர்கள் பாதத்துகளிலே ஒன்று மனிதரது தேகத்திற்பட்டால் இறப்பும், அவர்களைப் பின்பற்றிவருகிற பிறப்பும் நீங்கும், அப்படியாகும்போது பிரதட்சணஞ் செய்தவர்களுடைய பெருமைகளை என்ன சொல்லுவோம்.

அந்த அருணசலத்தை வலஞ் செய்தவர்கள் பரமசிவன் வாசஞ் செய்கிற கைலாயமலையைச் சேரும்போது சந்திரன் வெள்ளைக்குடை

பிடிப்பான் ; சூரியன் விளக் கெடுப்பான், தருமதேவதை கைதாங்கி வரும், தேவேந்திரன் வழியில் புஷ்பங்களைப் பரப்புவான், குபேரன் தண்டஞ்செய்து சமீபத்தில் வருவான், அஷ்டவசுக்கள் புஷ்ப வருஷங்களைப் பொழிவார்கள், மேனகையும், அரம்பையும், ஊர்வசியும், திலோர்த்தமையும், வீணை வாத்தியத்துடனே சங்கீதம்பாடி நடனஞ் செய்துக்கொண்டு வருவார்கள். சாப்பிடத்தகுந்த அமிர்தத்தையும் மலையையும் வஸ்திரங்களையும் மேக மெடுத்துக்கொண்டு எதிரே வரும். இலட்சுமி பூவும், கஸ்தூரியுங் கொண்டுவருமுன்னே சதுர் வேதங்களும் புகழ்ந்துக்கொண்டு வரும்.

சிவசொரூபமாகிய அருணாசலத்தை வலஞ்செய்தால் காற்பல மென்றெண்ணுமல் முழுப் பலமாகும். நினைக்கும்போது கங்கை முதலாகிய தீர்த்தங்களி லாடிய பலனும், சிறந்த சிவஸ்தலங்களைத் தரிசனஞ்செய்த பலனும் யோகஞ் செய்தலின்ற் வந்த பலனும் ஒப்பாகாது. எப்போதும் தேவர்கள் வணங்கும் பெருமை பொருந்திய அருணாசலத்தை வலஞ் செய்வோர்களுடைய பாதம் வழியிற் கிடக்கின்ற பருக்காங் கல்லுகளை மிதித்து சிவந்தால் பின்பு வரத்தைப் பெறுகிறதற்கு வணங்கும் தேவர்களுடைய மகுடகோடிகளிற் பதித்துப் பிரகாசிக்கின்ற ரத்தினகோடிகள் தாக்கியுஞ் சிவக்கும்.

அப்படிப்பட்ட அருணாசலத்தை வலஞ் செய்தவர்கள் கால்களைப் பெற்றென்ன பிரயோசனம்; மாமிசந் திரண்ட புழுக்களையுடைய தேகத்திற் சேர்ந்து நரகத்திற் விழுந்து அலைந்து துன்பப் படுவதல்லாமல் பிழைக்கமாட்டார்கள். அதுவுமல்லாமலும் பெரியோர்கள் நல்ல ஸ்திரீகளுடைய போகம் வேண்டினல் அரசர்கள் கைவசமாக வேண்டுமானல், அஞ்சத்தகுந்த பகையெல்லாம் அந்த க்ஷணத்திலே நீக்க வேண்டுமானல், பாலசந்திரன் போல நல்ல பிள்ளைகளை பெறவேண்டுமானல், ஆகாமிய சஞ்சித பிரார்த்துவமாகிய மும்மலங்களையும் நீக்கவேண்டுமானல், முயலகன் போன்ற இராக்ஷதனையும், பிசாசிகளையும், பூத கூட்டங்களையும், கோபிக்க வேண்டினல், துன்பத்தைச் செய்யும் வியாதியையும், தேகத்தில் வரும் சோகத்தையும் நீக்கவேண்டினல் இயலிசை முதலாகிய கல்வியையும், அழகையும் வேண்டினல், குற்றமற்ற கீர்த்தியை வேண்டினல் அம்மலையை வலஞ்செய்வார்கள்.

அந்த திருவண்ணுமலையை ஆதிவாரத்தில் வலஞ்செய்தவர்கள் சூரியமண்டலத்தைப் பிளந்து சிவபதத்தைச் சேர்வார்கள். சோமவாரத்தில் வலமாய்வந்தவர்கள் தேவேந்திரன்போல ஏழுலகத்தையுமாண்டு சிவசாரூப்பியத்தை யடைவார்கள். மங்களவாரத்தில் வலஞ் செய்வோர்கள் தங்களுக்குண்டாகிய கட்டளையும் தரித்திரத்தையும் நீங்கி சங்கிலிக்கட்டுபோல் தம்மைவிடாத ஏழுபிறப்பையும் நீக்கு

வார்கள். புதவாரத்தில் பிரதட்சணஞ் செய்வோர்கள் நாலுவேதங்களும், ஆறுசாஸ்திரங்களும், அறுபத்துநாலு கலைகளும் தெரிந்து முத்திக்கு நெருங்கினவராய்த் தேவர்களாவார்கள். குருவாரத்திலே வலமாய்வந்தவர்கள் திருமூர்த்திகளும் புகழும்படியாகத் தேவர்கள் முனிவர்களுக்கு எஜமானவார்கள். சுக்கிரவாரத்திலே வலஞ்செய்தவர்கள் தாமரை மலரிலிருக்கின்ற இலட்சுமியைச்சேரும் விஷ்ணுபதத்தைச் சேர்வார்கள். சனிவார உதயத்தில் பிரதட்ணஞ் செய்வோர்களுக்கு நவகிரகங்கள் பதினோராமிடத்திலிருந்த பலனைக் கொடுப்பார்கள்; சிவராத்திரியிலும் வருஷப்பிறப்பினன்றும், ஐப்பசி முதலாகிய மூன்று மாதமும் வலஞ்செய்தவர்களுக்கு மேற்சொன்ன பலன்களிலும் அதிக பலன் சித்தியாகும். தளர்ச்சியடையாமல் தினந்தோறும் வலஞ்செய்தவர்கள் உத்தராயணத்திலும், தட்சணாயனத்திலும் மர்சிமகத்திலும், அர்த்ததோதயத்திலும், சூரியகிரகண காலத்திலும், விதிபாதத்திலும் இஷ்டசித்தியை அடையவிரும்பி வலஞ்செய்தவர்கட்குக் கோடிபங்கதிகமாகப் பலன் பெறுவார்கள். அவர்கள் பெரும்பலனை யாரறிந்து சொல்லுதற்கு வல்லவர்.

அப்படி அதிகபலனைத் தரப்படாகின்ற அருணாசலத்தை வலஞ்செய்யும் விதமெப்படியெனில், பிரதட்சணஞ் செய்யும் அன்றைக்குப் பெண்களைச் சொர்பனத்திலும் நினையாமல், ஜலத்தில் ஸ்நானஞ் செய்து, பரிசுத்தமாகிய வஸ்திரத்தை யுடுத்திக்கொண்டு, விபூதி தரித்து, இவ்விடத்திலே தானம் வாங்காமல், பூமியிலே காலினாலே நடந்து கிரியை சுற்றியிருக்கின்ற தேவர்களைப் பணிந்து வணங்கி அங்கத்தில் தரிக்குஞ் சட்டையையும், போர்வையையும், நீங்கிக் குடைபிடித்துக் கொள்ளாமல், பயமும், கோபமும் நீக்கிக், குதிரை யானை முதலாகிய வாகனங்களி லேறாமல், தாம்பூலந்தரிக்காமல், யோசனத்தையும் வெறுத்து, கைகளை வீசிக்கொண்டு போகாமல், சோர்வில்லாமல் சந்தோஷத்தோடு சிரசில் கைவைத்து கூப்பிக் கொண்டு பாராமல் நடக்கிறபோது அடியினுடைய சத்தம் காதிற் கேட்காமல் மெள்ள இராஜஸ்திரீகள் பத்துமாதத்துக் கர்ப்பத்தோடு நடக்கிறதுபோல் நடந்து, நல்வினை தீவினை இரண்டையும் நீக்கும் அந்தக்கிரியை எட்டுத்திக்கும் வணங்கி உருவந்தெரியாமல் வலஞ்செய்துக்கொண்டு வருகிற சித்தர்களையும், தேவர்களையும் மனதினால் வந்தனஞ்செய்து, அவர்கள் மேல் தாங்கள் கைகால்கள் படுமென்று பயந்து, வழியினின்றும் ஒதுங்கிச்சென்று, ஆகாய மட்டுமளாவிய அந்தமலையை நீ பொன்போலவும், படிகம்போலவும், இரத்தினம் போலவும் நினைத்து மவுனமாய் நடக்கவேண்டியது. அல்லது, சுவாமியின் ஸ்துதிகளைக் கேட்கவேண்டியது. இப்படிப்பட்ட தன்மையாக வலம்வந்து கோயிலுட் சென்று விஷ்ணு விளைலறியாத சுவாமியினது பாதங்களை வணங்கித் தாங்களிருக்கும் மிடத்

தக்குவந்து மலைபோலுயர்ந்த குணத்தை யுடையவராகிய சிவபக்தர் கள் சூழவிருந்து மதுரமாகிய பழங்களும், பாலுஞ் சாப்பிடக்கட வர். அப்படி யில்லாவிட்டால் மாமிச பதார்த்தமில்லாமல் அன் னத்தை புசிக்கக்கடவர். இப்படிப்பட்ட, செய்கைகளை நீதிபொருந் திய அந்த ஸ்தலத்தி லிருக்கிறவர்கள் செய்யவேண்டியது. அதிக தூரத்தில் நின்றும் வந்தவர்கள் தங்களுடைய வருத்தத்தினலே எவ்விதமாக வலஞ்செய்தாலும் நன்மையாகும்.

இம்மலையி னெட்டுத்திக்கிலும் திக்குப்பாலகர் எட்டுபேரும் தங்கள் பேரினலே இலிங்கங்களை ஸ்தாபித்து பூசித்திருக்கிறார்கள். வண்டுகளினது ஒலிபொருந்திய தலையுடைய பார்வதியானவள் கிரியின் கிழக்குத்திக்கில் பவளமலைபோன்ற ஒருலிங்கத்தை ஸ்தாபித் துப் பூசித்தாள். அருணசலத்தினிடத்திலே குதிரையிலேறிக் கொண்டுவந்த வச்சிராங்கத பாண்டியன் அக்காலத்தில் தன்னை யடைந்தபாவத்தைத் தீர்க்கத் தென்திக்கில் புழுகணியிறைவரென்று ஒரு லிங்கத்தைப் பூசித்தான். பிரமன்தணியாதபாவங்களை நீக்கிக் கொள்ள அந்த மலையின்மேற்குத் திக்கில் அடியண்ணுமலையானென்று பெயரிட்டு ஒருலிங்கத்தை ஸ்தாபித்துப் பூசைசெய்தான் சூரியனை கிறவன் அருணுசலத்தைத் தாண்டிப்போனதினல் வந்த பாவந்தீரத் தன் பேரிட்டு ஒருலிங்கத்தை ஸ்தாபித்துப் பூசைசெய்தான். அதுவு மல்லாமல் அந்தமலையிலிருக்கிற கோயில்கள் முழுதும் தேவர்கள், நாகலோகத்தார்கள், சித்தர்கள், முனிவர்கள் இவர்களாலே ஸ்தா பித்துப் . பூசை பண்ணப்பட்ட சிவலிங்கங்களை இவ்வளவென்று சொல்லக்கூடாது. பரமசிவ ரூபமான அனேக லிங்கங்கள் அவ் வெல்லையைச்சுற்றி மூன்று காதவழிமட்டும் ஆகாயத்தில் விளங்கும் நட்சத்திரங்கள் போலநெருங்கியிருக்கும். அப்படி யிருக்கிறபோது அந்த ஸ்தலத்தினது பெருமையை என்னல் சொல்லக் கூடுமோ? சிவசுப்பிரமணியர், பார்வதி விநாயகர், இவர்களாலேயே சொல்லக் கூடாமலிருக்கிறபோது என்னல் சொல்லப்படுமோ.

## ஆதித்தன்

ஸ்ரீ அருணுசலமென்னு மலையோடு மற்றமலைகளையும் ஒக்கு மென்று நிந்தைசொன்ன மனிதருடைய வாயிலேபுற்று உண்டாகிப் புகைபுகைந்து புளுக்கள் நெளிந்து புலால் நாற்றம் நாறுகின்ற நீர் சுற்றியெழுந்து மிகவும் இரத்தமாதிரி சொரியும் நிந்தித்த அந்த மனிதர்களைப் பின்பு யமனுடைய ஏவலாய் வந்த தூதர்கள் செக்கில் அனேகதரம் போட்டு அரைத்து எடுப்பார்கள். அவர்களுடைய வாய்களை நெருப்பிற்போட்டுக் காய்ச்சிய கத்தியினலறுப்பார்கள். எங்களாண்டவன் மலையையோ நிந்தி செய்வாயென்று அடித்து நெய்யிலே வேகப்போடுவார்கள், பின்னும், அவர்களை யமதூதர்கள்

பஞ்சாகத்து வைத்து அர்க்கையுருக்கி வாயிலேவிட்டு நஞ்சைக் குடிப்பித்துத் தீமையாகிய நரகிலே தள்ளுவார்கள். அந்நரகமோ வென்றால் பயப்பட்டு இவர்களை தாங்குகிறதற்குச் சகிக்காமல் மிகவும் வருந்தும். இப்படிப்பட்ட துன்பம் மனத்திலே இந்த மலையைக் குறைவாக எண்ணினவர்களுக்கும் உண்டாம்.

ஆசாரியர்களேயும், தாய், தந்தையரையும் பிராணன்வாங்கிய தீயபாவிகள் முதலானவர்கள் வாசஞ்செய்யுங் கொடிய நரகத்திலே இவ்வருணசலத்தை நிந்தித்தவர்களை பேர்ட்டபோது இவர்களை முன்னிருக்கும்பாவிகள் மிகவும் வருத்தப்பட்டு சுவாமியை நிந்தித்த படியினலே நம்மிலும் பாவிகளென்று சொல்லி நம்மோடிவர்கள் சரி யாயிருக்கக்கூடாது தள்ளிவிடுமென்று தங்கள் கண்களைப் பொத்திக் கொள்வார்கள். பிரமாவானவர் இப்படியென்று சனக ரிஷிக்குச் சொல்லிப் பின்னுஞ் சொல்லுவார். நானும் ஏழுலகத்தையுஞ் சாப் பிட்டவிஷ்ணுவுஞ் சேர்ந்த அன்றுமுத லின்றையவரைக்கும் அள விடப்படாத மகிமையுள்ள அருணசலத்தை ஒருவன் ஒரு மலையென் றிகழ்ச்சிசெய்து போய்க குன்றுதலடைந்து தேகங்குறைந்து துக் கப்பட்டான் முன்காலத்திலே யென்று அச்சரிதையைச் சொல்லத் தொடங்கினர். அதாவது,

முன்காலத்திலே சூரியன் பிரகாசங்களை யெல்லாம் தன துள்ளத்தில் வைத்துக்கொண்டு இந்த பூலோகத்தில் ஒப்பற்ற மலை யுருவங்கொண்ட தெய்வீகமாகிய அருணசலத்தை மற்ற மலைகள் போல் நினைத்து ஒரு சக்கரமும் ஏழு குதிரையும் பூண்ட தேரை அந்த அருணசல மலையினுச்சி வழியின் எல்லையாய் நடத்தினன். சூரியன் அந்த மலையினது உச்சியிலே போகிறதற்கு முன்னே மிகுந்த் பிரகாசமான மலைவெடித்து அந்த வுள்ளிடத்தில் நின்று எழுந்து வெப்பங்கொன்று புகைந்துவரத் தோனது திரிபுரமெரித்த பரமசிவனது கையாகிய நெருப்பிலே பொரிந்ததுபோலப் பொரிந்து போய்விட்டது. நடத்தப்பட்ட குதிரைகளோ சீவனில் லாத குதிரைகளானதுகள். அந்த மலையினிடத்தில் நின்றெழுந்த கிரண வெப்பத்தினலே குதிரைகள் ஏழும் கரிகளாகப்போய்க் கொடியையுடைய தேர் கானல்போலத் தோன்றிய வுருவில்லாத் தாய்த் தன்னுடைய பாகனனவன் காலை யிழந்ததுபோலக் கிரணங்க ளெல்லாவற்றையும் தானிழந்து சூரியன் மதிகெட்டிருந்தான். அந்த மலையை வலஞ்செய்துக்கொண்டு மேலாகிய கதியை அடையும் படியாகப் போகாநின்ற பிரமன், அந்தச் சூரியனைப்பார்த்து சொன் ஞர். அதாவது, அருணசலேசுரரை ஒரு மலையென்று நினைத்து அகங்காரத்தினல் நிந்தித்து கீழே விழுந்து கிடக்கின்ற ஆயிரங் கிரணங்களையுடைய சூரியனே! உனக்கு எந்த வகையிலும் ஒரு

காலத்துங் கதிகிடைக்காது. அப்படியிருந்தாலும் ஒரு தொழிலி னலே கிடைக்கலாம். அது யாதெனில், தெளிவுள்ளவருக்கு மெய்மையாகிய அருணாசலத்தை வலஞ் செய்துக்கொண்டு வாவென்று சொல்லித் திரும்பினர். பிரமாவானவர் அனுக்கிரகஞ் செய்தபடியே மகமேருகிரியை முன்னே வலமாக வருகின்ற சூரியன் அருணாசலத்தை வலஞ்செய்துக்கொண்டு வந்தான். அந்தச் சூரிய னுக்கெதிரே வாதித்துச் சத்துருக்களைக் கொல்லுகிற மழுவையேந் திய பரமசிவன் இளமையாகிய ரிஷபவாகனத்திலே கோடி சூரியர் போலத் தோன்றி அனுக்கிரகஞ்செய்து கைலாயத்துக்கு எழுந்தரு ளினர். சித்திரைமுதல் பங்குனியீராகச் சொல்லப்பட்ட பன்னி ரண்டு மாதமும் சூரியன் முன்னே தனக்குண்டான பயத்தினலே அக்கினி சொரூபமாகிய மலையை வலஞ்செய்துக்கொண்டு போவான் அம்மலையினுடைய உச்சியின் மேலும் இடப்புறமாகவும் போகான். அந்தமலைக்குச் சமீபத்தில் வரும்போது ஸ்தோத்திரஞ்செய்து புஷ்ப மாரி பொழிந்து செல்வான்.

## பிரதத்தராஜன்

முற்காலத்தில் ஒருநாள் காசிதேசத்தரசனாகிய பிரதத்தன் என் பவன் மந்திரிகளோடும், சேனைகளோடும் யாத்திரையாகப் பிரயா ணப்பட்டுச் சோழநாட்டுக்குப் போகும்படி திருவண்ணாமலைக்கு வந்து சுவாமியை தரிசிப்பதற்காகக் கோயிலுக்குப்போய் வந்தனஞ் செய்யும்போது அவ்விடத்தில் நாட்டியஞ் செய்திருந்த தாசிப் பெண் களில் ஒருத்தியைப் பார்த்து ஆசைகொண்டு இந்தப் பெண்ணைத் தன் னுடன் கொண்டுபோய் விடுவதற்கு நினைத்தான். அந்த நினைப்பு அவன் கொள்ளுதற்கு முன்னமே தானே அவன் முகமானது குரங்குமுகமாய் விட்டதைக் கண்டு எல்லாரும் நகைத்தார்கள். பின்பு அவ்வரசன் மிகுந்த வருத்தபட்டுத் தன்னுடைய வாகனங்க ளெல்லாவற்றையும், தன்னேடுவந்த பெண்களையும் ஆலயத்திற்குக் காணிக்கையாகக் கொடுத்துவிட்டு சுவாமிக்கு அருமையான பூசை செய்தான். அப்பொழுது பரமசிவத்தின் கிருபையால் குரங்கு முகம்போய் இயல்பான முகத்தை அடைந்து தன் நாட்டுக்குப் போய்ச் சேர்ந்தான்.

## பாவந்தீர்த்தல்

முன்பு ஒருகாலத்தில் பிரமாவினல் சபிக்கப்பட்ட அஷ்டவசுக் கள் அந்தச் சாபம் நிவர்த்தியாகும்படி கங்கைக்கரையில் பரமசிவனை நோக்கித் தவஞ் செய்தபோது, பரமசிவன் வந்து திருவண்ணாமலை யைச் சூழ்ந்த கிழக்குதிக்குத் தொடங்கி எட்டு திக்குகளிலு மிருந்து

தவஞ் செய்தால் உங்களுடைய சாபம் நிவர்த்தியாகும் என்று சொல்ல, அப்படியே அவர்கள் திருவண்ணுமலைக்கு வந்து மலையைச் சூழ்ந்த எட்டு திக்குகளிலுமிருந்து சுவாமியைப் பூசித்து பழையபடி தமது பதவிகளைப் பெற்றுச் சிவகிருபையும் அடைந்தார்கள், அந்த எட்டு வசுக்களும் செய்த தபோ பலத்தினுல் பரமசிவன் எட்டுமுகமாயிருந்ததைப் பார்த்துத் தேவர்கள் பல்லாண்டு கூறினுர்கள்.

ஒரு காலத்தில் தேவேந்திரன் பிரமாவினிடத்திற்கு வந்து எல்லாரும் தேவேந்திர பட்டத்திற்காகத் தவஞ் செய்கிருர்கள். அந்தத் தவத்தை எவ்விதமாயாவது அழிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு போய்விட்டான். அதற்காகப் பிரமா திலோர்த்தமை என்னும் பெண்ணையுண்டாக்கி அவளுடைய அழகைக்கண்டு அவரே இச்சித்தபோது தகப்பனென்று அவர் கருத்துக்கு அவள் இசையாமல் பெண்மானுகி ஓடினுள், பிரமா கலைமானுகித் தொடர்ந்தார். அப்போது அவள் மலையுருவமாகிய அருணுசலேசுரரைக் கொஞ்ச தூரத்திற் கண்டு நீரே தஞ்சமென்று சொல்லி யடைந்தாள். உடனே மலையைக் கீறி அதிலிருந்து பரமசிவன் வேடரூபமாகவும், நாலு வேதங்களும் நாய்களாகவும் தோன்றியதைப் பார்த்த பிரமா பயந்து தன்னுடைய ஆசையை நிவர்த்திசெய்து சுவாமியை வணங்கினுன். அப்போது பரமசிவன் பிரமாவைப் பார்த்து நீ உண்டாக்கின திலோர்த்தமையை நீயே இச்சித்ததினுல் நேரிட்ட பாவம் நீங்கமாட்டாது. ஆகிலும் இந்த மலையைத் தரிசித்தாயாகையால் அந்தப் பாவத்தை நீக்கிவிட்டோம். உன்னிடத்திற்கு போவென்று சொல்லி மறைந்துவிட்டார்.

முன்னெருகாலத்தில் பரமசிவன் திருவிளையாட்டினுற் கற்ப காலம் முடிவுற்று மகத்தாகிய அந்தகாரம் நீங்கியும் சமுத்திரத்திற் றுயிலும், விஷ்ணு உலகத்தை உண்டாக்கும் பொருட்டு பிரமனை சிருஷ்டிக்காமல் நித்திரை செய்துத் தாழ்ந்ததனுலே தீவினையைச் சம்பாதித்துக் கொண்டேனென்று பரமசிவனை நினைக்க அவர் ரிஷப வாகனத்தின்மேற் ருேன்றினுர். விஷ்ணுவானவர் எழுந்து அஞ்சலியஸ்தராய் எனக்கு நித்திரையினுல் வந்த வினையை நீக்கி அருள் செய்யவேண்டுமென, அதற்குப் பரமசிவன் அருணுசலத்திற்குப் போய் பூசை செய்தால் உன்னைவிட்டு வினைபோம் என்று மறைந்தருளினுர். விஷ்ணுவானவர் அப்படியே அவ்வருணுசலத்தைப் பூஜை செய்து, வினையை நீக்கிக்கொண்டார்.

## புளகாதிபன்

நினைத்தபடி வெவ்வேருன உருவங்களை எடுக்கத்தக்கதாக வல்லமையுள்ள புளகாதிபன் என்னும் ஒரு அசுரன் ஒரு புனுகுபூனை

உருவத்தை யடைந்து அருணகிரியின்மேல் உலாவிக்கொண்டு புனு கைச் சிதறியபடியால் சுவாமியினாலே அதிக பலத்தைப் பெற்றுத் தேவர் முதலானவர்களுக்கும் மிகுந்த துஷ்கிர்த்தியஞ் செய்ய ஆரம் பித்தபோது அவர்கள் சுவாமியினிடத்தில் முறையிட்டுக் கொண் டார்கள். பின்பு சுவாமி மிகுந்த கிருபையோடு அந்த அரசனை யழைத்து உன் பிராணனை விட்டுவிடென்று சொல்லியபோது அவன் சுவாமியைப்பார்த்து ஐயனே! புனுகு பூனைகளினது புனுகை உம்முடைய திருமேனியில் ஏற்றுக்கொண்டு அதனால் புனுகணி யிறைவர் என்கிற நாமத்தை நீர் தரித்துக் கொள்ளும்படியான கிருபை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு அவன் உயிரை விட்டான். உடனே அவன் நற்கதி சேரும்படி சுவாமி அனுக் கிரகஞ் செய்தபடியால் முனிவர்களும், தேவர்களும், மனிதர்களும், சுவாமியினது சிரசில் புனுகுகாப்பைச் சாத்தலானார்கள்.

இந்தப் புண்ணிய சரித்திரத்தைப் படித்தவர்களும், கேட்டவர் களும், எழுதினவர்களும் அருணாசலேசருடைய கிருபாகடாக்ஷத்தி னால் இகபர சௌக்கியங்களை யடைவார்கள்.

ஸ்ரீ அருணாசல பராக்கிரமம் என்னும்,

திருவண்ணாமலை பராக்கிரமம்

முற்றுப்பெற்றது.

---

110000

உ

சிவமயம்.

திருவண்ணாமலையில்

திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச்செய்த

## தேவாரப் பதிகம்.

பண் - நட்டபாடை. (முதற்றிருமுறை)

திருச்சிற்றம்பலம்.

உண்ணாமுலையுமையாளொடுமுடனாகியவொருவன்
பெண்ணாகியபெருமான்மலைதிருமாமணிதிகழ
மண்ணார்ந்தனவருவித்திரண்மழலைம்முழவதிரு
மண்ணாமலைதொழுவார்வினைவழுவாவண்ணமறுமே. (1)

தேமாங்கனிகடுவன்கொளவிடுகொம்பொடுதீண்டித்
தூமாமழைதுறுவன்மிசைசிறுநுண்டுளிசிதற

223:38.2113.TV

பியணைணையும்பொழிலண்ணாமலையண்ண
ன்கழல்புனைசேவடிநினைவார்வினையிலரே. (2)

பீலிம்மயிலபெடையோடுறைபொழில்சூழ்கழைமுத்தஞ்
சூலிம்மணிதரைமேனிறைசொரியும்விரிசார
லாலிம்மழைதவழும்பொழிலண்ணாமலையண்ணல்
காலன்வலிதொலைசேவடிதொழுவாரன்புகழே. (3)

உதிரும்மயிரிடுவெண்டலைகலனாவுலகெல்லா
மெதிரும்பலியுணலாகவுமெருதேறுவதல்லான்
முதிருஞ்சடையிளவெண்பிறைமுடிமேல்கொளவடிமே
லதிருங்கழலடிகட்கிடமண்ணாமலையதுவே. (4)

மரவஞ்சிலைதரளம்மிகுமணியுந்துவெள்ளருவி
யரவஞ்செபமுரவம்பொடுமண்ணாமலையண்ண
லுரவஞ்சடையுலவும்புனலுடனாவதுமோரார்
குரவங்கமழ்நறுமென்குழலுமைபுல்குதல்குணமே. (5)

பெருகும்புனலண்ணாமலைபிறைசேர்கடனஞ்சைப்
பருகுந்தனைதுணிவார்பொடியணிவாரதுபருகிக்
கருகும்மிடறுடையார்கமழ்சடையார்கழல்பரவி
யுருகும்மனமுடையார்தமக்குறுநோயடையாவே. (6)

கரிகாலனகுடர்கொள்வனகழுகாடியகாட்டி
னரியாடியனகுவெண்டலையுதையுண்டவையுருள
வெரியாடியவிரைவர்க்கிடமினவண்டிசைமுரல
வரியாடியகண்ணாளொடுபண்ணாமலையதுவே. (7)

ஒளிறாபுலியதளாடையனுமையஞ்சுதல்பொருட்டாற்
பிளிறாகுரன்மதவாரணவதனம்பிடித்துரித்து
வெளிறாபடவிளையாடியவிகிர்தன்னிராவணனை
யளறாபடவடர்த்தானிடமண்ணாமலையதுவே. (8)

விளவார்கனிபடநூறியகடல்வண்ணனும்வேதக்
கிளர்தாமரைமலர்மேலுறைகேடில்புகழோனு
மளவாவணமழலாகியவண்ணாமலையண்ண
றளராமுலைமுறுவல்லுமைதலைவன்னடிசரணே. (9)

வேர்வந்துறமாசூர்தரவெயினின்றுலவ்வாரு
மார்பம்புதைமலிசீவரமறையாவருவாரு
மாரம்பர்தமுறைகொள்ளன்மினண்ணாமலையண்ணல்
கூர்வெண்மழுப்படையானல்கழல்சேர்வதுகுணமே. (10)

வெம்புந்தியகதிரோனொளிவிலகும்விரிசார
லம்புந்திமுவெயிலெய்தவனண்ணாமலையதனைக்
கொம்புந்துவகுயிலாலுவகுளிர்காழியுண்ஞான
சம்பந்ததன்மிழ்வல்லவரடிபேணுதற்றவமே. (11)

திருச்சிற்றம்பலம்.

ஓம்

# கார்த்திகைத் தீபதரிசன விரதமகிமை.

## சுப்பிரமணியர் துதி.

கறங்குதிரைக் கருங்கடலும் காரவுணப் பெருங்கடலும் கலங்கக்கார்வந்
துறங்குசிகைப் பொருப்புங் குரூரப்பொருப்பும் பிளப்பமறையுணர்ந்தோராற்ற
மறங்குலவு மகத்தழலு மவுணமடவார் வயிற்றினழலுமூள
மறங்குலவுவேலெடுத்த குமரவேல் சேவடிகள் வணக்கஞ் செய்வாம்.

ஒருகாலத்தில் மகாவிஷ்ணுவுக்கும் பிரமதேவனுக்கும் பிரமவாதம் உண்டானதால் அதைத்தீர்க்கும் பொருட்டாகச் சிவபெருமான் அக்கினிமலை வடிவாய் அவர்கள் மத்தியில் நின்று அக்கலகத்தைக் திர்த்தருளினார். பின்பு அவர்கள் வேண்டுதலினாலே அவரொரு சிறிய மலையுருக்கொள்ள அதைப் பார்த்த பிரமதேவனும் விஷ்ணுவும் மகிழ்ச்சியோடவரை நோக்கிச் சுவாமி! மலையினுச்சியில் ஒரு ஜோதி யெந்நாளும் தெரியும்படிக்குத் தயவுசெய்ய வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதற்குச் சிவபெருமானானவர் கார்த்திகை மாதத்தில் வரும் கார்த்திகை நட்சத்திரத்தில் இம்மலையினுச்சியின் கண் ஒரு ஜோதி காண்பிப்போம். அச்ஜோதியைத் தரிசித்தவர்கள் தரித்திரமும், வியாதியும், நீங்கி இஷ்டகாமியங்களைப் பெற்று வாழ்வார்கள். இவையல்லாமல், அரசர்களும் தவசிகளும் தரிசிப்பார்களாகில் இடையூறின்றி இருப்பார்கள். அன்றியும் இதைத் தொழுதவர்களுக்கும் தரிசித்தவர்களுக்கும் அவர்மட்டு மல்லாமல் அவர்களுடைய கோத்திரத்தில் இருபத்தொரு தலைமுறைக்கும் மோக்ஷங்கொடுப்போ மென்று அருணாசலபதி திருவாய்மலர்ந்தருளினார். அதேபிரகாரம் அம்மலையின்மேல், ஜோதிதரிசன பாவனையாக இப்போது திபதரிசன மாகின்றபடியால் அத்தினத்தில் இந்திரதீர்த்த முதலிய தீர்த்தமாடிக் கிரிவலம்வந்து திபதரிசனஞ் செய்து துதிப்பவர் அளவில்லாத சம்பத்தையும் மோக்ஷத்தையுமடைவர்.

ஓம் தத் ஸத்

---

ரத்தனம் பிரஸ், சென்னை.